தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 167 • 16.12.2018



பலம் சேர்க்கும் அம்மன் வழிபாடு!



## இலங்கை அரசியலில் அடுத்தது என்ன?

'மஹிந்த வாய்மூல உத்தரவாதமும் தரவில்லை
ரணில் எழுத்துமூல உத்தரவாதம் தந்தார்'
-சிறிதரன் நேர்காணல்



## மரணம் துரத்த ஓடிக் கொண்டிருக்கிறேன்

## புலிகள் தோண்டிய புதையல்

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட
YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்




இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328

திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய
விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.


STAR LINK
NET CAFE & MULTI SHOP
அனைத்து விதமான போன்களை பெற்றுக்கொள்ளவும் மற்றும் போன்களுக்கான றிலோட் களை செய்து கொள்ளவும் மற்றும் அழகு சாதன பொருட்களை பெற்றிடவும் உங்கள் நினைவுக்கு... STAR Link
இத்துடன் உங்கள் பிரயாண வசதிக்கு சொகுசு வாகனங்களை வாடகைக்கு பெற்றிட...
சாமிதா சொகுசு வான்சேவை
அனைத்து தொடர்புகளுக்கும்
A35 வீதி, உடையார்கட்டு
0771294991, 077951293


Suthan Hardware & Multi Trade Center
சுதன் பல்பொருள்விற்பனை நிலையம்
கட்டிடத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் ஹாட்வெயார் பொருட்கள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.
விலாசம்
தேவி புரம் சந்தி
புதுக்குடியிருப்பு
உரிமையாளர்
P.இராஜவர்மன்
T.P: 077-4631579


TOPAZ Mall (Pvt) Ltd.
TOPAZ
No.01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீரியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள
மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com



# “மஹிந்த வாய்மூல உறுதியும் தர தயாரில்லை: ரணில் எழுத்துமூலம் உறுதியளிக்கிறார்”

## சிவஞானம் சிறிதரன் நேர்காணல்

எஸ்.நிதர்ஷன்

தெற்கு அரசியல் குழப்பங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன முடிவெடுக்கிறது? எப்படி இந்த சூழலை பயன்படுத்திக் கொள்கிறது? போன்ற கேள்விகளுடன் மக்கள் அரசியல் அரங்கத்தை நுணுக்கமாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் அண்மைய முடிவுகள், அதுதொடர்பாக தனது நிலைப்பாடுகள் பற்றியெல்லாம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுடன் பேசினோம். பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் மனம் விட்டு பேசினார். அவரது முழுமையான நேர்காணல் இனி.

**தீபம்: தெற்கில் திடீரென ஏனிந்த அரசியல் குழப்பம்?**

**சிறிதரன்:** இலங்கையில் இன்றைக்கிருக்கின்ற சூழ் நிலையில் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிங்களத் தலைவர் தங்களுக்கு இடையில் அதிகாரப் போட்டிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஜனநாயகத்தை மதிக்காத காட்டுச் சட்டங்களை கையிலெடுக்கிற ஒரு அரசியல் நடவடிக்கையைத் தான் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

யாருமே ஏற்றுக் கொள்ள முடியாத தவறான பாதையில் இலங்கையினுடைய அரசியல் கொண்டு செல்லப்படுகின்றது. நாடு என்ற அடிப்படையில் பார்த்தால் இலங்கை மக்களுக்கு அது மிக மிக ஆபத்தானது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அரசியல் பிரச்சனையும் இதிலிருந்து விலகிச் செல்லுகின்ற சந்தரப்பம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆகவே சிங்கள, தமிழ் மக்களுடைய அரசியல் தேவைகளிலிருந்து நீண்ட தூரம் தள்ளிச் செல்வதாகவே இன்றைய அரசியல் கள நிலவரம் காணப்படுகின்றது.

**தீபம்: எந்த தரப்பை ஆதரிப்பதென்ற முடிவிற்கு தமிழ் தேசிய, கூட்டமைப்பு எப்படி வந்தது?**

**சிறிதரன்:** இது தொடர்பில் கட்சிக்குள் பல தடவைகள் நாங்கள் கூடி ஆராய்ந்திருக்கின்றோம். பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் அடிப்படையில் மகிந்த ராஜபக்சவிடம் நாங்கள் எதனையும் பெற முடியவில்லை. அவர் எழுத்து மூலமல்ல, வாய்மூல உறுதிமொழிகளை தருவதற்கும் தயாராக இருக்கவில்லை. ரணில் தரப்பினர்கள் எல்லாம் செய்கிறோம், தருகிறோம் என்று சொல்லுவார்கள். ஆனால் எதனையும் அவர்களும் தரமாட்டார்கள். இது தான் யதார்த்தமானது. மகிந்த ராஜபக்ச நேரடியாக எதனையும் தரமாட்டார் என்று சொல்லுகின்றார். இவர்கள் தருவோம் செய்வோம் என்று கூறுவார்கள். ஆனால் எதனையும் தரவோ செய்யவோ மாட்டார்கள்.

ஆனால் எங்களுக்கான மாற்றுவழிகள் இல்லை. நாங்கள் மகிந்த ராஜபக்சவுக்கான ஆதரவை வழங்கி அவரைக் களத்தில் நிறுத்துவதற்காக வாக்களிக்க முடியாது. நாங்கள் நடுநிலைமை வகித்தாலும் அது மகிந்த ராஜபக்சவிற்கு வாக்களிப்பது போலதொரு சூழல் இருப்பதால் அவர் வெற்றிபெறுவார். அவருக்கு எதிராக வாக்களிப்பதைத் தவிர வேறு வழிமுறை எங்களுக்கு கிடைக்கவில்லை.

**தீபம்: இது கூட்டமைப்பின் முடிவு. தனிப்பட்ட சிறிதரன் இந்த முடிவில் உடன்பாடில்லாமல் இருக்கிறார் என்று செய்தி வருகிறதே?**

**சிறிதரன்:** இந்த விடயங்கள் தொடர்பில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட விவாதித்த போதுநான் என்னுடைய கருத்துக்களை முன்வைத்திருந்தேன். அதற்கு நான் பல காரணங்களையும் சொல்லியிருந்தேன். கடந்த காலங்களில் மகிந்த மற்றும் ரணில் தரப்பினர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் வெளிப்படுத்தியிருந்தேன்.

குறிப்பாக இனப்படுகொலையைச் செய்வதில் மகிந்த ராஜபக்ச எவ்வாறு பங்காற்றியிருந்தாரோ அது போல தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் சமாதானம் பேசிக் கொண்டே கருணாவைப் பிரித்தெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

ஆகவே ஒருவர் நேரடியாக யுத்தம் நடாத்தி எங்களை அழித்தார். மற்றவர் எங்களோடு பேசிக் கொண்டு நல்லவராகக் காட்டிக் கொண்டு எங்களை அழித்தார். ஏற்கனவே சந்திரிகாவால் பிராந்தியங்களுக்கான கூட்டு என்கின்ற அரசியல் பொதி கொண்டு வரப்படுகின்ற போது அந்தத் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் கிழித்து எரித்தவர்கள் ஐ.தே.கவை சார்ந்தவர்களே. அப்போது ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பார்வையாளராக இருந்தார். ஆகவே இலங்கையில் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஒரு பகுதியினர் முயற்சி எடுத்தால் மற்றப் பகுதியினர் அதனைத் தடுப்பார்கள். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபு ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்ட பொழுது அப்பொழுது இருந்த் நாடாளுமன்றத்தை சந்திரிக்கா கலைத்தார்.

ஆகவே நாங்கள் யாரை எந்த நம்பிக்கையுடன் ஆதரிக்கலாம்? யாருக்கான ஆதரவை வழங்கலாம் என்கிற கேள்வி எங்களிடம் இருக்கிறது. யாழ்ப்பாண நூலகத்தை எரித்ததில் இருந்து 1983 ஆம் ஆண்டு இனப்படுகொலைக்கான அத்திவாரங்களை இட்டது ஐ.தே.க. தொடர்ச்சியாக 1994 களில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை இனப்படுகொலைகளுக்கு காரணமாக இருந்தது சுதந்திக் கட்சி.

இந்த இரண்டு கட்சிகளுமே மாறி மாறி ஆட்சி அதிகாரத்திற்கு வந்து தமிழ்களுடைய இனப்பரம்பல் அடையாளங்களை அளிப்பதிலும் கூடிய பங்களிப்பைச் செய்தவர்கள். ஆகவே இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் கடுமையான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தோம். அதிலே வாதப் பிரதிவாதங்கள் வந்தது. கருத்து மோதல்கள் வந்தது. அது ஒரு கட்சிக்குள்ளே இருக்கின்ற உள்ளக ஜனநாயகத்தின் அடிப்படையில் எங்களால் பேசப்பட்டது.

அதிலே 14பேர் ஒன்று கூடியிருக்கின்ற பொழுது 13 பேர் ஒன்றாக இருந்தால் நான் ஒருவர் தனியாக ஒரு முடிவுக்கு வர முடியாது. அப்படி ஒரு முடிவிற்கு வருவதாக இருந்தால் நான் கட்சியை விட்டு விலகி வெளியில் வர் வேண்டும். ஆகையினால் அவ்வாறான ஒரு முடிவிற்கு நான் போக விரும்பவில்லை. அதனால் 13 பேரும் எடுக்கின்ற முடிவிற்கு செவிசாய்க்கின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டேன்.

**தீபம்: உங்கள் அப்பிராயத்தை கட்சிக்குள் எப்படி வெளிப்படுத்தினீர்கள்? கட்சிக்குள் என்ன நடந்தது?**

**சிறிதரன்:** என்னுடைய கருத்துக்களை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தேன். கட்சிக்குள் அது பற்றி ஆராயப்பட்டது. அப்பொழுது கட்சியின் தலைவர், உங்களுடைய ஆதங்கம் புரிகின்றது என்று குறிப்பிட்டிருந்தார். எங்களுடைய மக்கள் சார்பில், மக்களுடைய பிரச்சனைகளை, என்னோடு மக்கள் பேசி விடயங்களைத் தான் முன்வைக்கின்றேன் என்று சொன்னேன். அதனை அவர்கள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்...

3-ம் பக்க தொடர்ச்சி...

ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்ற காலச் சூழல் அரசியல்ச் சூழல் என்று பல காரணங்களை முன்வைத்து ஒக்ரோபர் 26 ஆம் திகதிக்கு முற்பட்ட காலத்தில் இருந்த அரசுக்கான ஆதரவை வழங்குவதற்கான முயற்சிகளில் எல்லோரும் ஒன்றாக நின்றதால் அதிலிருந்து ஒருவனாக விலகிச் செல்ல விரும்பவில்லை.

அப்ப விலகிச் சென்றால் மகிந்த ராஜபக்சவிடம் பணம் வாங்கிக் கொண்டு தான் நீங்கள் இப்பிடி நடக்கின்றீர்கள் என்று நானே ஊடகவியலாளர்களை அழைத்துக் குறிப்பிடுவேன் என்று சம்மந்தன் ஐயாவே நேரடியாகக் குறிப்பிட்டிருந்தார். அதனை விட மக்களும் அப்படித் தான் நினைப்பார்கள். அந்த நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்த அளவில் தான் 13 பேரும் ஒன்றாக நிற்க, நான் ஒருவன் தனியாக நிற்க விரும்பவில்லை. அப்படி நிற்பதாக இருந்தால் தற்போதைய சூழ்நிலையில் பதவியை இராஜனாமா செய்து வெளியிலே வர வேண்டும். அப்பிடி வந்தாலும் கூட, அதற்கும் காசு வாங்கித் தான் வெளியில் வந்தார் என்ற செய்தி வரும். ஆகவே 13 பேருடைய முடிவிற்குச் சேர்ந்து போக வேண்டிய ஒருவனாக இருந்தேன்.

**தமிழீழம் மலர்ந்து விட்டதாக சிங்கள மக்கள் மத்தியில் கூறி இனவாத நெருப்பிலே தங்களுடைய அரசியலைத் தக்கவைத்துக் கொண்டு செல்கின்ற ஒரு உச்சமான மனநோயாளி தான் விமல் வீரவன்ச**

**தீபம்: ஐ.தே.முன்னணியை கூட்டமைப்பு ஆதரிப்பதாக கூட்டமைப்பு எடுத்த முடிவு தொடர்பாக பலவித கருத்துக்கள் உள்ளன. மஹிந்த ராஜபக்சவிடம் முன்வைத்த நிபந்தனைகளை போல, ரணில் விக்கிரமசிங்கவிடம் நிபந்தனைகள் விதிக்கவில்லை, ஐ.தே.முன்னணியை ஆதரிப்பதென முன்னரே திட்டமிட்டதன் அடிப்படையில் கூட்டமைப்பு நடந்து கொண்டதாக ஒரு விமர்சனம் உள்ளதே?**

**சிறிதரன்:** இது தொடர்பில் சம்மந்தன் அல்லது சுமந்திரனிடம் தான் நீங்கள் கேட்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணிக்காகவே கூட்டமைப்பு செயற்பட்டதா இல்லையா என்பதற்கப்பால் என்னைப் பொறுத்தவரையில் மகிந்த ராஜபக்சவிடம் கேட்டுக் கொண்ட அதே கோரிக்கைளைத் தான் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கேட்டகப்பட்டது. நான் கூட சில விடயங்களைப் பகிரங்கமாகவே கூறியிருந்தேன்.

ஜனாதிபதியும் அவர்கள் தான், பிரதமரும் அவர்கள் தான். ஆகையினால் அதிகாரத்திற்கு வந்து ஒரு மாதகாலமாகியிருக்கின்ற நிலையில் அவர்கள் நினைத்திருந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்கலாம். அதனை நாமல் ராஜபக்சவிடம் நான் கேட்டிருந்தேன். அவ்வாறு விடுதலை செய்திருந்தால் தமிழ் மக்கள் கூட சிலவேளை எங்களிடம் நீங்கள் மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவை வழங்குங்கள் என்று கூறக் கூடிய வாய்ப்புக்கள் வந்திருக்கும்.

ஆனால் அப்படி செய்ய அவர்கள் தயாராக இருக்கவில்லை. எந்தவொரு சின்ன விடயத்திலும் மகிந்த ராஜபக்ச நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. அதற்கு காரணம் அவர் சிங்கள இனவாத வாக்காளர்களுடைய வாக்குகளைக் கவருவதையே நோக்கமாக கொண்டுள்ளார். அதனால் மகிந்த ராஜபக்சவுடைய எண்ணமும் சிந்தனையும் நேர்மனப்பாங்கானதாக இல்லை. நல்லெண்ண கருத்துக்களை முன்வைப்பதற்குக் கூட அவர் தயாராக இருக்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க எல்லாவற்றிகும் சம்மதம் தெரிவிக்கிறார். எழுத்தில் தருவதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்கள். அதனால் தான் அந்த முடிவிற்கு வர வேண்டிய சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம் என்று நான் நினைக்கின்றேன்.

**தீபம்: நிறைவேற்றதிகாரம் வேறொரு இடத்தில் இருக்கும்போது, நாடாளுமன்ற அதிகாரத்தால் தரப்படும் வாக்குறுதிகளை எவ்வளவு தூரம் சாத்திப்படுத்த முடியும்?**

**சிறிதரன்:** ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வருகின்ற பொழுது 12 விடயங்களுக்கான வாக்குறுதிகளை அவர் எழுத்து மூலமாகத் தந்திருந்தார். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. இவ்வாறான நிலையில் இப்பொழுதும் அவர்கள் எழுத்து மூலமாக வாக்குறுதி வழங்கும் விடயங்களைச் செய்வார்களா என்ற நம்பிக்கையில்லை. ஆனால் அவர் மட்டும் எழுத்திலே தருகின்றார் மற்றவர் எதனையும் தர மறுக்கின்றார் என்ற காரணத்தின் நிமித்தம் எங்களுடைய கட்சியில் அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

13 பேர் ஒன்றாக ஒரு முடிவை எடுக்கின்ற பொழுது நான் ஒருவர் மட்டும் தனியாக நிற்பதை விட என்னுடைய கருத்தையும் பதிவு செய்து விட்டு என்னுடைய பங்கையும் சேர்ந்து செலுத்தியிருக்கின்றேன்.

**தீபம்: இப்போது நடுநிலை வகிப்பதென்பது, மஹிந்த ராஜபக்சவிற்கான ஆதரவென்பதை போன்ற அபிப்பிராயமும் உள்ளதே?**

**சிறிதரன்:** நிச்சயமாக அது உண்மை தான். நாங்கள் மகிந்த ராஜபக்சவிற்கு நேரடியாக வாக்களிக்க முடியாது. நடுநிலை வகித்தால் மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவளிப்பதற்குச் சமனானது. ஏனெனில் மகிந்த ராஜபக்சவும் தனக்கு ஆதரவை வழங்காவிட்டாலும் பரவாயில்லை நடுநிலை வகிக்குமாறே எங்களிடம் கேட்கின்றார். அவ்வாறு நாங்கள் செய்தால் நிச்சயம் அவர் வெல்லுவார். ஆகவே நாங்கள் நடுநிலை வகிக்க முடியாது. அதன்ால் தான் அவருக்கு எதிராகவே வாக்களிக்கிறோம்.

ஐ.தே.கவிற்கு ஆதரவாக வாக்களித்தால் தான் அவர்கள் ஆட்சி அமைக்கலாம். அவ்வாறு வாக்களிப்பதானால் எழுத்து மூலமான வாக்குறுதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே எங்களுடைய வாதம். அதனைச் செய்கிறார்களா இல்லையா என்பதற்கப்பால் அதனைத் தருமாறு கேட்கின்றோம். இதனை மகிந்தவிடம் கேட்டோம் தரவில்லை. இவர்கள் தருவதாக கூறியுள்ளனர்.

**தீபம்: ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டமைப்பு இரகசிய உடன்பாடுகளைச் செய்துள்ளது, கூட்டமைப்பு தமிழீழத்தை பெற்றுக் கொள்ளப் போகிறதென விமல் வீரவன்ச போன்றோர் கூறுகின்றனரே?**

**சிறிதரன்:** பன்றிக்கு கனவிலே என்னவோ திண்பது போன்ற ஞாபகம் போன்று விமல் வீரவன்ச போன்ற சிங்கள மனநோயாளிகளுக்கு எப்போதும் அதே எண்ணம் தான். தமிழீழம் மலர்ந்து விட்டதாக சிங்கள மக்கள் மத்தியில் கூறி இனவாத நெருப்பிலே தங்களுடைய அரசியலைத் தக்கவைத்துக் கொண்டு செல்கின்ற ஒரு உச்சமான மனநோயாளி தான் விமல் வீரவன்ச. ஆகவே அவர் போன்றவர்களுக்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்பது எங்களுக்குத் தேவையான ஒன்றல்ல.

எங்களைப் பொறுத்தவரையில் இரகசிய ஒப்பந்தம் தேவையில்லை. நாங்கள் பரகசியமாகத் தானே எழுத்து மூலம் கேட்கின்றோம். அது வெளிப்படையானது. பரகசியமானது. விமல் வீரவன்ச போன்றவர்களுக்கு கனவிலும் கூட தமிழ் மக்களுக்கு எதிராக என்ன செய்யலாம் என்ற எண்ணமும், எப்படி அழிக்கலாம், எப்படி படுகொலை செய்யலாம் என்கின்ற எண்ணம்தான்.

**தீபம்: வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி புதிய கட்சியொன்றை ஆரம்பித்திருக்கிறாரே?**

**சிறிதரன்:** கட்சி ஆரம்பிப்பதற்கு அவருக்கு ஜனநாயக உரிமை இருக்கிறது. அவர் முன்னாள் நீதியரசர். அவர் தன்னுடைய பலம் மற்றும் பலவீனங்களைச் சரியாகக் கணக்குப் போட்டிருப்பார். ஆகவே தனக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையின் அடிப்படையில் கட்சியைத் தொடங்கியிருப்பது அவருடைய சொந்த விருப்பம்.



**தீபம்: அவர் தன்னுடைய கட்சியுடன் ஏனைய கட்சிகளையும் இணைத்து புதிய கூட்டொன்றை உருவாக்கினால் அது கூட்டமைப்பிற்கு எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தும்?**

**சிறிதரன்:** கூட்டமைப்பிற்கு எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது. மக்கள் தங்களுக்கு விருப்பமான நல்ல தலைவர்களைத் தெரிவு செய்வார்கள். அதனைத் தானே 2015 நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி, 2018 ஆம் ஆண்டு உள்ளுராட்சி சபைத் தேர்தலிலும் சரி நீங்கள் கட்சிகளை விடுத்து நபர்களுக்கு வாக்களியுங்கள் என்று முதலமைச்சரே குறிப்பிட்டிருந்தார். ஆகவே மக்கள் தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களித்து தலைவர்களைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அவர் கட்சி ஆரம்பிக்கிறதாலோ, அல்லது அவருடைய கூட்டணயாலே, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எந்தத் தாக்கமும் ஏற்படாது. கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அல்லது கூட்டமைப்பு மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகளில் எந்த இடைஞ்சல்களும் இல்லை.



# சமூக சேவைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வரும் சர்வோதயத்தின் 60 ஆண்டுப் பயணம்

மருதமுனை
றாசிக் நபாயிஸ்

1958ஆம் ஆண்டில் கொழும்பு நாலந்தா கல்லூரியில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களை கற்பித்து கொண்டிருந்த ஆசிரியரான ஏ.ரி.ஆரியரத்ன அவர்களின் வழிகாட்டலில் அக்கல்லூரியின் ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்ட ஒரு சிறு குழு எவருடைய கவனத்துக்கும் உள்ளாகாமல் இருந்த குருணாகல் மாவட்டத்தில் கணத்தொழுவ என்ற கிராமத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், சாரணர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பங்குபற்றுதலோடு சிரமதான முகாம் ஒன்று 1958 டிசம்பர் மாதம் நடைபெற்றது. முகாம்

நடாத்தேரிய அதேநேரத்தில் அது ஒருமாபெரும் இயக்கத்தின் ஆரம்பமாக அமைந்தது.

மகாத்மா காந்தியின் தத்துவத்தையும், பௌத்த தர்மத்தின் போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு சமாதானம், அபிவிருத்தி, ஆன்மீக எழுச்சி என்பவற்றுக்காக செயற்படும் மக்கள் இயக்கமாக சர்வோதயம் உருவாக்கப்பட்டுள்ளது. "சர்வோதயம்" என்பதன் அர்த்தம் ஒரு தனி நபரினதும் சமூகத்தினதும் ஆன்மீக எழுச்சிக்காகவும், சட்ட எழுச்சிக்காகவும் உழைப்பு, அறிவு, வளங்கள் ஆகியவற்றை பகிர்ந்து பயன்படுத்துவது என்பதாகும்.

இலங்கையில் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிராமிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக மனிதர்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தியை உருவாக்குது சர்வோதயத்தின் முக்கிய பணியாக இருந்தது. மனிதர்கள் மத்தியில் மற்றவர்கள் மீது தங்கி வாழும் மனநிலைக்கு பதிலாக தமது வாழ்க்கையை தாமே கட்டியெழுப்பிக் கொள்ளும் பொறுப்பை வகிப்பதற்கு உரிய ஆற்றலையும், ஆளுமையையும் பெற்றுக் கொடுக்க சர்வோதயம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

சர்வோதய இயக்கத்தின் ஆரம்பத்தில் சமூக சேவைகளில் ஈடுபடுதலும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஒதுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற மிகவும் கஷ்ட கிராமங்களை தெரிவு செய்து அம்மக்களின் நம்பிக்கை, மனத்திடம் மற்றும் மனித நேயத்தை கட்டியெழுப்புதல் அக்கிராமத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பினை வழங்குதல் என்பனவாகும். இதன் முதற்கட்டமாக முதல் முகாம் முடிவுற்று மூன்று வருட காலத்தின் பிறகு இந்த சமூக

சேவையாளர்கள் அநுராதபுரத்தில் மஹமேவுனாடத்தில் ஒன்று கூடினர். அங்கே கடந்த கால நிகழ்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடினர். இதன் போதே முதன் முதலாக "சர்வோதய சிரமதான சங்கம்" என்ற பெயர் உபயோகிக்கப்பட்டது. அத்தோடு மருதானையில் "தெல்கஹட" என்னுமிடத்தில் சர்வோதயத்தின் செயல்மிக்க காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது

1972இல் 16 குறிப்பிடப்படுகின்ற பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாகி மாற்றமடைந்து மொரட்டுவை ராவதாவத்த வீதியில் மென் மெதுர என்னும் பெயர் பூண்டு தமது தீராததாகமான சமூக சேவையினை துரித கதியிலே மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டது. இரண்டாவது காலப்பகுதியிலேயே கல்வி மற்றும் பொது வசதிகளில் தன்னுடைய பார்வையைத் திருப்பியது அதிலே குறிப்பிட்டு சொல்லும் படியாக சிறப்பான பணியை மேற்கொண்டமை மிகவும் சிறப்புக்குரிய விடயமாகும். சிரமதானத்தின் மூலமாக சமுதாய கல்வி, ஒற்றுமை, பங்குபற்றுதல், தெளிவான இலக்கு, தலைமைத்துவம் என்பன கட்டியெழுப்பப்பட்டது.

ஆரம்பகாலம் தொடக்கம் தேசிய சமாதானம் தொடர்பான தெளிவான பார்வையில் இருந்த சர்வோதயம் ஆனது இன, மத, பேதமற்ற நோக்கை சமூகத்தை கட்டியெழுப்புவதன் நோக்காக கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற கிராமங்களின் அபிவிருத்திக்காக தெற்கிலிருந்து சிங்கள சகோதரர்களை அழைத்து அதற்கு வழிசமைத்தது. இதன் மூலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கையையும், புரிந்துணர்வையும்

கட்டியெழுப்புவதற்கான பின்புலம் உருப்பெற்றது. அதனூடாக அவர்களிடம் காணப்படுகின்ற பிரச்சினைகள், கருத்துக்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதன் மூலம் தீர்வு காணலாம். ஒன்றுபட்டு தீர்வு காணும் பொருட்டு 1978ம் ஆண்டு சர்வோதய சாந்தி சேனா இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வகையில் தேசிய மட்டத்தில் சமாதானம் தொடர்பான தெளிவான பாதை திசை திருப்புவதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல பிரமாண்டமான வேலைத் திட்டங்களை நிர்மாணித்து செயல்படுத்தியது. அதனூடாக சமாதானம் தொடர்பாக மக்களை

கைகோர்க்க வைத்து மக்களுக்கு நல்லது செய்வதினை சர்வோதயம் மேற்கொள்கின்றது. இதற்காக சமாதன தியானம், சமாதான பாதயாத்திரை, மத தலைவர்களின் மாநாடு என்பன குறிப்பிடத்தக்கதாகும். எப்போதும் இனங்களுக்கிடையோ அல்லது மதங்களுக்கு இடையே முரண்பாடு ஏற்படும் போது அதனை சீர்படுத்துவதற்காகவும் பாதிக்கப்பட்டோரின் நலனைப் பாதுகாத்தலுமே சர்வோதயத்தின் பணியில் சிறப்பிடத்தைப் பெற்று கொண்ட பணியாகும்.

சர்வோதயத்தின் அர்ப்பணிப்பு பூரணமான சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாகும். கல்வி கலசாரம், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடைவதை இதன் முக்கிய அம்சம் ஆகும்.

முழுமையான மனதோடு பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களை சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து தெளிவான ஒரு அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் சமூகசேவைகள், பொருளாதாரம் வகிக்கும் பங்கு சுகாதார சேவைகள், பெண்கள், சிறுவர் பாதுகாப்பு என்பவற்றில் சிறந்த பங்கினை வகிக்கிறது. இந்த சேவைக்காக தேசிய, சர்வதேச ரீதியில் பல விருதுகளை இதன் ஸ்தாபகர் எ.ரி.ஆரியரத்னவும் அவரது சேவையாளர்களும் பெற்றுக்கொண்டார்கள் அதன் மூலம்

கிடைக்கப் பெற்ற பணத்தைச முதாயத்திற்காவே செலவு செய்கின்றார்கள்.

அதன் மூலம் மக்கள் கைகளுக்கு அதிகாரத்தை வழங்க கூடிய புதிய அரசியல் முறைமை உருவாக்குவதும் அதன் மூலம் சுயமாக முடிவெடுக்கக் கூடிய மக்களாக மாற்றுவதும் கிராமப்புறங்களில் சுயராஜ்யம் உருவாக்குவதன் மூலம் கிராமங்களின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் விட்டு ஆயிரம் கிராமங்கள் உருவாக்கி நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் அடித்தளத்தை அமைத்து வருகிறது.

இலங்கையில் 26 மாவட்ட நிலையங்களும் 3000 கிராம மட்ட அமைப்புக்களும் கொண்டமைத்து காணப்படும் சர்வோதயம் தேச உதய பிரிவு, அனர்த்த முகாமைத்துவம் பிரிவு, முன்பள்ளி பருவ அபிவிருத்தி பிரிவு, கிராமிய தொழிற்பயிற்சி பிரிவு, மரவேலை மற்றும் ஏற்றுமதிப் பிரிவு, சமுதாய சுகாதார பிரிவு, உயர் கல்வி கற்றல் நிறுவன பிரிவு, சர்வோதய சிரமதான பிரிவு, சர்வோதய தலைமையக வசதிகள் பிரிவு, சர்வதேச பிரிவு என 09 பிரிவுகளை கொண்டமைந்து காணப்படும் சர்வோதயத்தின் தற்போதைய தலைவராக கலாநிதி எ.ரி.ஆரியரத்னவின் மகன் டாக்டர் வின்யா ஆரியரத்னா காணப்படுகிறார்.

இவ்வமைப்பின் 60வது ஆண்டு (வைர) நிறைவு விழா 07ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) கலாநிதி எ.ரி.ஆரியரத்ன முன்னிலையில்

கொழும்பு "நெலும் பொக்குன" மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு பிரதம அதிதியாக இந்தியவின் காந்திய கற்கை ஆய்வுகள் பேரவைத் தலைவர் நீலகண்ட ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டிருந்தார்.



# 'பப்பு' முதல் பாஸ் வரை!

கடந்த 16ம் திகதியோடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பேற்று ஒரு ஆண்டு நிறைவடையந்தது. அதற்கு ஐந்து நாள் முன்னதாக, இந்தியாவின் முக்கியமான ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வந்தன. தொடர் தோல்விகளை சந்தித்து வந்த காங்கிரஸிற்கு அந்த முடிவுகள் புது இரத்தத்தை பாய்ச்ச, மோடி என்ற பிரமாண்ட "பிராண்ட் நேம்" முதன்முறையான பேரிடி வாங்கியது.

முள் கிரீடத்தோடுதான் காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பேற்றார். ஏனென்றால், பாஜக ஆட்சிக்கு வந்த பின் நடந்த மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தல்கள் பெரும்பாலானவற்றில் காங்கிரஸ் கட்சி தான் தக்க வைத்திருந்த மாநிலங்கள் அனைத்தையும் இழந்திருந்தது.

பஞ்சாப், புதுச்சேரி, மிசோரம் தவிர காங்கிரஸ் கட்சி எங்கும் ஆட்சியில் இல்லாத கடினமான சூழலில்தான் காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பேற்றார். 'காங்கிரஸ் முக்த் பாரத்'(காங்கிரஸ் இல்லாத இந்தியா) என்ற கடுமையான விமர்சனத்தை பாஜகவிடம் இருந்து காங்கிரஸ் கட்சி எதிர்கொண்டது.

இமாச்சலப் பிரதேச தோல்வியோடு தலைவராக பொறுப்பேற்ற ராகுல் காந்தி நாட்டின் மிகப் பழமையான கட்சி(ஜிஓபி) என்று அழைக்கப்படும் காங்கிரஸ் கட்சியை எவ்வாறு ராகுல் வழிநடத்தப்போகிறார்? என்ற கேள்வி எழுந்தது.

அனுபவம் இல்லாதவர், சிறுபிள்ளை, 'பப்பு' என்றெல்லாம் பாஜக தலைவர்களின் ஏளனப் பேச்சுக்கும், கிண்டலுக்கும் ராகுல்



ஆளானார். ராகுல் காந்தியின் ஆளுமை மீது மிகப்பெரிய சந்தேகம் பதியவைக்கப்பட்டது.

ஆனால், கடந்த ஓர் ஆண்டில் தன் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள், பகடிகள், தரம்தாழ்ந்த பேச்சுகள் அனைத்துக்கும் தனது நாகரிகமான செயல்பாடுகள், கட்சியைக் கட்டுக்கோப்பாக வழிநடத்தியது, குறிப்பிடத் தகுந்த வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்து, எதிர்க்கட்சிகள் மீதான கூர்மையான விமர்சனங்களை முன்வைத்தது ஆகியவற்றின் மூலம் ராகுல் பதிலடி கொடுத்து இருக்கிறார் என்றே கூறலாம்.

கடந்த ஓர் ஆண்டில் சட்டப் பேரவைத் இடைத்தேர்தல்கள், சட்டப் பேரவை தேர்தல், நாடாளுமன்ற இடைத்தேர்தல் எனப் பலவற்றை ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி சந்தித்துள்ளது.

இதில் குறிப்பாக ராஜஸ்தானில் கடந்த ஜனவரி மாதம் ஆல்வார், அஜ்மரில் நடந்த மக்களவை இடைத்தேர்தலில் பாஜகவிடம் இருந்து வெற்றியைப் பறித்தது காங்கிரஸ் கட்சி. இதுதான் ராகுல் காந்தி தலைமைக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

அதன்பின் நடந்த மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா சட்டப்பேரவை தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி மேகாலயா தவிர மற்ற இரு மாநிலங்களில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறவில்லை. மேகாலயா மாநிலத்தில் தனிப் பெரும்பான்மையை காங்கிரஸ் பெற்றபோதிலும் பாஜகவின் சில அரசியல் தந்திர நடவடிக்கையால் ஆட்சி அமைக்க முடியாத சூழல் ஏற்பட்டது. இதை மிகச்சிறந்த பாடமாக எடுத்துக்கொண்ட ராகுல் காந்தி, கர்நாடக சட்டப்பேரவை தேர்தலில் மிகவும் சாதுர்யமாக காய்களை நகர்த்தினார்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்தபோதிலும், தங்களால் ஆட்சி அமைக்க முடியாவிட்டாலும், கூட எச்.டி.குமாரசாமி தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு ஆதரவு அளித்து பாஜகவைக் காலூன்ற விடாமல் அரசியல் 'செக்' வைத்தார்.

கர்நாடகச் சட்டப்பேரவை தேர்தலில் பாஜக ஆட்சி அமைக்க பகீரதப் பிரயத்தனங்கள் செய்தும் அதை ராகுல் காந்தி முறியடித்து முட்டுக்கட்டை போட்டது அனைவராலும் கவனிக்கப்பட்டது.

தன்னை 'பப்பு', சிறுபிள்ளை என்று விமர்சித்தவர்களைச் சிந்திக்கவைத்தார் ராகுல் காந்தி. அதன்பின் மத்திய அரசின் ஒவ்வொரு தவறுகளையும், நிர்வாகச் சீர்கேடுகளையும், தவறான பொருளாதாரக் 'கொள்கைகளையும் ராகுல் விமர்சித்த விதம் கூர்ந்து நோக்கப்பட்டது.

குறிப்பாக பண மதிப்பிழப்பு விவகாரத்தை ராகுல் காந்தி எடுத்துப் பேசியவிதம் வடமாநில மக்களிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ரஃபேல் போர் விமானக் கொள்முதல் விவகாரத்தில் மத்திய அரசின் ஒவ்வொரு நகர்வையும் ராகுல் காந்தி விமர்சித்தார்.

இந்த ஒப்பந்தத்தில் அரசுக்கு என்ன நஷ்டம், யாரெல்லாம் ஆதாயம் அடைகிறார்கள் என்பதையும் பட்டியலிட்டு பேசியது மக்களிடத்தில் ரஃபேல் போர் விமானக் கொள்முதல் ஊழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

பண மதிப்பு நீக்கத்தால் சிறு, குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்ட விதம், விவசாயிகள் அனுபவித்து வரும் வேதனை, கடன் தள்ளுபடி செய்ய மறுக்கும் மத்திய அரசு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி ராகுல் காந்தி செய்த விமர்சனங்கள் கவனம் பெற்றவை.

கடந்த ஓர் ஆண்டில் ராகுல் காந்தி பல்வேறு தேர்தல் பிரச்சாரங்கள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்கேற்றபோதிலும் எந்த ஒரு சூழலிலும் தனிநபர் குறித்த விமர்சனங்களை வைக்காமல் மத்திய அரசின் மீதான விமர்சனத்தை மட்டுமே முன்வைத்து நாகரிகமான அரசியலுக்கு வழிகாட்டினார்.

அதுமட்டுமல்லாமல் தனது கட்சியின் மூத்த தலைவர்கள் தடம்மாறி எதிர்க்கட்சியினரை விமர்சித்தபோதிலும், அதைக் கண்டிக்கவும் ராகுல் தவறவில்லை.

நாடாளுமன்றத்தில் மத்திய அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது ராகுல் காந்தியின் முதிர்ச்சியான உரை அனைவராலும் கவனிக்கப்பட்டது. பிரதமர் மோடி முதல் எதிர்க்கட்சியினர் அனைவரின் புருவத்தை உயர்த்தச் செய்தது, பெரும்பாலான மக்களாலும் பாராட்டப்பட்டது.


2019ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாஜகவை வீழ்த்துவதற்காக 'மகாபந்தன்' என்ற மகா கூட்டணியை ராகுல் காந்தி உருவாக்கி வருவதும் பாஜகவின் கவனிப்பைப் பெற்றுள்ளது. பிரதமர் வேட்பாளர் இல்லாத கட்சி என்று மகாகூட்டணியை உடைக்க. விமர்சனங்களை பாஜக முன்வைத்தபோதிலும், அதை சாதுர்யமாகவே ராகுல் காந்தி கையாண்டு வருகிறார்.

நடந்து முடிந்த 5 மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வெற்றி என்பது ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி மீள்எழுச்சி பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

மத்தியப் பிரேதசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியை இழந்திருந்த காங்கிரஸ் கட்சி மீண்டும் அரியணையில் ஏறி உள்ளது.

இதை பாஜக மீதுள்ள வெறுப்பை அறுவடை செய்துள்ளது என்பதைக் காட்டிலும் மக்களிடம் இழந்த நம்பிக்கையை ராகுல் காந்தியின் தலைமை மீட்டெடுத்துள்ளது என்று கூறுவதே சரியானதாக இருக்கும்.

கடந்த 2013ம் ஆண்டு மத்தியப் பிரதேச மாநிலத்தில் 58 தொகுதிகளில் வென்றிருந்த காங்கிரஸ் தற்போது 115 தொகுதிகளை வெல்லும் சூழலில் இருக்கிறது. அதேபோல ராஜஸ்தானில், 2013ம் ஆண்டில் 21 தொகுதிகளில் வென்றிருந்த காங்கிரஸ் கட்சி இந்த முறை 104 தொகுதிகளில் முன்னிலை பெற்று ஆட்சி அமைக்க இருக்கிறது. சத்தீஸ்கரில் கடந்த 2013ம் ஆண்டு 39 தொகுதிகள் பெற்ற நிலையில், தற்போது 62 தொகுதிகளுடன் தனித்து ஆட்சி அமைக்கும் வகையில் முன்னேற்றம்




கண்டுள்ளது.

அதேசமயம் வடகிழக்கு மாநிலமான மிசோரமிலும், தெலங்கானாவிலும் காங்கிர்ஸ் கட்சி தனது இருப்பைத் தக்கவைக்க தவறியிருப்பது கவனிக்கப் படவேண்டியது. இந்த 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பாஜகவிடம் இருந்து 3 மாநிலங்களை காங்கிரஸ் மீட்டிருப்பதன் மூலம் ராகுல் காந்தியின் தலைமை மீதான நம்பிக்கையை எதிர்க்கட்சிகளிடையே அதிகரிக்கச் செய்திருக்கிறது, பாஜகவுக்கு எதிரான கட்சிகளின் கரங்களை வலுப்பெறச் செய்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் மீதான நம்பிக்கையை மக்களிடையே வளர்க்க உதவி இருக்கிறது.

ஒருவேளை இதில் காங்கிரஸ் சிறப்பாகச் செயல்படாமல் இருந்திருந்தால், மோடியின் வளர்ச்சி விஸ்வரூபமெடுத்திருக்கும். இந்தத் தோல்விகள் மோடியின் பிம்பத்தைக் காட்டி 2019ம் ஆண்டு தேர்தல் சந்திக்க இருந்த பாஜகவுக்கு 'செக்' வைத்திருக்கிறது.

இனிமேலும் ராகுல் காந்தியை 'பப்பு' என்று அழைக்கமாட்டார்கள். தேர்தல் தேர்வில் ராகுல் காந்தி பாஸ் ஆகிவிட்டார்





# இலங்கை அரசியலில் அடுத்தது என்ன?

பரோட்ட சூரியென ஒரு நகைச்சுவை நடிகர் இருக்கிறார். பரோட்டா நகைச்சுவை காட்சியாலேயே அவர், பரோட்டா சூரி ஆகி விட்டார். அந்த காட்சியை பார்த்தவர்களிற்கு இலங்கை அரசியல் சூழலை பார்க்கும்போது, பரோட்டா நகைச்சுவை காட்சி நினைவிற்கு வரலாம். அரசியல் குழப்பங்கள் தீர்வதை போல ஒரு தோற்றம் தெரிய ஆரம்பிக்கும், ஆனால் எப்படி நகர்ந்தாலும், ரணிலை பிரதமராக்க மாட்டேன் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டினால், எல்லாம் தோல்வியடைந்து, புதிய முயற்சிகள்தான் ஆரம்பிக்க வேண்டியிருக்கும்.

சட்ட வழிமுறையில் தொடங்கி, நாடாளுமன்ற பெரும்பான்மை தீர்மானங்கள் வரை எந்த வழியை நாடினாலும், அது "ரணிலை பிரமராக்க மாட்டேன்" என்ற ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் முட்டிமோதி விட்டு, தோல்வியடைகிறது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு, நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்தது. நாடாளுமன்றத்தில் நான்கு வாக்கெடுப்புக்கள் முடிந்து விட்டன. ஆனால் ஜனாதிபதி அசைந்து கொடுக்கவில்லை. இனியும் அசைந்து கொடுப்பார் என தெரியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த வேறொருவரை பிரதமராக்க ஐ.தே.க சம்மதிக்கப் போவதில்லை... சுயமரியாதையுள்ள எந்த கட்சியும் அப்படியொரு தீர்மானத்திற்கு வராது. மறுவளமாக, தனக்கு நெருக்கமானவர்களிடம், ரணிலால் தான் அவமதிக்கப்பட்ட சம்பவங்களை பற்றி ஜனாதிபதி விரிவாக பேசியதாக தகவலுண்டு. அந்த தகவல்களின்படி, அவர் இனி ரணிலுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பில்லை. ஆக, இப்போது காந்தத்தின் ஒவ்வாத முனைகளை போலவே, மைத்திரி ரணில் உறவு மாறியுள்ளது.

இப்போதைய நிலைமையில், ரணிலை பிரதமராக்காமல் வேறு என்னென்ன வழிகளினால் தட்டிக் கழிக்கலாமென்றுதான் ஜனாதிபதி தேடிக் கொண்டிருக்கிறார். இப்போது, புதிதாக கிடைக்கும் தகவல்களின்படி நாடாளுமன்ற நம்பிக்கை பிரேரணை, நீதிமன்ற தீர்ப்பு எதுவாக இருந்தாலும், ரணில் அல்லாத பிரதமர் என்பதில் ஜனாதிபதி குறியாக இருக்கிறார் என தெரிகிறது.

புதிய அரசாங்கம் சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால், மஹிந்த ராஜபக்ச தலைமையில் இயங்கிய அரசாங்கத்தையும் தவிர்த்து விட்டு, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று பற்றி ஜனாதிபதி சிந்திப்பதாக தெரிகிறது. தனது சட்ட ஆலோசகர்களுடன் அது பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்ற தேர்தல் ஒன்றிற்கு செல்வதா என்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதில் சாதகமான முடிவு கிடைத்தால், நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதென்பது ஜனாதிபதியின் திட்டமாக இருக்கலாம். ஆனால், கிட்டத்தட்ட இரண்டு அடுத்தடுத்த தேர்தல்களிற்கான செலவு இதிலுண்டு. சாதாரண தேர்தலை விட, சர்வஜன வாக்கெடுப்பிற்கு அதிக செலவாகுமென தெரிகிறது. ஒரு அரசியல் முரண்பாட்டினால், நாடு இப்படி நிதியை செலவிட வேண்டுமா என்ற கேள்வியும் உள்ளது.

## தமிழ் தேசிய கூட்டமைப்பு

தெற்கு அரசியலில் மட்டுமல்ல, தமிழ் தேசிய அரசியலிலும் இந்த அடுத்தது என்ன என்ற கேள்வியுள்ளது. ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளித்ததமிழ்தேசியகூட்டமைப்பு, உள்ளூர் போட்டியாளர்களிடமிருந்து அதிக நெருக்கடியை சந்திக்க வேண்டியிருக்கும்.

2015இல் தமிழ் தேசிய கூட்டமைப்பு, அரசியலமைப்பு உருவாக்கம் என்ற பெரியதொரு சவாலை ஏற்றது. அது நினைத்த வேகத்தில் நகரவில்லை. ஆனால், முற்றிலும் அவநம்பிக்கை கொள்ளும் நிலைமையும் இல்லை. தெற்கு அரசியல் குழப்பங்கள் அந்த முயற்சிக்கு குறுக்கே வந்து விட்டன. முதலாவது முயற்சியில் ஏற்பட்ட தடையால், இப்போது இரண்டாவது ரிஸ்க்கான முயற்சியை கூட்டமைப்பு எடுத்துள்ளது.


ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் கொண்டிருந்த உறவால், ஆட்சிமாற்றம் நிகழ்ந்த முதல் மூன்றரை வருடத்தில் அரசியலமைப்பு உருவாக்க பணிகளை பூர்த்திசெய்ய முடியவில்லை. எஞ்சியிருக்கும் ஒன்றரை வருடங்கள்... நிறைவேற்றதிகாரத்துடன் முட்டி மோதிக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணிஎப்படி இனப்பிரச்சனையை தீர்க்கப் போகிறது?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாலுள்ள முக்கிய சவால் இதுதான். கூட்டமைப்பின் முதலாவது "ரிஸ்க் முயற்சி"யின் தாமதத்தையே, உள்ளூர் போட்டியாளர்கள் அரசியல் ஆயுதமாக கையில் எடுத்து வைத்துள்ள நிலையில், அதிக ரிஸ்க்கான இரண்டாவது முயற்சி நகர்வுகளை, உள்ளூர் போட்டியாளர்களை சமாளித்து நகர்த்துவது கூட்டமைப்பிற்கு இருக்கும் ஆகப்பெரிய சவாலாக இருக்கப் போகிறது. ●

தீபம்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

# “அதிகாரங்களிற்காக விக்னேஸ்வரன் நீதிமன்றத்திற்கு போயிருக்க வேண்டும்”

## வரதராஜபெருமாள் நேர்காணல்



> அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது அந்தக் காலம். இப்ப மக்கள் எப்படி இருக்கின்றனரோ அதற்குத் தக்க படி தான் அவர்களுக்குத் தலைவர்களும் கிடைப்பார்கள். அகவே அவர்களின் செயற்பாடு என்கின்ற போது தாங்கள் பதவிக்கு வருவதற்காக அவர்கள் ஒன்றைப் பேசுவார்கள். பதவிக்கு வந்த பின்னர் தங்களுக்கு என்ன என்ன வசதிகளைப் பெற வேண்டுமோ அதனையெல்லாம் பெற்றுக் கொள்வார்கள்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

*தீபம்: வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முதலமைச்சராக நீங்கள் செயற்பட்டதையும் முதலாவது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக விக்கினேஸ்வரன் செயற்பட்டதைம் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?*

**பதில்:** நாங்கள் செயற்ப்டுகிற பொழுது எங்களுக்கு சில இலக்குகள் தெளிவாக இருந்தது. மாகாண சபை என்பதை நாங்கள் தமிழ் மக்களுக்காக வேண்டி நிறுவியாக வேண்டும். அதில் உள்ள சில அதிகாரங்கள் என்றாலும் நாங்கள் பயன்படுத்தியாக வேண்டும். அதை ஒரு முன்னுதாரணமாகக்க வேண்டும். அதேவேளையில் அரசியல் யாப்பு ரீதியாகத் தரப்பட்ட அதிகாரங்களை நாங்கள் ஒன்றவிடாமல் நடைமுறையில் பெற வேண்டும். அடுத்ததாக அரசியல் யாப்புக்கு மேலதிகமாகவும் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்குப் போராட வேண்டும். இவ்வளவு இலக்குகளுடனேயே நாங்கள் போராட வேண்டியிருந்தது.

ஆனால் இங்கே 213 ஆம் ஆண்டு இந்த மாகாணசபை உருவாகுகின்ற பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே மொத்தமாக ஒரு கொள்கை இருந்தது. அதில் முதலாவது கொள்கை என்னவெனில் ஏன் அவர்கள் தேர்தல்களில் பங்கு பற்றியிருந்தார்கள் என்றால் தாங்கள் தேர்தல்களில் பங்கு பற்றாவிட்டால் வேறு யாரும் மாகாண சபையின் அதிகாரத்திற்கு -வந்து விடுவார்கள். அதைத் தடுப்பதற்கு போட்டியிட்டார்கள். இந்தச் சபையைக் கொண்டு மக்களுக்கு ஏதும் செய்ய வேண்டுமென்ற நோக்கம் இருக்கவில்லை. அதாவது வைக்கோல் பட்டை நாய் என்று சொல்வார்கள் அதே கொள்கை தான் முதலாவதாக அவர்களிடம் இருந்தது.

இதில் இரண்டாவது இந்த மாகாண சபை என்பது பிரயோசனம் இருக்கோ இல்லையோ என்பதற்கப்பால் இது பிரயோசனம் இல்லை, இது உதவாது, இதை அனுமதிக்கேலாது என்பதை நிருபிப்பதற்காக அத் தேர்தலில் போட்டியிட்டு பதவிகளையும் பிடித்து வைத்திருப்பது தான் இரண்டாவது கொள்கையாக இருந்தது.

மூன்றாவதாக இந்த மாகாண சபையில் இருந்து கொண்டு இராணுவத்தை வெளியேற்று, காணமல் போனவர்களுக் பதில் கூறு, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய, ஜெனிவாத் தீர்மானங்கள் என்று போடுவது இது தான் மாகாண சபையில் இருந்த கொள்கைகளாக செயற்படுத்தியிருந்தனர். ஆனபடியினால் இந்த மாகாண சபையை கொண்டு மக்களுக்கு எதனையாவது செய்ய வேண்டுமென்று அவர்களுடைய கொள்கையாக இருக்கவில்லை.

ஏதாவது கொள்கை இருந்தால் தானே அதனை விக்னேஸ்வரன் மீறினார் என்று சொல்லலாம். இந்த கொள்கையை விக்னேஸ்வரன் உட்பட கூட்டமைப்பின் தலைவர்மார்கள் எல்லோரும் கடந்த 215 ஆம் ஆண்டு வரைக்கும் கடைப்படித்தவர்கள். ஆனால் 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இன்னொரு றோட்டு நல்ல வசதியான றோட்டுத் தெரிகின்றது என்றவுடன் கூட்டமைப்பினர் அந்த றோட்டில் தமது காரை செலுத்தியுள்ளனர். ஆனால் விக்னேஸ்வரனை நடுறோட்டில் விட்டு விட்டனர். அதனால் விக்னேஸ்வரன் பழைய றோட்டில் நிற்கின்றார். இந்தப் பழைய றோட்டு சரியா புது றோட்டு சரியா என்பதை மக்ஙள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இந்தப் பிரச்சனையொன்றும் எங்களுக்கு இருக்கவில்லை. நாங்கள் பிரயோசனப்படுத்த வேண்டும், அதிகாரத்திற்காக போராட வேண்டும். அந்தப் பிரயோசனப்ப்டுத்தும் போது இணங்கியும் செயற்பட வேண்டும். போராடியும் செய்ய வேண்டும். அரசியல் யாப்பிற்குள் தரப்பட்டுள்ள 13 ஆவது திரத்தம் சரியானது இல்லை ஆனபடியால் 13 ஆவது திருத்தத்தையெ தீரத்துவதற்கான போராட்டத்தையே நடாத்த வேண்டும். என்றவற்றை இலக்காகக் கொண்டு செயற்பட்டோம். அந்த இலக்கு எதனையும் இவர்களிடத்தே காணப்படவில்லை.

அது தான் அன்றும் இன்றும் வித்தியாசம். ஆனால் இவர்களிடத்தே எல்லா வசதி வாய்ப்புக்களும் இருந்தது. அனால் இவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவும் இல்லை. குறிப்பாக புலம் பெயர் நாடுகளிடம் இவர்கள் கேட்டிருந்தால் மாதம் மாதம் கோடான கோடிகளைக் கொட்டியிருப்பார்கள். இவர்களுக்கு இருக்கின்ற கொழும்பு உறவைப் பார்த்தால் அவ்வளவு பெரிய முரண்பாடு என்றில்லை. இவர்களுக்கு இருக்கின்ற சர்வதேச உறவென்று பார்த்தால் சர்வதேசமும் கொண்டு வந்து கொட்டுவதற்குத் தயாராக இருந்தது. ஆனால் இவர்கள் தான் அதற்கும் மாட்டன் என்று சொல்லி விட்டார்கள். இவர்களின் அனுகுமுறை தவறாக இருந்து வந்ததால் மாகாண சபையை பிரயோசனப்படுத்தவில்லை.

அது அவர்களின் கொள்கை. ஆக அதனை அவர்களின் இயலாமை என்று சொல்ல முடியாது. கொள்கைக்கும் இயலாமைக்கும் வித்தியாசம் இருக்கின்றது. செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் இருந்து சொய்ய முடியாமல் போயிருந்தால் அது இயலாமை. இது செய்யக்கூடாதென்று தீர்மானத்தில் இருந்தவர்களை எவ்வாறு இயலாமை என்று சொல்வது. ஆவர்கள் இயலாதவர்கள் என்றில்லை. ஏனென்றால் மாகாண சபையிவல் வைத்து 400 தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றார். அவ்வாறாயின் 400 சட்டங்களையும் இயற்றியிருக்கலாம் தானே. ஆதனை யாரும் தடுத்தும் இருக்க முடியாது.

இந்த மாகாண சபைக்கு முதலமைச்சர் நிதியம் என்ற ஒன்று உள்ளுக்கு வர முடியவில்லை என்றால் வெளியில் இருக்கின்ற தமிழ் மக்கள் பேரவை என்று பிரமுகர்கள் எல்லாம் இருக்கின்றனர் தானே. ஆந்தப் பேரவையின் ஊடாக என்றாலும் மக்களீ மதிக்கக் கூடிய நிதியத்தைத் தொடங்கிவிட்டு அதற்கு நிதியைத் தருமாறு கோரியிருக்கலாம் தானே. இப்படி பல விடயங்களை இவர்கள் செய்திருக்கலாம். இவர்களுக்க மக்கள் அதரவு,வெளிநாட்டு தமிழர்களின் ஆதரவு, எல்லா நாடுகளின் ஆதரவு என இவ்வளவும் இருந்து இவர்கள் செய்யக் கூடாதென்ற கொள்கையில் இருந்ததால் தானே அதனைப் பயன்படுத்தவில்லை.

ஆகவே இனி வரப் போகின்றவர்களும் அவர்களுக் வேறு என்ன கொள்கை இருக்குமென்று எங்களுக்குத் தெரியாது. ஆகவே இந்த மாகாண சபையை யார்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பயன்படுத்துவார்கள் என்றால் மாகாண சபையை எப்படிப் பயன்படுத்துவது என்றும் பலப்படுத்துவதற்காகவும் எண்ணியுள்ளவர்களாலேயே முடியும். இதில் பலப்படுத்துவது என்கின்ற போது இருக்கின்ற அரசியல் யாப்புக்குள்ளேயே பலப்படத்துவது இந்த அரசியல் யாப்புக்களை மிறிய வகையில் இதற்கான அதிகாரங்களைத் தேடுவது என்று இருக்கின்றது. இந்தக் கொள்கைகளைக் கொண்டு செயற்பட்டால் மாகாண சபை பிரயோசனமாக இருக்கும்.

**தீபம்: மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்களின் செயற்பாடுகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்.**

*பதில்:* அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது அந்தக் காலம் . இப்ப மக்கள் எப்படி இருக்கின்றனரோ அதற்குத் தக்க படி தான் அவர்களுக்குத் தலைவர்களும் கிடைப்பார்கள். அகவே அவர்களின் செயற்பாடு என்கின்ற போது தாங்கள் பதவிக்கு வருவதற்காக அவர்கள் ஒன்றைப் பேசுவார்கள். பதவிக்கு வந்த பின்னர் தங்களுக்கு என்ன என்ன வசதிகளைப் பெற வேண்டுமோ அதனையெல்லாம் பெற்றுக் கொள்வார்கள். அவ்வாறு பெறுகின்றனர் தானே.


இப்ப சம்மந்தன் கூறுகின்றார் தான் ஆயிரம் பேருக்கு வேலை பெற்றுக் கொடுப்பேன் என்று கூறுகின்றனார். ஆப்ப அந்த வேலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது தானே. ஆனால்; நான் உரிமைகளுக்காக போராடுகிறேன் என்பதால் ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்க வேண்டுமென்று நான் கேட்க மாட்டேன் என்கின்றார். அப்ப பிறகு என்னதுக்கு அவர்கள் தருகின்ற பணங்களையும் வாகனங்களையும் வாங்கிக் கொண்டு நிற்கின்றீர்கள்.

அதைப்பற்றி அவர்கள் தான் பேசினார்கள் என்று பார்த்தால் இந்த முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் என்ன செய்தார் என்று பார்க்க வேண்டும்.கடைசிநேரத்தில்எனக்குஒரு காரை தாருங்கள் என்று கேட்கின்றார். அப்ப இவர்கள் எல்லாம் உரிமைக்காக பேராடுகின்றார்கள் என்று நாங்கள் நம்ப வேண்டுமா, அதனை நம்புகின்ற தமிழ் மக்களைப் பார்த்து நாங்கள் என்ன சொல்ல முடியும். ஆகவே இது உங்கட தலைவிதி என்று தான் சொல்லாம். ஆக கடவுள் காப்பாற்ற வேண்டும் என்று செல்வநாயம் சொன்னது என்று எல்லோரும் சொல்கின்றனர் தானே. கடவுளே காப்பாற்ற வந்தாலும் காப்பாற்ற விடமாட்டோம் என்று தமிழ் மக்கள் நின்றால் யார் காப்பாற்றுவது.

ஆகவே தமிழ் மக்களுக்கு பல தெரீவுகள் இருக்கின்றன. அதில் ஒருவர் தெரிவு செய்யுங்கள். அவர் செய்யவில்லை என்றால் அவரைத் தூக்கிவிட்டு மற்றவரைப் போடுங்கள். அந்தப் பயத்திலாவது மற்றவர் செய்வார். ஊள்ளுராட்சி சபைத் தேர்தல் நடந்து பல தெரிவுகள் வநற்து விட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இங்குள்ள உள்ளுராட்சி மன்றங்களில் கூட்டமைப்பு தான் இருந்தது.

ஆனால் அந்தச் சபைகளில் ஊழல் அடிபிடி என மக்களுக்கு ஒன்றுமே நடக்கவில்லை. ஆகவே இப்ப வந்திரக்கின்ற சபைகளைப் பார்க்கின்ற போது அவ்வாறு இல்லை என்பது தெரியவரும். ஏதொ ஒரு வகையில் எல்லாச் சபைகளிலும் ஏதோவொரு வகையில் வேலைகள் நடக்கின்றது. ஆன படியினால் தமிழ் மக்களும் ஒருத்தரை ஒருத்தர் மற்றக் கட்சிக்காரர்களுக்கு செக் வைப்பது போன்று பண்முறைத் தெரிவுகளைச் செய்ய வேண்டும்.

ஆகவே ஒருவருக்கு பெரும்பான்மையைக் கொடுத்துப் பார்க்க வேண்டும். அவர் சரியாக நடக்கவில்லை என்றால் அவரைத் அடுத்த முறை தூக்கியெறிந்துவிட்டு மற்றவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்க்க வேண்டும். இந்த மாற்று அரசியலை தமிழ் மக்கள் கடைப்பிடித்தால் அரசியல் வாதிகளும் தமிழ் மக்கள் மீது தங்கள் அக்கறைகளைக் காட்ட வேண்டிய



**13 ஆவது திருத்தத்தின் ஒவ்வொரு விடயங்களிலும் மாகாண சபைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. மாகாண சபைச் சட்டங்கள் என்பது அரசியல் யாப்புக்கு உட்பட்டுத் தான் வாசிக்கப்பட வேண்டும், அரசியல் யாப்புக்கு உட்பட்டுத் தான் அது நிறைவேற்றப்பட வேண்டும்.**

நெருக்கடி கட்டாயம் ஏற்படும்.

உண்மை சொல்ல வேண்டி ஏற்படும். பொய் சொல்லி ஏமாத்திப் போட்டுப் போகேலாது என்ற நிலைமைகள் வந்துவிடும். ஆதனைவிட மேலும் ஊடகங்கள் இன்னும் உண்மையாக இருக்க வேண்டும். ஊடகவியியலாளர்களும் சமூகப் பொறுப்போடு யதார்த்தங்களை உணர்ந்து செயற்பட்டால் மக்கள் மத்தியிலும் சிந்தனை மாற்றங்கள் ஏற்படும்.

நிங்கள் உண்களை ஏன் எப்படி என்றும் எங்க தவறு நடக்கின்றது என்றும் எப்படி திருத்துவதென்று கேளுங்கள் அதற்குதக்கபடி முடிவை எடுங்கள். அதற்கமைய செயற்படுங்கள். அந்த நிலைமை இங்கு நடக்காத படியினால்தால் இங்கு எல்லாத் தவறுகளும் நடக்கிறது. அதிலும் எப்படியும் மக்களை ஏமாற்றலாம் என்ற போக்கிற்கு மக்கள் அனுமதியளித்திருப்பதால் அவ்வளவு பிழைகளும் நடக்கின்றது.

ஆகவே இதனை ஊடகங்கள் பல்கலைக்கழக சமூகம் புத்தி ஜீவிகள் சிந்திக்கத் தொடங்கினால் அதுக்குப் பிறகு எல்லாம் நடக்கும். அதாவது தகவல் பரப்புவது ஊடகங்கள் கடமை, அறிவைப் பரப்புவது ஆசிரியர் கடமை இந்த இரண்டு பகுதியினரும் சமூகத்தின் பிரதான இரண்டு கண்கள். இந்தக் கண்கள் இரண்டும் சரியான திசையைக் காட்டினால் கால்கள் சரியான திசைக்கு நடக்கும்.

**தீபம்: அரசயில் தலைவர்களின் செயற்பாடுகள் சரியானாதா. அவர்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்?**

*பதில்:* 13 ஆவது திருத்தத்திற்கு கீழ் கடந்த இருபது வருடங்களுக்கு மேல முதலமைச்சருக்கு நிறைவேற்று அதிகாரம் இல்லை என்ற வகையாக ஆளுநருக்கு தான் நிறைவேற்று அதிகாரம் கொடுக்கின்றதாக எப்பொழுதுமே பிழையாக இந்த அரசியல் யாப்பு பிரயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

ஆனால் உண்மையில் இந்திய அரசியல் யாப்பில் உள்ள அதே வசனங்கள் தான் இலங்கையின் அரசியல் யாப்பிலும் முதலமைச்சர் ஆளுநர் தொடர்பாக இருக்கிறது. அதாவது இந்தியாவில் எப்படி முதலமைச்சர் நடைமுறையில் நிறைவேற்றதிகாரம் கொண்டவரோ அதே போன்று தான் இங்கும் முதலமைச்சர் நடைமுறை நிறைவேற்றதிகாரம் கொண்டவர். ஆனால் அரசாங்கங்கள் எப்போதும் ஆளுநரிடம் தான் நிறைவேற்றதிகாரம் இருக்கு என்று செயற்பட்டு வந்திருக்கிறது. அதனையும் கண்ணை மூடிக் கொண்டு அங்கீகரித்துக் கொண்டு தான் தமிழ்த் தலைமைகள் இருந்து வந்திருக்கின்றன.

.ஆனால் இல்லை இல்லை முதலமைச்சருக்குது தான் அதிகாரங்கள் இருக்கின்றது என்று எந்தவொரு கட்டத்திலும் இவர்கள் நீதிமன்றம் போகவே இல்லை. ஒரு முதலமைச்சராக இருந்தவர் தனக்குத் தான் நிறைவேற்று அதிகாரம் இருக்கு என்று கூட கேட்காத அளவிற்கு நிலைமை இருக்கின்றது. இது நீண்ட காலத்திற்கு வரப் போகின்ற ஒரு விடயம். அடுத்த தலை முறைக்கும் வரப் போர்கின்றது.

ஆகவே இந்த விடயத்தை உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றிருக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தை நம்ப முடியுமா முடியாதா என்பது வேறு விடயம். ஆன்ால் அங்கு கொண்டு சென்றிருக்க வேண்டும். இப்ப அந்த நீதிமன்றத்தை நம்பித் தானே எல்லோரும் செல்கின்றனர். அடுத்தடுத்து சென்று இப்ப போய் நிற்கின்றபோது ஏன் உச்ச நீதிமன்றத்தை நம்ப முடியாது என்று இதற்கு மட்டும் முன் கூட்டியே சொல்ல வேண்டும். ஆகவே முதலில் செல்லுங்கள் வழக்கு போடுங்கள் வழக்கு நடக்கட்டும் அதற்குப் பின்னர் ன்ன நடக்கு என்று பார்த்துக் கொள்ளலாம்.

ஆனபடியினால் இந்த 13 ஆவது திருத்தத்தின் ஒவ்வொரு விடயங்களிலும் மாகாண சபைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. மாகாண சபைச் சட்டங்கள் என்பது அரசியல் யாரப்புக்கு உட்பட்டுத் தான் வாசிக்கப்பட வேண்டும், அரசியல் யாப்புக்கு உட்பட்டுத் தான் அது நிறைவேற்றப்பட வேண்டும். அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டதாக அது நிறைவேற்றப்படுவதாக இருந்தால் நீதிமன்றம் தான் அது அரசியல் யாப்பை மீறுகிறது என்று சொல்ல வேண்டும். ஆக நீதிமன்றிற்கு இது தொடர்பில் எப்பயாவது சென்று கேட்டிருக்கின்றார்களா.

இந்த மாகாண சபைகள் சட்டம் என்கின்ற மாகாண சபைகள் சட்டம் என்பது அரசியல் யாப்பிற்கு உட்பட்ட வகையில் மொழி பெயர்க்கப்பட்டு விளக்கமளிக்கப்பட வேண்டும். அந்த வகையில் அதில் கூறப்படுகின்ற ஆளுநரின் அனுமதி வேண்டும், ஆளுநர் சொல்ல வேண்டும் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொரு வசனங்களும் சம்பிராதய வசனங்கள். அது அமைச்சரவையினுடைய முடிவுகள் தான் முடிவுகள். ஆமைச்சரவையின் தீர்மானங்கள் தான் தீர்மானங்கள். அமைச்சரவையுடைய கட்டளைகள் தான் ஆளுநருடைய கட்டளைகள். ஏன்ற வகையில் தான் அதடைய மொழிபெயர்ப்பாக இருக்க வேண்டும்.

இதை ஒரு நாளும் நீதி மன்றத்திற்கே கொண்டு போகாமல் மாகாண சபைச் சட்டத்திற்குள்ளால் ஆளுநருக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்களே உங்கள் எண்ணத்தில் விளக்கமளித்து நீங்களே எங்களைத் தோல்விகளாற ஆட்கள் நீங தோற்றுப் போட்டாய் என்று தமிழ் மக்களை சொல்லிக்கொண்டிரக்கின்றீர்கள். இப்படிப் பல நூற்றுக் கணக்கான வழக்குகள் 13 ஆவது திருத்தத்தினாடாக எடுத்திருக்க வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களைக் காப்பாற்றியிருக்க வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் இருக்கின்ற பலங்களை தமிழர்களுடைய பலங்களாக மாற்றியிருக்க வேண்டும். ஆனால் அது எதனையுமே கூட்டமைப்போ அல்லது

தொடர்ச்சி 23-ம் பக்கம்...



புதிய பகுதி!

# தொற்று நோய்களின் உலகம்!

**உணவும் வாழ்க்கைமுறையும் மாறி, பதற்றமும் அவசரமும் சூழ்ந்த ஒரு நவீன உலகத்துக்குள் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். பெரும்பாலானோர், இதை, 'தொற்றா நோய்களின் யுகம்' என்கிறார்கள்.**

மருத்துவ உலகம், நோய்களை இரண்டாகப் பிரிக்கிறது. தொற்று நோய்கள், தொற்றா நோய்கள். இதயநோய், சர்க்கரை நோய், புற்றுநோய், ஆஸ்துமா போன்று ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தொற்றாத நோய்கள், தொற்றா நோய்கள். இந்நோய்கள் வரக் காரணம், நம் வாழ்க்கை முறையில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள். பாரம்பர்யமான, பதற்ற மற்ற, அன்பும், அரவணைப்பும், உடற்பயிற்சிகளும் சூழ்ந்த வாழ்க்கை முறை இன்று வேறுவிதமாக மாறி விட்டது. எங்கு பார்த்தாலும் பதற்றம். பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை யாரையும் விட்டுவைப்பதில்லை. அவசரம், வாழ்க்கையைக் கவ்விக் கொண்டுவிட்டது. அலுவலகம் செல்பவர்கள் மட்டுமின்றி, வீட்டில் இருப்போரையும் பதற்றமும் பரபரப்பும் சூழ்ந்தே இருக்கின்றன. இந்தப் பதற்றமும் பரபரப்பும் உடல் இயக்கத்தைப் பாதிக்கின்றன. மெட்டபாலிசம் மாறுகிறது. அதனால் இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்களெல்லாம் வருகின்றன.

அந்தக் காலத்தில் நமது உணவென்பது, உடல் ஆரோக்கியத்தை மையப்படுத்தியதாக இருந்தது. 'உணவே மருந்து' என்று அதனால்தான் சொன்னார்கள். உடலையும் மனதையும் பக்குவப்படுத்தும் ஆற்றல் உணவுக்கு உண்டு. 'சத்தான உணவு, அதற்குச் சமமான உழைப்பு' என்ற சூட்சுமம்தான் நம் முன்னோரை நீண்ட ஆயுளோடு வாழ வைத்தது.

ஆனால், இன்று உணவுப்பண்பாடு வெகுவாக மாறிவிட்டது. தட்பவெப்பத்துக்குப் பொருந்தாத பல உணவுகள் நம் கைக்கெட்டும் தூரத்துக்கு வந்துவிட்டன. அவற்றின் சுவை, இளம் தலைமுறையை ஈர்க்கிறது. உடலை மையப்படுத்தியதாக இல்லாமல் நாவை மையப்படுத்தியதாக உணவுகள் மாறி விட்டன. மேலும் சரியான நேரத்தில் சாப்பிடுவதுமில்லை. அதனால் உணவே இன்று பல்வேறு நோய்களைப் பற்ற வைக்கிறது.

மனிதர்களின் கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறை பற்றியும் பேச வேண்டியிருக்கிறது. புகை பிடித்தல் இன்று மனித குலத்தைப் பெரும் பாதிப்பில் தள்ளிக்கொண்டிருக்கிறது. அதேபோல் மதுவும். பத்தில் ஏழு பேர் இந்தப் பழக்கத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இவை ஆரோக்கியத்திற்கு மிகப்பெரும் சவாலாக உருப்பெற்று நிற்கின்றன.


உடற்பயிற்சிகள் பெரும்பாலும் குறைந்துவிட்டன. அக்காலத்தில் மனிதர்களின் உழைப்பே பெரும் உடற்பயிற்சியாக இருக்கும். நிறைய நடப்பார்கள். வியர்வை சிந்த வேலை செய்வார்கள். இன்று நடப்பதே அரிதாகி விட்டது. முன்பெல்லாம் வீட்டுக்கு ஒரு வாகனம் இருக்கும். இன்று ஆளுக்கொரு வாகனம். அருகில் இருக்கிற கடைக்குச் செல்லக்கூட பைக். ஒரு நாளைக்கு அரைமணி நேரம், ஒரு வாரத்துக்கு ஐந்து நாள்கள் நடந்தால் ஆரோக்கியம் பெருகும், ஆயுள் அதிகமாகும். ஆனால், நடக்க நேரமும் இல்லை, மனமும் இல்லை.

தூக்கம் எல்லா உயிரினங்களுக்கும் அவசியமானது. உணவு எப்படியோ, அப்படி. ஆனால், பலர் போதிய அளவுக்குத் தூங்குவதேயில்லை. மொபைலும் தொலைக்காட்சியும் பலரின் உறக்கங்களைத் திருடிவிட்டன. ஆங்கிலத்தில், 'ஸ்லீப் டெப்ட்' (Sleep debt) என்பார்கள். தமிழ்ப்படுத்தினால் 'தூக்கக் கடன்' என்று வரும். இந்தத் தூக்கக் கடன்தான் பல நோய்களுக்கு அடிப்படை.

உணவும் வாழ்க்கைமுறையும் மாறி, பதற்றமும் அவசரமும் சூழ்ந்த ஒரு நவீன உலகத்துக்குள் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். பெரும்பாலானோர், இதை, 'தொற்றா நோய்களின் யுகம்' என்கிறார்கள். ஒருவிதத்தில் இது உண்மையாக இருக்கலாம். ஆனால், தொற்று நோய்களை இன்னும் நாம் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி விடவில்லை. அவை நம்முன் மிகப்பெரும் சவாலாக முன்னெழுந்து நிற்கின்றன. அவற்றோடு இந்த நொடி வரை மருத்துவ உலகம் போராடிக்கொண்டிருக்கிறது.

ஒருகாலத்தில், அம்மை, கொலரா, மலேரியா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் மனித குலத்துக்கே சவாலாக இருந்தன. இன்று அவற்றை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி விட்டோம். ஆனால், புதிது புதிதாகத் தொற்றுநோய்கள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அண்மையில் வந்த டெங்கு உள்பட.

சத்தற்ற, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கத்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து கொண்டே வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் சுற்றுச்சூழல் பெரும் அச்சுறுத்தலைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. குப்பைகளை, கழிவுகளைக் கையாள்வதில் பெரும் சிக்கல் உருவாகியிருக்கிறது. இது எல்லாமே தொற்றுநோய்களுக்குச் சாதகமான சூழலாகின்றன. உலக அளவிலான புள்ளிவிபரப்படி, மனிதர்களுக்கு ஏற்படும் மரணங்களுக்கான முதல் காரணம் தொற்று நோய்கள்தான். அதிலும், நுரையீரல் தொற்று, வயிற்றுப்போக்கு... இந்த இரண்டு தொற்று நோய்களாலும்தான் உலகத்தில் அதிக மனிதர்கள் இறக்கிறார்கள்.




தொற்றுநோய்களுக்குக் காரணமான தொற்றுகளை பக்டீரியா, வைரஸ், பூஞ்சைகள், ரிக்கெட்ஸியா (Rickettsia), கிளாமிடியா (Chlamydia) என்று வகைப் படுத்தலாம். உதாரணத்துக்குக் காச நோய், ஒரு பக்டீரியாத் தொற்றுநோய். ஸ்வைன் ஃப்ளூ ஒரு வைரஸ் தொற்று. படை, சேற்றுப்புண் போன்றவை பூஞ்சைத் தொற்றால் ஏற்படக் கூடியவை. எலிக்காய்ச்சல் (Leptospirosis) ரிக்கெட்ஸியாவால் ஏற்படும் நோய். ஒருவித நிமோனியா, சில பால்வினை நோய்கள் எல்லாம் கிளாமிடியாவால் வருபவை.

வளர்ந்த நாடுகளைவிட வளரும் நாடுகளில் தொற்றுநோய்களின் தாக்கம் அதிகம். காரணம், மக்கள் நெருக்கம். இங்கிலாந்தில் ஒரு மருத்துவர் ஓ.பியில் அமர்ந்து 100 நோயாளிகளைப் பார்த்தால் ஐந்து நோயாளிகள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். தென்னாசியாவில் அப்படிப் பார்த்தால் 60 நோயாளிகள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். ஆக, தொற்றுநோய், மிகப் பெரிய பிரச்னை. அவற்றைப் பற்றி நிறைய பேச வேண்டியிருக்கிறது. நிறைய விழிப்பு உணர்வு அவசியமாக இருக்கிறது. அடுத்தடுத்து நிறைய பேசுவோம். உங்களுக்குச் சந்தேகங்கள் இருந்தாலும் கேளுங்கள். விடை தேடுவோம்.


**களைவோம்...**

✎ திலக்ஸ் ரெட்ணம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பரந்து விரிந்த படுவான்கரை பெருநிலத்தில் அரசர்கள் தனியாட்சி அமைத்து மக்களை அரசாட்சி புரிந்துள்ளமையும், களிப்புற மாளிகைகள் அமைத்துள்ளதற்கான பல சான்றுகளும், தடயங்களும் ஆங்காங்கே வெளிவந்த வண்ணமுள்ளன. போரதீவுப்பற்று பிரதேசத்தில் பழுகாமம், மண்டூர்,இளைஞர் விவசாய திட்ட கிராமம் போன்றவற்றில் இவ்வாறான தடயங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பான வரலாறுகள் வரலாற்றாசிரியர்களின் புத்தகங்களில் பதிவிடப்பட்டுள்ளன.

நாம் படுவான்கரை பெருநிலத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட குக்கிராமமான இளைஞர் விவசாய திட்ட கிராமம் ஓர் வரலாற்று தடயம் கொண்ட இடமாக உள்ளது. இவ்வூரின் மத்தியில் மலைக்குன்றுகளில் 1960ம் ஆண்டு காலப்பகுதிகளில் அப்பகுதிக்கு மேட்டு நிலபயிர் செய்கைக்காக குடியேறிய இளைஞர்களினால் சிறிய மலைக்குன்று ஒன்றில் பிள்ளையார் ஆலயம் வைத்து வழிபட்டுவந்துள்ளது. அக்கிராமத்திற்கு பிந்நாளில் குடியேறிய மக்களால் சிறிய குடிசையினால் வேயப்பட்டு ஆலயமாக கும்பிட்டு வந்துள்ளனர். இப்பகுதி எங்கும் மலைக்குன்றுகளாகவே காட்சியளிக்கின்றது. மன்னர்களின் அரண்கள் அமையப்பெறுவதற்கு ஏதுவான இடமாகவும் இருக்கின்றது.





# புலிகள் தோண்டிய புதையல்

## மட்டக்களப்பில் எஞ்சியிருக்கும் வரலாற்று தடங்கள்... புதையல் நிறைந்த கிராமம்!

இப்பகுதிகளில் பல வரலாற்று எச்சங்கள் காணப்படுகின்றன. அதாவது குன்றின் ஓரங்களில் சிறிய படிக்கல் செதுக்கல்கள் உள்ளன. இவ்வாறான செதுக்கல்கள் இரு இடங்களில் உள்ளன. இவை மேல ஏறுவதற்கு பயன்படுத்தினார்களா? இல்லை வேறேதும் அடையாளங்களுக்காக செதுக்கப்பட்டதா? என்பது கேள்விக் குறியே. அப்படிகள் மிகவும் சிறியதாக உள்ளது. ஏறக்கூடிய அளவு அல்ல.

மேலும் ஒரு தடயமாக "பாதம் கணு" பல காணப்படுகின்றன. பாதம் கணு என்பது சிங்கள சொல் வடிவம். அதாவது ஒரு பெரிய கருங்கல்லினை ஒரு தூண் நாட்டுவதற்குரியதற்கு தேவையான சதுரமான குழி அதன் மத்தியில் செதுக்கப்படும். அதனை நிலத்தினுள் புதைத்து அதன்மேழிலு தூண்களை நட்டுசபாமண்டபம்மற்றும் ஏனைய மண்டபங்கள் அமைப்பதற்கு பயன்படுத்தியுள்ளனர். இது போன்ற அமைப்பு எமது பிரதேசமான கச்சக்கொடி சுவாமி மலை பிரதேசத்தில் இரு இடங்களில் காணப்படுகின்றன. இங்கு ஊர்ஜிதம் செய்யப்படாத அனுராதபுர காலத்திற்குரிய ஒருசில



செங்கற்கள் காணப்படுகின்றன. மலைக்கற்களில் பண்டைய உலோகம் தயாரிப்பதற்கு செய்யப்பட்ட குழிகளும் காணப்படுகின்றது. இதை வைத்து பார்த்தால் இக்கிராமத்தில் அரசர்களோ? சிற்றரசர்களோ? அரண் அமைத்து ஆட்சி செய்திருக்கலாம். அல்லது படைகளின் வழிப் பாதையாகவோ? மன்னர்களின் மகிழ்வுறு இடங்களாகவோ? இருக்கலாம்.

இப்போது விடயத்துக்கு வருவோம். இப்பகுதிகளில் புதையல் உள்ளது எனவும், புதையல்கள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர். அதுபற்றி நாம் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு அப்பிரதேசத்திற்கு சென்று புதையல் பெறப்பட்ட இடங்கள், தோண்டப்பட்ட இடங்கள் மற்றும் அது தொடர்பான வரலாற்று தடயங்கள் அனைத்தையும் பார்வையிட்டோம். புதையல் என்பது மன்னர்களால் எதிர்கால சந்ததிக்காகவும், பிற மன்னர்களுக்கு பயந்தும் பொன், வெள்ளி,வைரம்,முத்து போன்றவற்றால் ஆன ஆபரணங்கள் போன்றவற்றை மண்ணினுள் புதைத்து வைத்தல். இவை அவர்களால் பெறமுடியாமல் போனவையாகும். அவை தற்போது புதையல்களாக பெறப்படுகின்றது. புதையலினை புதைக்கும் போது நிலையான அழிவடையதா இடங்களில் சிறுமதிப்பத்துடன் புதைப்பார்கள். மரம் போன்றவற்றிக்கு அண்மையில் புதைத்தால் மரம் அழிந்து விடும். ஆனால் மலைகள், மலைக் குன்றுகள் அழிவடையாது. ஆகவே அவற்றினருகே புதைத்திருப்பது உண்மை சம்பவமாக உள்ளது. இங்கும் மலைகளில் பாம்பு போன்ற உருவம், பாயும் தலையணையும் போன்ற உருவங்கள் மலைகளில் பொழிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் இங்கு புதையல் தோண்டப்பட்டு பெறப்பட்டுள்ளது என அளைவராலும் கூறப்படுகின்றது. இவர்கள் பெற்ற இடத்தில் பாம்பின் தலை மலை மேலே இருந்து வால் மலையடி வாரத்தினூடாக மண்ணினுள் போகின்றது. அந்த வால் எங்கு முடிவடைகின்றதோ அவ்விடத்தில் புதையல் இருந்ததாக கூறப்படுகின்றது. தமிழீழ விடுதலை புலிகள் தொடர்ச்சியாகநான்குநாட்கள் தங்கியிருந்து பௌத்த பிக்கு ஒருவரின் உதவியுடன் பெற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் பெற்ற இடம் பெரிய பள்ளமாகவும், தற்போது அது குப்பைகளால் நிரப்பப்பட்டு விட்டதாகவும் அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கினறனர். இது தொடர்ந்து சாமியார் ஒருவர் இவ்வாலயத்தின் பக்கத்தில் உள்ள மலையின் அருகே உள்ள ஏழுறை பங்கர் என மக்களால் அழைக்கப்படும் மலை முகடுகளினால் மூடப்பட்ட உள்ளே மலைகற்களினால் இயற்கையாகவே பிரிக்கப்பட்டுள்ளது. அதனால் மக்கள் அதனை அவ்வாறு அழைக்கின்றனர். அதிலேதான் அந்த சாமியாரும் வந்து குடியிருந்து மலையிலே உள்ள ஒரு புதையல் தோண்டி எடுத்ததாக மக்கள் கூறுகின்றனர். அவ்விடத்தில் உள்ள குழி தற்போது நீரினால் நிரம்பி உள்ளது. கிட்டத்தட்ட அக்குழியின் ஆழம் எட்டடி வரும். அக் குழியின் அருகில் பாயும் தலையணை போன்ற அமைப்பு மலையிலே பொழிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று ஏழுறை பங்கர் குன்றின் முகட்டில் எழுத்துக்கள் போன்ற வடிவமும் பொழிக்கப்பட்டுள்ளமையினை அவதானித்தோம். இவற்றையெல்லாம் உற்று நோக்கும் போது இப்பகுதியில் சிற்றரசர்களின் அரண் இருந்திருக்கலாம்.

ஓரிரு மாதங்களுக்குள் எச்சக்குன்று ஒன்றினை வளைத்து குழிகள் தோண்டப்பட்டுள்ளது. இதனை பார்வையிட சென்ற போதே மேற் கூறப்பட்ட வரலாற்று தடயங்களை நாம் அவதானித்தோம். அந்த எச்சக் குன்றில் பாம்பு போன்ற உருவம் பொழிக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத நபர்களினால் புதையல் தோண்டப்பட்டுள்ளது. இவர்கள் புதையல் எடுத்தார்களா? இல்லையா? என்பதும் தெரியாது என்கின்றனர் அக்கிராம வாசிகள். அப்பிரதேசம் சிறுகாட்டினால் சூழப்பட்டுள்ளது. அக்காட்டினை முற்றாக ஆய்வு செய்தால் மேலும் பல தடயங்கள் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இப்பிரதேச முன்னோர்கள் இவற்றை மூடநம்பிக்கைகளாக சித்தரிக்கின்றனர். பழுகாமத்தில் அமிச்சாப்புட்டி எனும் இடம் அரசர்களின் உப்பரிகை அதாவது ஓய்வு எடுக்கும் இடமாக இருந்திருக்கின்றது. அதனால் பழுகாமத்திற்கு சிங்காரகண்டி எனும் பெயரும் உள்ளது. கச்சக்கொடியிலும் பல வரலாற்று தடயங்கள் கற்கட்டில் மலையில் படிக்கட்டுகள், நீர்த்தடாகம் மற்றும் மலைமுகடுகளினால் சூழப்பட்ட அரணும் பல பாதம் கணுக்களும், சுரங்கப்பாதை போன்ற அமைப்பும் உள்ளது.

இப்பிரதேசத்தை தொல்பொருளியல் திணைக்களம் பார்வையிட்டுள்ளனர். இதையும் தொல்பொருளியலுக்குரிய இடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ●

# ஓயாத மனித உரிமை மீறல்களின் மத்தியில் இந்த தினம் எதற்காக?



பி.சியா

நாளுக்கு நாள் எங்கோ ஒரு மூளையில் தம் உரிமைகளுக்காக போராடும் மனிதர்கள் இருக்கவே செய்கின்றனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லாத நிலையில் இன்று உலக மனித உரிமைகள் தினமாகும்.

மனிதனுக்கே உரிய அடிப்படை சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகதக்கம் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபை கடந்த 1948 ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை உரிவாக்கியது. கிட்டத் தட்ட 30 உறுப்புரைகளில் காணப்படும் இப் பிரகடனத்தில் 54 உரிமைகள் உலகளவழல் அங்கீகரிக்கப்பட்டவை.

இவை குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் மீதான உடன்பாட்டொழுங்கு என இரு வகைப்படுகின்றன.

இவ்விரு உடன்பாட்டு ஒழுங்குகளும் 1976 ஆம் ஆண்டு செயற்பாட்டிற்கு வந்ததுடன் 1981 ஆம் ஆண்டு இலங்கையில் பின்னுறுதிப் படுத்தப்பட்டது. தற்போது கிட்டத் தட்ட 80 நாடுகள் பின்னுறுதிப்படுத் தியுள்ளன.

இவ்வாறு மனித உரிமைகளை பாதுகாக்கும் நேக்குடன் ஐ.நா சபை பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தாலும் இற்றைவரை பல வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் மனித உரிமை மீறல்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அரங்கேறுகின்றன.

கல்வி உரிமை மத உரிமை மொழி உரிமை பேச்சுரிமை தகவல் உரிமைகள் என பல உரிமைகள் மீறப்படும் அதேவேளை வயது வேறுபாடின்றி பல தரப்பாலமும் பல கோண்களில் முன்னெக்கப்படும் சித்திரவதைகளும் அதிகம். இலங்கை மற்றும் ஜேமன் றோஹிங்ஜா சிரியா அரேபிய நாடுகள் என்பன யுத்தம் மற்றும் அரசியல் நடைமுறைகளால் வெளிப்படையான சித்திரவதைகளை அரங்கேற்றிய நாடுகள் எனலாம்.

இது தவிர இலங்கை இந்தியா ரோஹிங்யா போன்ற நாடுகளில் வீடுகளில் இடம்பெறும் சித்திரவதை சிறுவர்கள் மீதான சித்திரவதை முதியவர்கள் மற்றும் மாற்று திறகாலிகள் மீதான சித்திரவதை என்பன சகிக்கவும் நிறுத்தவும் முடியாத கொடுமைகளாக உள்ளன.

இதற்கு காரணம் சீரான விழிப்புணர்வின்மை என்பது பலரது கருத்தாக இருப்பினும் யுத்தம் வறுமை கல்வி அறிவின்மை உழைப்பின்றி சேரும் பணம் என பல காரணங்கள் உள்ளடங்குகின்றன.

சிறுவர்கள் ஆசிரியர்களால் மற்றும் பெற்றோர்களால் துன்புறுத்தப்படுதல் வீடுகளில் உள்ள உறவினர்களால் துன்புறுத்தப்படுதல் மற்றும் இளைர்கள் சக நண்பர்களால் துன்புறுத்தப்படுதல் மனைவி கணவனால் கணவன் மனைவியால் துன்புறுத்தப்படுதல் தொழிலாளிகள் முதலாளிகளால் துன்புறுத்தப்படுதல் என்பன தொடர்கதையாக இருக்கும் பட்சத்தில் மனித உரிமைகள் பிரகடனம் எதற்கு? அதற்கொரு அமைப்பு எதற்கு என்ற கேள்விகள் எழுப்பப்படுகிறது.

இவ்வாறு இலங்கையில் யுத்த காலத்தை எடுத்து கொண்டால் இளம் பெண்கள் ஆண்கள் என்று வேறுபாடின்றி அனைத்து தரப்பினரும் இலங்கை ராணுவத்தினால் சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதற்கான வடுக்கள் மற்றும் ஆதாரங்கள் சமூகத்தின் தடங்களாக உள்ளன.

எனினும் இன்றுவரை போர்குற்ற விசாரணை நடத்தப்படவில்லை இலங்கை போரின்போது மனித உரிமையை மீறியவர்கள் யார் என்பதை நிரூபித்து அவர்களுக்கான தண்டனை வழங்கப்படவில்லை என்பதும் வேதனைக்குரிய விடயம்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பணிகள்

1 முறைப்பாடுகளின் நடைமுறை தொடர்பாகவு அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை நோக்காக கொண்டுவிசாரணை நடத்தப்படல்.
2 அடிப்படை உரிமைமீறுகை அல்லது உடனடி மீறுகை தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து இணக்கம் மற்றும் மத்தியஸ்தம் மூலம் தீர்வுகளை வழங்குதல்.
3 அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது மற்றும் மேமபடுத்துவது தொடர்பில் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.
4 சர்வதேச மனித உரிமைகள் தராதரத்திற்கு ஏற்ப தேசிய சட்டவாக்கம் மற்றும் நிர்வாக நடைமுறை தொடர்பில் அரசிற்கு சிபார்சு செய்தல்.
5 மனித உரிமைகள் தொடர்பான பொருத்தன்னைகளையும் வேறு சர்வதேச ஆவணங்களையும் ஏற்று அங்கீகரிப்பது தொடர்பில் அரசிற்கு சிபார்சு செய்தல்.
6 மனித உரிமைகள் தொடர்பான கல்வியறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தல

## சித்திரவதைக்கு எதிரான குழு

இக்குழுவானது சித்திரவதை மற்றும் மனிதாபிபமற்ற இழிவான நடத்தைகள் அல்லது தண்டனை மீதான சமவாயத்தின் உறுப்புரை 17 இன் கீழ் உருவாக்கப்பட்டதாகும்.

இதில் மனித உரிமை விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட தகமையை கொண்டவர்களும் சிறந்த ஒழுக்கம் கொண்டவர்களுமான பத்து உறுப்பினர்கள் உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அத்தோடு இவர்களின் பதவிக்காலம் நான்கு வருடங்கள் ஆகும்.

ஒவ்வொரு நாடுகளும் மனித உரிமை பிரகடனத்தின் ஐ.நா சபைக்கு கீழ் உறுப்புநாடுகளான வந்ததன் பின்னர் வருடாவருடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உறுப்புரை 22 இன் கீழ் தனிப்பட்ட நபர்களின் கோரிக்கைகள் உட்பட அனைத்து பிரச்சினைகளையும் ஒவ்வொரு நாடுகளும் இக்குழுவிடம் சமர்ப் பிக்க முடியும். எனினும் பிரகடனம் செய்யப்படாத நாடுகளிலிருந்து சமர்பிக்க முடியாது. எனினும் இலங்கை இதுவரை குறித்த உறுப்புரையை பிரகடனம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று உறுப்புரை 20 இன்படி நியாயாதிக்க எல்லைக்குள்ளாக சித்திரவதை தொடர்பாக நம்பத்தகுந்த தகவல்கள் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கு கிடைக்கப்பெறின் அது தொடர்பாக அக்குழுவானது குறித்த நாட்டிற்கு அத்தகவலை பரிசோதிப் பதற்கும் ஒத்துழைப்பை பெறுவதற்கும் அவதானிப்புகளை குழுவிற்கு சமர்ப்பிற்கவும் செய்வித்தல் வேண்டும்.

மேலும்இக்குழுவாதுவிசாரணையை நடத்த ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்களை பரிந்துரைக்கலாம்.

இதற்கென அந்நாட்டிற்கு செல்ல அல்லது அல்லது அந்த நாட்டின் ஒத்துழைப்பை பெறுவதற்கு ஆவணம் செய்தல் வேண்டும்.

இவ்வுறுப்புரையில் குறிப்பிடப்பட்ட விடயங்களனைத்தும் இரகசியமாக செய்யப்பட வேண்டும்.

குழூவி அறிக்கையானது குறித்த அரசின் கலந்துரையாடலின் பின்னர் குழுவின் ஆண்டறிக்கையில் வெளியிடப்படலாம்.

## உயிர்வாழ்வதற்கான உரிமை

மனிதனுடைய வாழ்வ அழித்தலானது பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் ஒன்றாகும். சர்வதேச மனித உரிமைகள் சட்டமானது இதனை கடுமையாக கண்டிக்கிறது. அத்தோடு தனிமனிதர் தன் உயிரை எடுத்தலே (தற்கொலை) தவறு என்கிறது சர்வதேச மனித உரிமை சட்டம்.

அதேவேளை உயிர் வாழ்வதற்கான உரிமையும் முற்றிலும் மீறப்பட முடியாத உரிமையில்லை. பல சந்தர்ப்பங்களில் அரசு தாமாகவே முன்வந்து தனிப்பட்ட ஆட்சிகளின் உயிர்வாழும் உரிமையை பறிக்கின்றன.

அதற்கு சர்வதேச மனிதஉரிமை சட்டம் ஆட்சேபனை எதனையும் எழுப்பவில்லை. இதற்கு உதாரணமாக மரணதண்டனையை குறிப்பிடலாம்.

மனித உரிமை சட்டமானது குற்றத்திற்கான கடும் தண்டனையாக மரண தண்டனை நிறைவேற்றுவதை சர்வதேச அளவில் ஆட்சேபனை எழுப்பவில்லை.

எனினும் இலங்கை போன்ற நாடுகளில் மரண தண்டனை விதிக் கப்படுகின்ற போதும் நிறைவேற்றப் படுவதில்லை.அமெரிக்காவில் கடந்த 1620 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றல்கள் 1880 ஆம் ஆண்டுவரை படிப்படியாக வளர்ச்சியடைந்தது.

1940 களில் 195 மரண தண்டனை அந்நாட்டில் நிறைவேற்றப்பட்டது. 1970 களில் எதுவும் இல்லாதிருந்த போதும் மீண்டும் 2000 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 80 மரண தண்டனை பதிவு செய்யப்பட்டது.


ஒவ்வொரு மனிதனும் உயிர்வாழ் வதற்கான உள்ளாந்த உரிமையை கொண்டிருப்பதுடன் அவ்வுரிமையானது சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். அரசு கீழ்வரும் நிலைகளின்

தொடர்ச்சி 21-ம் பக்கம்...

## ஆட்டோ சங்கரின் கதை

# ஜெயலலிதாவுக்கும் எனக்கும் அடித்த பம்பர் பரிசு!

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம் 11



ரெண்டு மூணு நாள் கழித்து மறுபடியும் "வீடு சௌகரியமாய் இருக்கிறதா' என அவளிடம் விசாரிப்பதற்காக சென்றபோது எனக்கு அதிர்ச்சி. காரணம், அவள் கழுத்தில் தொங்கிய தாலி!

"கன்னிப் பெண்ணாயிருக்கிறதாலே ஏகப்பட்ட விடலைப்பசங்கதொந்திரவு பண்றாங்க! அவங்ககிட்டேயிருந்து தப்பிக்கத்தான்... அதுவும் தவிர கல்யாணமானவள்ங்றப்ப என் அம்மாவும் என்னைக் கூப்பிட வராம இருப்பா இல்லே... அந்த பாதுகாப்புக்காகத்தான் எனக்கு நானே தாலிகட்டிக்கிட்டேன்" என்றாள்.

மலைத்துப் போனேன்.

"சரி, புருஷன் யாருன்னு கேட்பாங்களே?"

"நீங்கதான்னு சொல்லியிருக்கேன்"

முட்டை மீது இடி விழுந்தமாதிரி மொத்தமாய் நொறுங்கிப்போக வைத்தது சுமதி சொன்ன விஷயம்!

"எ..என்ன சுமதி? இப்படியொரு காரியம் செய்துட்டே... உதவி செய்கிற ஆளுக்கு இப்படித்தான் உபத்திரவம் செய்கிறதா?" கோபிக்க... சுமதிக்கு கண்கள் அலம்பிற்று.

"நான் அப்படிக் கட்டிக்கலைன்னாலும், ஊர் உங்க வைப்பாட்டின்னுதான்ங்க சொல்லும். தாலியிருக்கிறதாலே கொஞ்சம் மரியாதை மட்டுமாவது மிஞ்சும். எந்தப் பயலும் வாலாட்டவும் மாட்டான்... வேற யாரையாச்சும் நான் புருஷன்னு சொன்னா... புருஷனைக் காணோமே... இந்த ஆள் யாருன்னெல்லாம் அக்கம் பக்கம் கேள்வி வரும். முதுகிலே பேசும். நயா பைசா பார்வை பார்க்கும். விபச்சாரி பட்டம் கொடுக்கும். அதற்கு வைப்பாட்டி கொஞ்சம் கௌரவமான பதவி இல்லையா.... ஆனா, உங்களை இதிலே தேவையில்லாம களங்கப் படுத்தியிருக்கேன்.... என்னை மன்னிச்சுடுங்க"

என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பெருமூச்சு வந்தது. நல்லது செய்யணும்னு வந்தா சோதனைகளைச் சந்திச்சுதானே ஆகணும்... "உன் இஷ்டப்படி செய்... ஆனா ஒரு விஷயம். தாலியைப் பார்த்து என் வைப்பாட்டின்னு ஊர் நினைக்கட்டும் பரவாயில்லை. ஒரு நாளும் நீ நினைச்சுடக் கூடாது. என் மேலே தப்பான ஆசை எதுவும் வச்சுடக் கூடாது. ஒரு பிராயச்சித்தமாதான் உன்ன காப்பாத்திகிட்டிருக்கேன். நான் கூடுதலா ஒரு பாவம் பண்றதுக்கு நீ காரணமாயிடக் கூடாது. ஊர் என்னை உன் புருஷனா நினைக்கட்டும் பரவாயில்லை... ஆனா, நீ உன் சகோதரனாதான் நினைக்கணும், இந்த உத்தரவாதத்தை நீ கொடுத்தால் இனி நான் உன்னைப் பார்க்க வருவேன். இல்லையானா இதான் என் கடைசி வருகை. என்ன சொல்றே?" சுமதி களங்கமில்லாமல் சிரித்தாள்.

"நீங்க எப்பவும் இங்க வரணும்..."

"அப்படியானா நீ...?"

"நான் உங்களை எப்பவுமே என் புருஷனா நினைக்கலியே... நான் எந்த விதத்திலேயாவது கற்போட இருக்கத்தான் இங்கே வந்திருக்கேனே தவிர, உங்களைக் கல்யாணம் செய்துக்கிறதுக்காக வரலை... நீங்களாக ஏன் எதை எதையோ கற்பனை செய்துக்குறீங்க?"

சில சமயங்களில் உண்மை கற்பனையைவிட வேடிக்கையாகவும், வியப்பாகவும் காட்சி தரக்கூடியது என்பது எவ்வளவு நிஜம்? தாலி கட்டிக்கொண்டு அண்ணன் தங்கையாய் இருந்தவர்களை உலகத்தில் எங்கேயாவது பார்க்க முடியுமா? யாராவது சொன்னால் நம்புவோமா? உண்மைக்கு நம்புவார், நம்பாதவர் பற்றியெல்லாம் என்ன அக்கறை? சாகாததுதானே உண்மை! எனவே தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதும் அதற்குத் தேவை இல்லைதான்.

சுமதிக்கு நான் தந்த உத்தரவாதத்தைக் காப்பாற்றவும் செய்தேன். அது முக்கியமில்லை, அந்த சுமதிதான் எனது தூக்குதண்டனைக்கே துருப்புச்சீட்டாக ஆனாளே... அதுதான் முக்கியம்!

சரி, அது பின்னால் நடந்தது.

இப்போது, எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின் நடந்த அதிமுக பிரிவுக்கு வருவோம்...

எம்.ஜி.ஆரின் மரணம் இரண்டு பேருக்கு பம்பர் பரிசாக அமைந்து விட்டது! ஒன்று ஜெயலலிதா; ஆட்சியைப் பிடித்தார்! இன்னொரு நபர் ஆ.சங்கராகிய நான்தான். இரண்டு பட்ட கோஷ்டிகளுக்கு பலான சங்கதிகளை சப்ளை செய்து ஒரு சில ராத்திரிகளுக்குள் முப்பதுலட்சம்பணம் கொட்டியது. ரூபாயை எங்கே மறைத்து வைப்பது என்றே தெரியவில்லை. கறுப்புப் பணமாயிற்றே. வருமான வரி ஆபீசுக்கு தெரிந்தால் போச்சு.

தொகை அனைத்தையும் ஐநூறு ரூபாய் கட்டுகளாக மாற்றினேன். சுருக்கமான எண்ணிக்கையில் இருந்தால் மறைப்பது சுலபம் ஆயிற்றே! படுக்கை மெத்தையின் ஒரு முனை நூலை பிரித்து உள்ளேயிருந்த இலவம் பஞ்சு மறைவுக்குள் பணக்கட்டுகளை திணித்தேன். பழையபடி வாயைத் தைத்து மேலே போர்வை விரித்து மறைத்தாயிற்று. இதை கட்டின மனைவியிடம் கூட சொல்லக்கூடாது என தீர்மானித்தேன். பாபுவிடம் மட்டும் தெரிவித்தேன்!

தாம்பரம் தொகுதியில் எம்.எல்.ஏ. சீட்டுக்குபோட்டியிடதிட்டமிட்டேன்! அப்போது தேர்தல் செலவுக்கு இந்த பணத்தை பயன்படுத்த எண்ணம். ஆனால் நடந்ததோ... (தொடரும்)








திரைப்படம்: 2.0

நடிகர்கள் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், எமி ஜாக்சன், மயில்சாமி, சுதான்ஷு பாண்டே

இசை: ஏ.ஆர்.ரஹ்மான்

ஒளிப்பதிவு: நீரவ் ஷா

இயக்கம்: ஷங்கர்

கடந்த 2010 இல் ரஜினி நடிப்பில், ஷங்கர் இயக்கத்தில் வெளியான எந்திரன் படத்தின் பின்னணியை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் படம். அதாவது விஞ்ஞானி வசீகரன் மற்றும் அவரது கண்டுபிடிப்பான 'சிட்டி' ரோபோவின் அடுத்த சாகசம்.

பறவையியல் நிபுணரான டாக்டர் பக்ஷிராஜன் (அக்ஷய் குமார்) செல்போன்களாலும் அதற்காக அமைக்கப்படும் டவர்களாலும் உருவாகும் கதிர்வீச்சுகளால் பறவைகள் பாதிக்கப்படுவதைக் கண்டறிந்து, அவற்றை கட்டுப்படுத்தப் போராடுகிறார். ஆனால், அது நடக்காமல் போக, ஒரு செல்போன் டவரில் தூக்கிலிட்டு தற்கொலை செய்துகொள்கிறார். இதற்கிடையில், நகர் முழுவதும் செல்போன்கள் பறிக்கப்படுகின்றன. யார் பறிப்பது, பறிக்கப்பட்ட செல்போன்கள் எங்கே செல்கின்றன என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கும்போதே, கோரமான கொலைகள் நடக்க ஆரம்பிக்கின்றன. இதையடுத்து டாக்டர் வசீகரனை (ரஜினிகாந்த்) அரசு உதவிக்கு அழைக்க, அவர் தன் முந்தைய கண்டுபிடிப்பான 'சிட்டி' வந்தால்தான் இதை எதிர்கொள்ள முடியும் என்கிறார். இதையடுத்து சிட்டி மீண்டும் உருவாக்கப்படுகிறது.

தற்கொலைசெய்துகொண்ட பக்ஷிராஜன்தான், இம்மாதிரி செல்போன்களைப் பறித்து, கொலைகளைச் செய்கிறார் என்பதும் தெரிகிறது. இதையடுத்து சிட்டியும் பக்ஷிராஜனும் மோதுகிறார்கள். கதையின் கரு அனைவரும் அறிந்த விடயம். எனினும் அதனை எளிய முறையில் கொடுத்துள்ளார் இயக்குநர். இந்தத் திரைக்கதையில் ஓரளவுக்கு மேல் திருப்பு முனைகளோ, சஸ்பென்ஸோ இருக்க முடியாது. ஏன், சுத்தமாக அப்படி ஏதும் இல்லை என்றே சொல்லலாம். கதாநாயகியும் ஒரு ரோபோ என்பதால் காதல், குடும்பம் போன்ற சென்டிமென்ட் காட்சிகளும் இல்லை. ஆகவே, படம் முழுக்க முழுக்க ஆக்ஷன் காட்சிகளை நம்பியே நகர வேண்டிய கட்டாயம். ஆனால், கிராஃபிக்ஸில் நடக்கும் அந்த ஆக்ஷன் காட்சிகளை எவ்வளவு நேரத்திற்கு ரசிக்க முடியும்?

ரஜினிகாந்த் அக்ஷய் குமார் என இரண்டே முக்கிய பாத்திரங்கள்தான். இதில் பெரும்பாலும் அக்ஷய் குமார் பறவையாக வருகிறார். ரஜினிகாந்த் பெரும்பாலும் ரோபோவாக வருகிறார். இதனால், இந்த இருவரில் யாருடனும் ஒட்ட முடியாமல், சண்டைக் காட்சிகளை மட்டும் பார்க்க வேண்டியிருக்கிறது. டாக்டர் பக்ஷிராஜன் இவ்வளவு பெரிய வில்லனாக மாறுவதற்குப் பின்னாலிருக்கும் கதையாக சொல்லப்படும் ஃப்ளாஷ் பேக் அவ்வளவு உணர்ச்சிகரமாக இல்லை. ஆகவே, கதையோடு சுத்தமாக ஒன்ற முடியவில்லை. பல காட்சிகள் எந்திரன் படத்தையும் அந்நியன் (குறிப்பாக ஸ்டேடியத்திற்குள் நடக்கும் சண்டைக் காட்சி) படத்தையும் நினைவுபடுத்துகின்றன.

தவிர, இறந்த மனிதனின் ஆவி, பேய் போன்றவற்றுக்குப் பதிலாக, அதற்கு அறிவியல் விளக்கம் கொடுப்பதாகச் சொல்லி, ஆரா, மைக்ரோ ஃபோட்டோன்ஸ் என்றெல்லாம் அதை விளக்குவது அயர்ச்சியை ஏற்படுத்துகிறது. முந்தைய படத்தில் வரும் டாக்டர் போராவின் மகனாக ஒருவரை அறிமுகப்படுத்தி, அவரது பாத்திரமும் முழுமையாகாமல் சென்றுவிடுகிறது. படத்தின் பிற்பாதியில் சிட்டி முழுமையாக பக்ஷிராஜனுடன் சண்டைபோட களத்தில் இறங்கும்போதுதான் படம் சூடுபிடிக்கிறது. ஆனால், அதற்குள் முக்கால்வாசிப் படத்தைப் பார்த்து சோர்ந்துபோயிருப்பதால், இந்த ஆக்ஷன் காட்சிகள் பெரிய விறுவிறுப்பை ஏற்படுத்துவதில்லை.

வசனம், நகைச்சுவை, பஞ்ச், ரசனை எதுவும் இல்லாமல் எழுதப்பட்டிருக்கும் தட்டையான வசனங்கள், படத்தின் மற்றுமொரு பலவீனம்.

படத்தின் நாயகன் ரஜினிகாந்த்துக்கு இது மற்றொரு குறிப்பிடத்தக்க படமல்ல. மிகச் சாதாரணமாக அறிமுகமாவதிலிருந்து முற்பாதி முழுக்க ரொம்பவுமே அடக்கிவாசிக்கிறார். ரஜினியிடம் சாதாரணமாக தென்படும் உற்சாகமும் துள்ளலும்கூட இதில் இல்லை. ஆனால், பிற்பாதியில் சிட்டியாக வரும்போது சில காட்சிகளில் பிரமாதப்படுத்துகிறார். அந்தக் காட்சிகளைவிட்டுவிட்டால், இந்தப் படத்தில் எதற்கு ரஜினி என்றுதான் கேட்கத் தோன்றும்.

## பரியேறும் பெருமாள் நாகனின் நடிப்பில் உருவாகிறது - இரண்டாம் உலகப்போரின் கடைசி குண்டு

நீலம் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் பா.இரஞ்சித் தயாரிப்பில் அடுத்ததாக உருவாகவிருக்கும் படத்திற்கு 'இரண்டாம் உலகப்போரின் கடைசி குண்டு' என்று தலைப்பு வைத்துள்ளனர். இதில் அட்டகத்தி தினேஷ் நாயகனாக நடிக்கிறார். பரியேறும் பெருமாள்' படத்தை தொடர்ந்து நீலம் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் பா.இரஞ்சித் அடுத்ததாக தயாரிக்கவிருக்கும் படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் நேற்று வெளியானது. இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் அட்டத்தி தினேஷ் நாயகனாக நடிக்கிறார். நாயகிகளாக அனேகா, ரித்விகா ஆகியோர் நடிக்கிறார்கள்.' இவர்களுடன் லிஜீஷ், முனீஸ்காந்த், ரமேஷ் திலக் ஆகியோர் நடிக்கிறார்கள். மெட்ராஸ், கபாலி, காலா உள்ளிட்ட படங்களில் இயக்குநர் பா.இரஞ்சித்திடம் உதவியாளராக பணியாற்றிய அதியன் ஆதிரை இயக்குகிறார். இசையமைப்பாளராக தென்மா அறிமுகமாகிறார். கிஷோர் குமார் ஒளிப்பதிவு செய்ய, செல்வா ஆர்.கே படத்தொகுப்பு பணிகளை மேற்கொள்கின்றனர். தா.ராமலிங்கம் கலை பணிகளை கவனிக்க, உமாதேவி, அறிவு, தனிக்கொடி, தங்கவேலு ஆகியோர் பாடல்களை எழுதுகிறார்கள்.

## பிரியங்கா சோப்ராவிடம் மன்னிப்பு கோரினார் எழுத்தாளர்

"திரைப்பட நடிகை பிரியங்கா சோப்ரா தனது தொழில்முறை வாழ்க்கையை வலுப்படுத்திக்கொள்ளவே அமெரிக்கப் பாடகர் நிக் ஜோனாஸை திருமணம் செய்துகொண்டார்," என்று கட்டுரை ஒன்றில் குறிப்பிட்ட அமெரிக்கப் பெண் எழுத்தாளர் மரியா ஸ்மித் மன்னிப்புக் கேட்டுள்ளார். பிரியங்கா சோப்ரா, நிக் ஜோனாஸ் மற்றும் வாசகர்கள் மனதை, தான் கட்டுரையில் எழுதியது காயப்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கேட்பதாக அவர் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். அவரது கட்டுரை வெளியான 'தி கட்' இணையதளம் இனவெறியுடன் நடந்துகொள்வதாக விமர்சிக்கப்பட்டது. அந்தக் கட்டுரை இப்போது நீக்கப்பட்டுள்ளது.


சந்தியா

சமூக வலைத்தளங்களில் YouTube /deepamlive



# வண்ணத் திரை

## பெரியாளாகவே ரஜினியை எதிர்கிறேன் - விஜய்சேதுபதி

பெரியாள எதிர்த்தா தான் பெரியாளாக முடியும், பேட்ட இசை வெளியீட்டு விழாவில் விஜய் சேதுபதி தெரிவித்துள்ளார். ரஜினிகாந்த் நடித்துவரும் பேட்ட'படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த இசை வெளியீட்டு விழாவில் நடிகர் ரஜினிகாந்த், விஜய் சேதுபதி, இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், இசையமைப்பாளர் அனிருத், தயாரிப்பாளர் கலாநிதி மாறன், சசிகுமார், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி, திரிஷா, பீட்டர் ஹெய்ன், மாளவிகா மேனன், ஐஸ்வர்யா தனுஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் கலந்து கொண்டு பேசிய விஜய்சேதுபதி; "எல்லாரும் கனவு காணுவார்கள், ஆனால் நான் காணாத ஒரு கனவு நடந்துள்ளது. ரஜினி சாருடன் இணைந்து நடித்தது சந்தோஷமாக இருக்கிறது. அவருடன் நடித்ததே பெரிய விடயம். அவர் கமரா முன் வந்து நின்றால், அவரை பார்கக நிறைய பேர் இருக்கிறார்கள். ரசிகர்களுக்காக இப்போ வரை அவர் பொறுப்புடன் நடிக்கிறார். அவரைப் போல பொறுப்பான நடிகராக வர வேண்டும் என்பது எனது ஆசை. பேட்ட படத்தில் நான் தான் வில்லன். பெரியாளாக வேண்டுமென்றால் பெரியவர்களை எதிர்க வேண்டுமல்லவா. படத்தில் அதே மாதிரியான காட்சிகள் நிறையவே இருக்கு. கடைசி காட்சி வரை எல்லாரையும் பிரமிக்க வைப்பார் ரஜினிகாந்த். பேட்டை படத்திலும் கடைசி வரை சுவாரஸ்யம் தான் என விஜய் சேதுபதி தெரிவித்துள்ளார்.

## இமைக்கா நொடிகள் இயக்குநர் மூலம் விக்ரம் நடிக்கும் அடுத்த படம்

இமைக்கா நொடிகள் படத்தை தொடர்ந்து அஜய் ஞானமுத்து அடுத்ததாக இயக்கும் ஆக்ஷன் த்ரில்லர் படத்தில் விக்ரம் நாயகனாக நடிக்க இருக்கிறார். திரில்லர் படங்கள் இயக்குவது இயக்குனர் அஜய் ஞானமுத்துவின் பாணி. இவரது முதல் படமான டிமாண்டி காலனி திரைப்படம் ஹாரர் திரில்லர் பாணியில் வெளியாகி கவனம் பெற்றது. சில மாதங்களுக்கு முன் நயன்தாரா முதன்மை கதாபாத்திரம் ஏற்று நடித்த இமைக்கா நொடிகள் கிரைம் திரில்லர் பாணியில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பு பெற்றது. அனுராக் காஷ்யப், அதர்வா, ராஷி கண்ணா, விஜய் சேதுபதி அந்தப் படத்தில் நடித்திருந்தனர். இந்த நிலையில், அஜய் ஞானமுத்து இயக்கும் அடுத்த படம் ஆக்ஷன் திரில்லர் பாணியில் உருவாக உள்ளது. இந்தப் படத்தில் விக்ரம் கதாநாயகனாக நடிக்க உள்ளார். விக்ரம் தற்போது கமல்ஹாசன் தயாரிப்பில் `கடாரம் கொண்டான்' படத்தில் நடித்து வருகிறார். ராஜேஷ்.எம்.செல்வா இயக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் நடைபெற்று வருகிறது.

இந்தப் படத்தை தொடர்ந்து விக்ரம் மலையாளத்தில் பிரம்மாண்ட பட்ஜெட்டில் உருவாகும் `மகாவீர் கர்ணா' படத்தில் நடிக்க இருக்கிறார். அதன் பின் அவர் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் நடிக்க இருக்கிறார்.

டிமாண்டி காலனி படம் வெளிவந்த பின்பு 2016 ஆம் ஆண்டிலேயே அஜய்விக்ரம் கூட்டணியில் புதிய படம் உருவாக இருந்தது. ஆனால் அப்போது அது கைகூடவில்லை. இருவரும் வெவ்வேறு படங்களில் கவனம் செலுத்தத் தொடங்கினர். தற்போது இரண்டு ஆண்டுகளுக்குப் பின் இருவரும் இணையவிருக்கின்றனர். அடுத்த ஆண்டு இதன் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ளது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.



சுவாதி

## "மெர்சல்"- நீடிக்கும் சிக்கல்: மண்டையை பிய்க்கும் படக்குழு

மெர்சல் படத்தை தயாரித்த ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம், அந்த படத்தில் பணியாற்றிய மேஜிக் நிபுணர் தனக்கு சம்பளபாக்கி வைத்திருப்பதாக ராமன் சர்மா தொலைபேசி உரையாடலை வெளியிட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அட்லி இயக்கத்தில் விஜய், சமந்தா, நித்யா மேனன், காஜல் அகர்வால், எஸ்.ஜே.சூர்யா நடிப்பில் கடந்த ஆண்டு தீபாவளிக்கு வெளியான படம் 'மெர்சல்'. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த இந்த படத்தை, ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் தயாரித்திருந்தது. மெர்சல் படத்தில் 3 கதாபாத்திரங்களில் நடித்திருந்த விஜய் ஒரு கதாபாத்திரத்தில் மேஜிக் நிபுணராக வருவார். ஒரு காட்சியில் மேஜிக் மூலமாக சண்டையிடுவது போல படமாக்கி இருப்பார்கள்.

இந்த சண்டைக்காட்சி உள்பட மேஜிக் தொடர்பான காட்சிகளில் பணிபுரிந்தவர் சர்வதேச மேஜிக் நிபுணர் ராமன் சர்மா. 'மெர்சல்' படத்தில் இன்னும் தனக்கு சம்பள பாக்கி இருப்பதாக, அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வீடியோ வெளியிட்டு பரபரப்பை உருவாக்கி உள்ளார். தேனாண்டாள் பிலிம்ஸ் முரளிக்கும் தனக்கும் நடந்த வாட்ஸ்அப் உரையாடலையும் ஸ்கிரீன் ஷாட்டாக வெளியிட்டார். இவரது இந்த பதிவு ட்விட்டரில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. நேற்று ராமன் சர்மா தனது ட்விட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டார். அதில், தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனத்துடன் அவர் தொலைபேசியில் பேசிய உரையாடல் இடம்பெற்றுள்ளது. அந்த உரையாடல் வருமாறு:

**ராமன் சர்மா:** 26 நவம்பர் அன்று நீங்கள் கண்டிப்பாக எனக்கு பணத்தைத் தந்து விடுவதாகக் கூறினீர்கள். இன்று டிசம்பர் 6.

**தேனாண்டாள் பிலிம்ஸ்:** கண்டிப்பாகத் தந்துவிடுவோம் ராமன்.

**தேனாண்டாள் பிலிம்ஸ்:** அடுத்த ஒன்றிரண்டு நாட்களில். கண்டிப்பாக நான் உங்களை தொலைபேசியில் அழைத்துச் சொல்கிறேன்.

**ராமன் சர்மா:** நான் நீண்ட நாட்களாகக் காத்திருப்பது உங்களுக்குத் தெரியும். தேனாண்டாள் ஸ்டூடியோவில் உங்கள் பொறுப்பு என்ன? நீங்கள் முரளியின் உதவியாளரா?

**தேனாண்டாள் பிலிம்ஸ்:** நான் தான் தயாரிப்பில் இருக்கிறேன்.

**ராமன் சர்மா:** ஏன் நிறுவனத்திலிருந்து என்னைக் கூப்பிட்டு பேச முடியாதா?

**தேனாண்டாள் பிலிம்ஸ்:** இன்னும் சில நாட்களில் பணம் உங்களுக்கு வந்துவிடும்.

**ராமன் சர்மா:** இன்னும் பல தரப்புக்கு பணம் பாக்கி என்பது உங்களுக்குத் தெரியுமா?

**தேனாண்டாள் பிலிம்ஸ்:** எல்லோருக்கும் பணம் தரப்படும்.

**ராமன் சர்மா:** இன்னும் இரண்டு நாட்கள் தான் காத்திருப்பேன். பணம் வரவில்லையென்றால் நான் வீடியோ பதிவை வெளியிட்டு விடுவேன்.

இவ்வாறு அந்த தொலைபேசி உரையாடல் இடம் பெற்றுள்ளது.

## காதலரை கரம் பிடிக்கும் நட்சத்திரம் - 12 ஆம் திகதி திருமணம்

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகைகளுள் ஒருவரான சாந்தினியும், நடன இயக்குநரான நந்தாவும் காதலித்து வந்த நிலையில், இருவரது திருமணம் டிசம்பர் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. பாக்யராஜ் இயக்கத்தில் சாந்தனு நடிப்பில் உருவான சித்து +2 படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் சாந்தினி தமிழரசன். இவரது நடிப்பில் வஞ் சகர் உலகம், ராஜா ரங்குஸ்கி, பில்லா பாண்டி, வண்டி உள்ளிட்ட படங்கள் சமீபத்தில் வெளியாகின.

மேலும் அரவிந்த்சாமியின் வணங்காமுடி, அச்சமில்லை அச்சமில்லை, டாலர் தேசம் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். இந்த நிலையில், சாந்தினிக்கும் அவரது காதலரும், நடன இயக்குநருமான நந்தாவுக்கும் இருவீட்டாரது சம்மதத்துடன் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது. வருகிற 12 ஆம் திகதி திருப்பதியில் வைத்து திருமணம் நடைபெற இருக்கிறது. திருமணத்தில் உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் மட்டும் பங்கேற்கின்றனர். அதனைத்தொடர்ந்து 16 ஆம் திகதி சென்னையில் வைத்து திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது. இதில் திரையுலகப் பிரபலங்கள் பங்கேற்க இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

திருமணம் குறித்து சாந்தினி கூறியிருப்பதாவது, நந்தாவும் நானும் 9 வருடங்களாக காதலித்து வந்தோம். சினிமாவில் நல்ல நிலையில் இருக்கும்போதே திருமணம் செய்துகொள்வது என்று முடிவெடுத்தோம். திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து படங்களில் நடிப்பேன் என்று கூறியுள்ளார்.







## கொரியாவின் கதை #6

# ஜப்பானிடம் கொரியா அடிமைப்பட்டது எப்படி?

கொரியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான ஒப்பந்தம் மிரட்டி போடப்பட்ட ஒப்பந்தம் என்றே கொரியர்கள் நினைத்தார்கள். கொரியாவை மிரட்டுவதற்காக கொரியாவுக்கு சொந்தமான காங்வா தீவில் ஜப்பான் தனது ராணுவத்தை இறக்கியது.

அந்தத் தீவு, ஏற்கெனவே வெளிநாட்டினருக்கும் கொரிய ராணுவத்துக்கும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த தீவு. அந்தத் தீவில் நிறுத்தப்பட்டிருந்த கொரிய ராணுவம், தீவை நெருங்கும் எந்தக் கப்பலையும் தகர்ப்பதை வாடிக்கையாக வைத்திருந்தது.

இந்நிலையில்தான், *1875* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் தேதி காலை இனர் யோஷிகா என்ற ஜப்பானிய தளபதியின் தலைமையில் கொரியாவின் கடலோர பகுதியில் ஜப்பான் கப்பல்படை அணிவகுத்தது. தங்களுக்கு தண்ணீரும் உணவும் வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததை ஏற்காமல் ஜப்பானிய கப்பல்கள் மீது கொரியா ராணுவம் கடும் தாக்குதலை தொடுத்தது.

உக்கிரமான சண்டையில் கொரியாவின் தடுப்புகளையும், எதிர்த்தாக்குதலையும் முறியடித்துவிட்டு காங்வா தீவில் இறங்கிய ஜப்பான் ராணுவம், கொரிய ராணுவத்தினரின் பல வீடுகளுக்கு தீ வைத்தது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்தே, கொரியா ஜப்பான் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து, ஜப்பானிய வியாபாரிகள் புஸான் நகருக்கு வந்தனர். அந்த நகரம் வெளிநாட்டு வர்த்தகத்தின் மையமாகியது. *1881*ல் ஜப்பானிய அதிகாரிகள் கொரியாவின் முதல் செய்தித்தாளை வெளியிட்டனர். கொரியாவின் படித்த சமூகத்தை கவரும் நோக்கில் சீன மொழியில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. அந்தக் கட்டுரைகள் அரசியல் சட்டரீதியான அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தன. பேச்சு சுதந்திரம், மக்களுடைய சட்டப்படியான உரிமைகளை பாதுகாக்கும் வகையிலான வலுவான சட்டத்தின் ஆட்சியையும், கொரியாவை தொழில்மயமாக்குவதையும் அந்தக் கட்டுரைகள் வலியுறுத்தி எழுதப்பட்டன. இந்தக் கட்டுரைகளின் நோக்கங்களில் சில தேறின. ஜப்பானிய மொழியில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், ஜப்பானிய வர்த்தக விவரங்களை தெரிவித்தன. இந்தப் பத்திரிகை *1882* மே மாதவாக்கில் தடை செய்யப்பட்டது.

கொரியாவில் ஜப்பானின் ஆதிக்கத்தையோ மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தையோ கொரியாவின் இளவரசர் டேவோன்கன் விரும்பவில்லை. அரசி மின்னுக்கு எதிராக *1882* ஆம் ஆண்டு ஒரு கலகம் நடத்துவதற்கு அவர் தூண்டுதலாக இருந்தார். கொரியாவின் பழைய ராணுவம் ஜப்பானிய பயிற்சிபெற்ற ராணுவ வீரர்களை கொன்று, ஜப்பானிய தலைமை அலுவலகத்தையும் தாக்கியது. ஜப்பானிய அதிகாரிகள், போலீஸார், மாணவர்கள், ராணியின் உறவினர்கள் பலரையும் கொன்றது. இதைத்தொடர்ந்து, டேவோன்கன் கொஞ்சகாலம் அதிகாரத்தை கைப்பற்றினார். ஆனால், சீன வீரர்கள் டேவொன்கன்னை வலுக்கட்டாயமாக சீனாவுக்கு அழைத்துச் சென்றனர். ஜப்பானியர்களால் சியோல் நகரம் மேலும் கலகபூமியாகிவிடக் கூடாது என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த கலகம் காரணமாக *1882* ஆம் ஆண்டு கொரியா ஜப்பான் இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்தானது. ஜப்பானியர்கள் கொல்லப்பட்டதற்கும், ஜப்பானுக்கு ஏற்பட்ட இழப்புக்கும் அபராதமாக *5* லட்சம் யென் வசூலிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி, சியோலில் உள்ள ஜப்பான் தலைமை அலுவலகத்தில் ஒரு கம்பெனி ஜப்பான் ராணுவத்தினரை நிறுத்திக்கொள்ளவும் கொரியா ஒப்புக்கொண்டது.

கொரியாவின் இளவரசர் டோவொன்கன் ஆதரவாளர்களுக்கும் ராணி மின் ஆதரவுப் படையினருக்கும் நெருக்குதல் ஏற்படுத்தும் வகையில் கொரிய விடுதலையை வலியுறுத்தும் முன்னேற்றக் கட்சி உருவாகியது. அதற்கு போட்டியாக பிற்போக்குவாத குழுவும் தோன்றியது. முன்னேற்றக் கட்சி ஜப்பானின் ஆதரவையும், பிற்போக்குவாத குழு சீனாவின் ஆதரவையும் கேட்டன. *1884* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் *4* ஆம் தேதி ஜப்பான் ஆதரவுடன் முன்னேற்றக்கட்சி ராணுவ கலகத்தில் ஈடுபட்டது.இதன்விளைவாகசீனாவின் பிடியிலிருந்து விலகி, ஜப்பான் ஆதரவு அரசாங்கம் அமைக்கப்பட்டதாக அறிவித்தனர். ஆனால், சீனா ஆதரவைப் பெற்ற பிற்போக்குவாத குழு கலகத்தை முறியடித்தது. கொரிய மக்கள் ஜப்பானிய அதிகாரிகளையும், ஜப்பான் குடியிருப்புகளையும் தாக்கி அழித்தனர். முன்னேற்றக் கட்சியின் கிம் ஒக்க்யுன் ஜப்பானுக்கு தப்பி ஓடினார். சிக்கிய அந்தக் கட்சியின் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அடுத்த *10* ஆண்டுகள் கொரியாவில் ஜப்பானின் ஆட்டம் ரஷ்யாவின் முயற்சியால் மட்டுப்படுத்தப்பட்டது.

ஆனால், *10* ஆண்டுகளில் கொரியாவில் ஏகப்பட்ட குளறுபடிகள் நிகழ்ந்தன. போலியான சட்டங்களை உருவாக்கினார்கள். விவசாயிகளின் நிலத்தை பறித்தார்கள். அணைகளைக் கட்டும்படி விவசாயிகளை நிர்பந்தம் செய்தார்கள். அரசாங்கத்தின் அட்டூழியத்திற்கு எதிராக ஜியோன் போங்ஜுன், கிம் கயேனம் ஆகியோர் தலைமையில் அணிவகுத்தனர். புரட்சியைத் தொடங்கினார்கள். ஆனால், அந்த புரட்சி ஒடுக்கப்பட்டது. தலைமை வகித்த ஜியோன் தப்பினார். சிலகாலம்கழித்து அவர் ஒருபடையைத் திரட்டி மீண்டும் கோபு பிரதேசத்தை கைப்பற்றினார். அதையடுத்து புரட்சிக்காரர்கள் அரசுப் படைகளுக்கு எதிராக அணிவகுத்தனர். இந்த புரட்சியின் மூலம் புரட்சியாளர்கள் கைப்பற்றிய பகுதிகளை அவர்களே நிர்வகிக்கும் வகையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. ஆனாலும், நிலையான அமைதி எட்டப்படவில்லை. அரசாங்கம் இந்தப் புரட்சியால் அஞ்சியது. சீனாவின் குய்ங் பேரரசின் உதவியை நாடியது. அதன்பேரில், *2,700* வீரர்களை கொரியாவுக்கு அனுப்பியது சீனா. ஜப்பானுடனான ஒப்பந்தத்தை மீறி சீனா வீரர்களை அனுப்பயதால் ஜப்பான் அரசு ஆத்திரமடைந்தது. இது சீனா ஜப்பான் போருக்கு வழி வகுத்தது. *1894* ஆம் ஆண்டு ஜூலை *25* ஆம் தேதி தொடங்கிய இந்தப் போர் மிக உக்கிரமாக நடைபெற்றது. போர் தொடங்கியதில் இருந்து சீனாவுக்கு எதிராக ஜப்பான் ராணுவம் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்றது. நிலத்திலும், நீரிலும் நடைபெற்ற போர்களில் ஜப்பான் ராணுவத்தின் நவீனத்தன்மைக்கு ஈடுகொடுக்க முடியாமல் சீன ராணுவம் திணறியது. அதைத்தொடர்ந்து, *1895* ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சீனா வெள்ளைக்கொடி காட்டி சமாதானம் பேசியது.




குய்ங் பேரரசு தனது ராணுவத்தை நவீனமயப்படுத்தாமல் தவிர்த்ததால் ஏற்பட்ட இந்தத் தோல்வி சீனாவிலும் மிகப்பெரிய மாற்றங்களுக்கு அடித்தளம் அமைத்தது. கொரியா தீபகற்பம் சீனாவின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு ஜப்பான் பேரரசு வசம் கைமாறியது. ஜப்பான் மட்டுமின்றி, கிழக்கு ஆசியா முழுக்க ஜப்பான் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இது சீனாவுக்கு மிகப்பெரிய அடியாக கருதப்பட்டது. சீனாவிலோ, முடியாட்சி ஒழிக்கப்பட்டு சன் யாட் சென், காங் யுவேய் ஆகியோர் தலைமையில் ஸின்ஹாய் புரட்சி ஏற்படவும் காரணமாகியது.

சீனப் புரட்சிக்கு காரணமானது இருக்கட்டும். கொரியா முழுக்க ஜப்பானின் கட்டுப்பாட்டில் வந்ததைத் தொடர்ந்து, உள்நாட்டு புரட்சிகளை ஒடுக்க ஜப்பான் முயற்சிகளை எடுத்தது. டோங்காக் புரட்சிக்காரர்களை கொரிய அரசுப்படை உதவியுடன் முற்றாக நசுக்கியது. ஜப்பான் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொரியா முழுமையாக வந்தது.

(தொடரும்)

சி.கே.குமரவேல்

பிஸ்னஸ் வழிகாட்டல் தொடர் 6



# படி... புத்தகம் படி... தொடர்ந்து படி!


என் இனிய இளைய சமுதாயமே; நீங்கள் படித்து முடித்தபின் ஏதோ ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் செல்ல விருப்பமா அல்லது பலருக்கும் வேலை போட்டுத் தரும் தொழில் முனைவோராக மாற விருப்பமா?

உங்கள் விருப்பம் தொழில் முனைவோராக ஆவதுதான் எனில், கல்லூரியில் படிக்கும் போதிலிருந்தே அதற்கான தயாரிப்புகளில் நீங்கள் இறங்க வேண்டியது அவசியம். அதனால் பெரிய பிரயோஜனம் உடனடியாகக் கிடைக்கா விட்டாலும், நாம் பிஸ்னஸ் செய்யும்போது கண்டிப்பாக அது நமக்கு உதவும். அதற்கு உதாரணமாக என் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

நான் ஆண்கள் பாடசாலையில், தமிழ் மீடியத்தில் படித்தேன். உயர்தரத்தை ஆண், பெண் என இருபாலரும் படிக்கும் பாடசாலையில் ஆங்கில மீடியத்தில் கற்றேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி இருந்தது.

என்னோடு படித்த ஒரு மாணவன் பெரிய, பெரிய ஆங்கிலப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வருவான். அவனைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குக் கோபம் கோபமாக வரும். ஏனென்றால், எனக்கு ஆங்கிலம் படிக்க வராது.

பாடசாலையில் எனக்கு ஆங்கில வகுப்பு எடுத்த ஆசிரியர் ரொம்ப வித்தியாசமாகப் பாடம் எடுப்பார். அதனால் அவர் எடுக்கும் வகுப்புகளுக்குத் தவறாமல் செல்வேன். ஒரு நாள் அவரது வகுப்பில் 'ஃப்யூச்சர் ஷொக்' (Future Shock) என்கிற புத்தகத்தைப் பற்றிச் சொன்னார். நானும் அதை வாங்கினேன். அது 400 பக்கங்களுக்கு மேல் உள்ள புத்தகம். இதுவரை அதில் நான் 30 பக்கங்கள்தான் படித்திருக்கிறேன். எப்போது அந்தப் புத்தகத்தைத் திறந்தாலும் எனக்குத் தூக்கம் வந்துவிடும். அந்த அளவுக்கு எனக்கு ஆங்கிலப் புத்தகங்கள் என்றாலே அலர்ஜி.



ஜான் டிமார்டினி

ஆனால், அப்போதே எனக்கு பிஸ்னஸில் ஆர்வம் இருந்தது. ஒரு நாள் என் அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது "ஆங்கிலமும் பிஸ்னஸ் சக்சஸும் ரிலேட்டட் ஆன விஷயம்" என்று போகிறபோக்கில் சொன்னார். அந்த விஷயம் சட்டென்று என் மூளையில் போய் பதிந்துவிட்டது. அன்றிலிருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஓட ஆரம்பித்தேன். பல ஆங்கிலப் புத்தகங்களை வாங்கிப் படித்தேன். பெரிதாக எந்த முன்னேற்றமும் இல்லை.

பாடசாலைப் படிப்பை முடித்தபிறகு ஒருநாள், 'இன்னவேட்டிவ் சீக்ரெட்ஸ் ஒஃப் சக்சஸ்' (Innovative Secret of Success) என்கிற ஒரு ஓடியோ புத்தகத்தை வாங்கினேன். அதை வாங்கிய பிறகுதான் என் வாழ்க்கை மாறியது. அதில் எனக்குப் புரிகிற ஆங்கிலத்தில் ஒரு இங்கிலீஷ்காரர் பேசியிருந்தார். அதற்கடுத்து ஓடியோ புத்தகங்களைத் தேடித் தேடிக் கேட்க ஆரம்பித்தேன். அதுதான் என்னை மேம்படுத்திக் கொள்ள அதிகமாக உதவியது.

கற்றுக்கொள்வதில் நான்கு வகைகள் உண்டு. 1. புத்தகம் படிப்பது, 2. கருத்தரங்குகளில் கலந்துகொண்டு நிபுணர்களின் பேச்சைக் கேட்பது, 3. ஓடியோக்களைக் கேட்பது, 4. நம் எதிர்காலத் துறையில் யாரிடமாவது உதவியாளராக இருப்பது. இதில் ஓடியோ மூலம் கற்பதில் ஒரு பெரிய நன்மை உண்டு.

காரணம், அந்த ஒன்றைத்தான் நீங்கள் ஓய்வாக இருக்கிற நேரத்தில் செய்ய முடியும். மற்ற மூன்று விஷயங்களுக்கும் நீங்கள் தனியாக நேரம் ஒதுக்க வேண்டும். ஆனால், ஓடியோ மூலம் கற்றுக்கொள்வதற்குத் தனியாக நேரம் ஒதுக்கத் தேவையில்லை. வாகனம் ஓட்டும்போது, வோக்கிங் செல்லும்போது என எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். அதனாலேயே எனக்கு ஓடியோ புத்தகங்கள் மிகவும் பிடித்தது.

நான் அதிகமாக ஓடியோ கஸட்களைக் கேட்பதைப் பார்த்த என் நண்பர்கள், "நீதான் எல்லாத்தையும் கேட்டு முடிச்சிட்டியே. இதோட போதும்" என்று சொன்னார்கள். நானும் சில நாள்கள் அதைக் கேட்காமல் இருந்தேன். ஒரு நல்ல விஷயத்தை நாம் செய்யாமல் இருக்கும்போது கெட்ட விஷயங்கள் தானாகவே நமக்குள் வந்துவிடும்.

அதேபோலத்தான் எனக்கும் நடந்தது. அதற்குபின் என்னால் எந்தவொரு முடிவையும் சரியாக எடுக்க முடியவில்லை. அதனால் மறுபடியும் ஓடியோவைக் கேட்க ஆரம்பித்தேன். இதுவரை நான் 1000 ஓடியோ கஸட்களுக்கும் மேல் கேட்டிருக்கிறேன். அந்த கஸட்களை இன்று வரை பாதுகாத்து வைத்திருக்கிறேன்.

புத்தகங்களுக்கு நூலகம் இருக்கிற மாதிரி, என்னிடம் உள்ள ஓடியோ கஸட்களை வைத்து ஒரு ஓடியோ லைப்ரரி வைக்கலாம் என யோசித்து வைத்துள்ளேன். அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஓடியோ கஸட்களில் தீர்வு இருக்கிறது. அதற்காகவே இதை எல்லோரும் பின்பற்ற வேண்டும்.

புத்தகம் படிப்பதை ஒரு கால கட்டத்தோடு போதும் என்று நினைத்து விட்டுவிடக் கூடாது. நான் பாடசாலையில் படிக்கும்போது என்னுடன் படித்த ஒரு மாணவன் பெரிய பெரிய ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பான் என்று ஏற்கெனவே சொன்னேன் இல்லையா? அவனைச் சமீபத்தில் சந்தித்தேன். அப்போது அவனிடம், "இப்போது என்ன புத்தகம் படிக்கிறாய்?" என்று கேட்டேன்.

"புத்தகமா, அதெல்லாம் பாடசாலையோடு சரி. அதுக்கு அப்புறம் நான் படிக்கவில்லை" என்று சொன்னான். அது மிகப்பெரிய தவறு. அதிகமாகப் புத்தகம் படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க வேண்டும். உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு புத்தகத்தை அடிக்கடி படிக்க வேண்டும். அது உங்கள் வாழ்க்கையை மாற்றும். அதற்கான உதாரணம் ஒன்றைச் சொல்கிறேன்.

'த சீக்ரெட்' புத்தகத்தை எழுதிய எழுத்தாளரான ஜோன் டிமார்டினி (Dr. John Demartini) தனது 16 வயதில் ஹவாய் தீவில் தனியாக இருந்தார். காட்டில் கிடைப்பதைச் சாப்பிடுவது, தண்ணீரில் விளையாடுவது, அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவியாக இருப்பது எனத் தினமும் இதையேதான் செய்துகொண்டிருப்பார்.

ஒரு நாள் அவருக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டு, மூன்று நாள்கள் எங்கேயும் செல்ல முடியாமல் அவரது கூடாரத்திலேயே படுத்துக் கிடந்தார். அந்த மூன்று நாள்களுமே அந்த வழியாகச் சென்ற ஒரு பெண் அவரைக் கவனித்திருக்கிறார். அவரைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்.

ஒரு வழியாகக் குணமாகி வந்த ஜோன் டிமார்டினி, "நான் ஏன் இப்படி இருக்கேன்? நம் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது' என யோசித்துக் கொண்டே வந்தாராம். அப்போது அவரிடம் ஒரு பெரியவர், "தம்பி உன்னைப் பத்தி உனக்குத் தெரியல. உன்கிட்ட நிறையத் திறமை இருக்கு. நீ வாழ்க்கையில் பெரிய ஆளாய் வருவே' என்று சொல்லி 'Think and Grow Rich' என்ற புத்தகத்தைக் கொடுத்தாராம். அந்தப் புத்தகத்தை அவர் ஒரே மாதத்தில் 30 முறை படித்தாராம்.

இது நடந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகு நான் அவரைச் சந்தித்தேன். இப்போது வரை அவர் 30 ஆயிரம் புத்தகங்களுக்கு மேல் படித்திருக்கிறார். பகவத் கீதையை 8 வெவ்வேறு வெர்சன்களில் படித்துள்ளார். அன்று அந்த பெரியவர் கொடுத்த புத்தகத்தை ஒரு முறை மட்டும் படித்திருந்தால், அவர் இன்று இந்த நிலைமையில் இருந்திருக்கமாட்டார்.

எனவே, அதிகமாகப் படியுங்கள், தொடர்ந்து படியுங்கள். நீங்கள் படிப்பதற்கு இடையூறாக எது இருந்தாலும் அதனிடம் இருந்து தள்ளியிருங்கள். வெற்றி உங்கள் வசப்படும். **(மாத்தி யோசிப்போம்)**



# மரணம் துரத்திக்கொண்டிருக்கிறது... ஓடிக்கொண்டிருக்கிறேன்!

செந்தீபன் சக்தீனா

“என்ன மகள் என்னைத் தேடி வந்திருக்கிறாய். எனது நோய் பற்றி உனக்கு எதுவும் தெரியேல்லப் போல அதுதான் என் கையைப் பற்றிப் பிடித்திருக்கிறாய் என்னம்மா” என்கைக்குள் இருந்த அவரது கைகளை விடுவிக்க முயன்று தோற்றார், “கையை விடு பிள்ள”

“என்னையும் ஒரு உயிருள்ள பெண்ணாக நினையுங்கள். என்னை நீங்கள் அரவணைக்க வேண்டாம.; ஆனால், நோயைக் காரணம் காட்டி அந்நியப்படுத்தாதீர்கள். எனது நோய் என் இறப்புக்கு நாள்களை குறித்துவிட்டது. வாழுகின்ற கொஞ்ச நாட்களாவது இப் பூமியில் எனக்கான மகிழ்வை உருவாக்க முயற்சிக்கிறேன,; புற்றுநோய் ஒரு தொற்றுநோய் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் அல்லது தெரிந்து கொள்ளுங்கள்” இவை மார்பகப் புற்றுநோயால் அவதிப்படும் யோகேஸ்வரியின் வேண்டுதல்கள்.

அது ஒரு கடற்கரை கிராமம். தொலைபேசியூடாக அவர் கூறிய அடையாளங்களை வைத்து ஒருவாறு, அந்தப் பஸ்ஸில் இருந்து இறங்கினேன். என்னை எதிர்பார்த்து நின்றவர்போல் அந்த பெண் என்னருகில் வந்து, சிறிது தயக்கத்துடன் நீர் தானா என்னுடன் கதைத்த பிள்ளை என்றார் ஆம்: என்றேன். வாஞ்சையுடன் என் கையைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். பெரிய குடை பிடித்திருந்தார், குட்டைத்தலை முடியுடன், நீண்ட கவுண் அணிந்திருந்தார். நடை தளர்வாக இருந்தது.

ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டே நடந்து கொண்டிருந்தோம்.

**புற்றுநோய் என்பது தொற்றுநோய் இல்லை, இது குடும்ப வழி வரும் நோயும் இல்லை, இன்று தொற்றா நோய்களின் தாக்கம் தான் அதிகமாக இருக்கின்றது. இவ்வாறான தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் அதிகம்.**

பிள்ள உள்ளே போங்கோ இதுதான் என்ர வீடு என்றார். இருவரும் அமர்ந்தோம். சிறிய அமைதிக்குப் பின் அவரே கூறினார். இதுவரையும் இருந்த அந்தக் குழந்தைப்பிள்ளைக்குரிய புன்னகை இப்பொழுது காணாமற் போயிருந்தது.

“பிள்ள எனக்கு புற்றுநோய். புற்று நோய் என்ற காரணத்தால வீட்டில இருந்து என்ன துரத்திப்போட்டினம், அக்கம் பக்கத்தில இருக்கிற எல்லோரும் ஒதுக்கினார்கள் எனக்குஎன்ன நடந்தது என்பது தெரியவில்லை. அவர்கள் இப்படி என்னை ஒதுக்குவதை நினைத்து கவலைப்படத்தான் முடிந்தது. இவைகள் நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டதம்மா. இப்பொழுது அவற்றை நினைத்து எனக்குள்ள கொஞ்ச நேரத்தையும் வீணாக்குவது இல்லை, நான் படைப்பில் ஒரு. பாக்கியசாலி என்று தான் எண்ணுகிறேன் ஏனென்றால் கொஞ்சங்கொஞ்சமாக எனக்கான வாழ்வு முடிந்து கொண்டிருக்கின்றது. ஈரம் வற்றிய கண்ணுக்குள்ளும் இப்பொழுது தரை தொட்ட கண்ணீர்த்துளிகள் நிலத்தில் விழுந்து தெறித்தது.

ஒருநாள் எனது தங்கையின் கணவர் எனக்கு நேரடியாகவே சொன்னார் “உனக்கு புற்றுநோய் எங்களுடன் நீ இருந்தால் இந்த நோய் எங்களுக்கும் தொற்றி விடும். என்ர பிள்ளைகளுக்கும் தொற்றும். ஆகவே நீ வேறெங்கயாவது போ” என்று கூறி எனது உடைமைகளை எடுத்து ஓரமாக வைத்தார்கள். அதைத் தொடாதே இதைத் தொடாதே என்றார்கள். வீட்டின் வெளியோரமாக எனக்கென சிறிய பகுதியை ஒதுக்கினார்கள்.

ஒரு ஓரமாக ஒதுங்கிய வாழ்வு வாழ்ந்தேன். இவையனைத்தும் இரண்டு கிழமைகள் தான். எனது உடைமைகளை எடுத்துக்கொண்டு போகுமாறு கடுமையாகச் சொன்னார்கள் தங்கச்சி குடும்பத்தினர். என்னால் எங்கு செல்வது என்று தெரியவில்லை. கொஞ்ச நாள் அடைக்கலமற்ற வாழ்வு வாழ்ந்தேன். இறுதியில் என் நிலையைப் பார்த்த ஒரு அக்கா தான் அடைக்கலம் தந்தா. இப்ப அக்காவுக்கு உதவியாக நானும் எனக்குதவியாக அக்காவும் இருக்கிறம்.

அக்காவின் மூலம் இப்பொழுது யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் உள்ள “கேன் புற்றுநோய் காப்பகம்”; ஊடாக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருக்கிறேன்.

கேன் புற்றுநோய் காப்பகம் தான் எனக்கு புற்றுநோய் என்று தெரிந்தும், என்னை ஆதரித்த ஒரு இடம். அங்குள்ளவர்கள் என்னை மிக்வும் அன்போடு வழிநடத்துவார்கள். ரேடியோ தெரபி சிகிச்சை முறைதான் எனக்கு வழங்கப்பட்டது. 20 நாள்கள் வரையில் அப்படியே இருக்க வேண்டி ஏற்படும். அப்போது கேன் நிறுவனத்தினர் என்னைப் மிகவும் அன்புடன் கவனிப்பார்கள். நான் இழந்த அத்தனை அன்பையும் அங்கு தான் பெற்றுக்கொண்டேன். எனக்கு சிலவேளைகளில் வருத்தம் தாங்க முடியாத வலியைக்கொடுக்கும். உடனே கேன் நிறுவனத்தினருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தால் கஸ்ரம் பாராது நோயாளர் காவு வண்டியில் வருவார்கள் அது எந்த சூழ்நிலையாக இருந்தாலும் அவர்கள் மறுக்க மாட்டார்கள். என்றார்.

இறுதியாக அவர் கூறினார் “எனக்கான இறுதி நாள்கள் இவை, இருக்கும் கொஞ்ச நாள்களும் மகிழ்வுடன் வாழத்தான் விரும்புகிறேன். புற்று நோய் தொற்று நோய் என்று எங்களை ஒதுக்காதீர்கள் உடல் வேதனை ஒருபுறமிருக்க, மனவேதனையில் நொடிக்கு நொடி செத்துக்கொண்டிருக்கிறேன். எவரை நொந்து கொள்வது என்று தெரியவில்லை” என்றவர் விம்மியழுதார். இது ஒன்றும் புதிதில்லையம்மா அழுகை மட்டும்தான். இப்பொழுது ஆறுதல் என்றார். சிறிது நேரத்தின் பின் அவரிடமிருந்து விடைபெற்றேன்.


வாழ்க்கையின் கடைசி எல்லையில் வாழ்பவர் ஒருவருடன் கதைத்திருக்கிறேன் என்பதை அவராலே அறிந்து எனக்குள் விம்மினேன். மனம் கனத்தது. என்ன ஒரு விசித்திரமான வாழ்க்கை என எண்ண மட்டும்தான் முடிந்தது. அந்த நோயின் வேதனை ஒருபுறம், அந்த நோயைக்காரணம் காட்டி ஒதுக்கப்பட்ட வாழ்வு வாழும் அவரின் இப்போதைய வாழ்வு ஒருபுறம். என்ன ஒரு கொடுமையான வாழ்வு எதை நான் கடிந்து கொள்வது.

புற்றுநோய் ஒரு தொற்றுநோய் என்ற தவறான எண்ணம் எம் மக்கள் மத்தியில் இருந்து நீங்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை புற்றுநோய் வைத்திய நிபுணர் மருத்துவர் நடராஜா ஜெயக்குமாரனை கேட்ட பொழுது அவர் அளித்த பதில் “புற்றுநோய் என்பது தொற்றுநோய் இல்லை, இது குடும்ப வழி வரும் நோயும் இல்லை, இன்று தொற்றா நோய்களின் தாக்கம் தான் அதிகமாக இருக்கின்றது. இவ்வாறான தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் அதிகம். புற்றுநோய்க்கு ஆளானவர்கள் தாங்க முடியாத உடல், உள வலிகளுடன் இருப்பவர்கள் அவர்கள்ள அன்பு செய்ய வேண்டும். இவ்வாறான நிலையில் ஒவ்வொருவரும் விரும்புவது அரவணைப்பைத் தான் நோயுற்றவர்கள் என்று அவர்களைத் அந்நியப்படுத்தக்கூடாது” என்றார்.

மேலும், கூறிய அவர் “புற்றுநோய் ஒருவருக்கு ஏற்படுவதற்கு பாவமும் சாபமும் அதன் காரணங்களும் அல்ல, புற்றுநோய் என்பது நமது உடல் வளர்ச்சியின் ஒரு மாறுபாடுதான் அது. நுண் கிருமிகளால் ஏற்படும் ஒரு வியாதி இல்லை. வளர்ந்து பெருகும் செல்களில் திடீரென ஒரு செல் மட்டும் பிளவுபடுவதில்லை. அது முற்றிலும் மாறுபட்டு முதிராத அளவுக்கு மீறி பிரிந்து பெருகி திசுத்திரளை அதாவது புற்றுநோயை உண்டாக்குகின்றது” என்றார்.

இன்று மனித இனத்தை அச்சுறுத்தி வரும் நோய் புற்றுநோயாகும். புற்றுநோயின் கொடுமை சொற்களால் விவரிக்க இயலாதது. புற்றுநோய் ஒரு தொற்றா நோய் இல்லை என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கான சரியான விழிப்புணர்வு எம் மக்கள் மத்தியில் அவசியம்.

# புவனஸ் அயர்ஸிலிருந்து கத்தோவிச்சேக்கு!




மாஜி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சீனியர் இறந்த செய்தி உலகத்தை எட்டிய மார்கழி இரண்டாம் திகதியன்று ஆர்ஜென்ரீனாவின் தலைநகரான புவனஸ் அயர்ஸில் உலகின் 20 முக்கிய வர்த்தக நாடுகளின் அமைப்பான ஜி 20 இன் மாநாடு நிறைவு பெற்றது. வர்த்தகச் சூழலில் மட்டுமன்றி உலகின் அரசியல் வானத்திலும் மிகச் சிக்கலான பிரச்சினைகள் மையம் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நடந்த இந்த மாநாட்டில் உலகத் தலைவர்களால் ஏதாவது ஒரு விடயத்திலாவது ஒன்றுபட முடியுமா என்ற கேள்வி தலைக்கு மேல் மெல்லிய நூலில் தொங்கும் வாள் போன்று பயங்காட்டிக்கொண்டிருந்தது. ஆனால், உலக வர்த்தக அமைப்பைச் [WTO] சீர்படுத்தவேண்டும் என்ற அமெரிக்காவின் கட்டாயமான கோரிக்கையை மற்றைய தலைவர்கள் ஏற்றுக்கொண்டதன் மூலம் பல சிக்கலான பிரச்சினைகளை எதிரே இருந்தும் நடந்து முடிந்த மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

இலகுவான வர்த்தகச் சூழலை உலக நாடுகளிடையே உருவாக்குவதன் மூலம் சர்வதேச வளர்ச்சியை உண்டாக்குவதுடன் உலக மக்களுக்குப் பல நன்மைகளையும் விளைவிக்கலாம் என்ற எண்ணத்துடன் 1948 இல் ஆரம்பிக்கப்பட்ட "GATT" அமைப்பு 1995 இல் "உலக வர்த்தக அமைப்பு" என்ற பெயருக்கு மாறியது.

"உலக வர்த்தக அமைப்பு" உலக நாடுகளிடையே நடக்கும் வர்த்தகங்களுக்கு இடையேயான வரிகளை முழுவதுமாக ஒழித்துக்கட்டுவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பல வகைகளில் அவ்விடயத்தில் வெற்றி பெற்றும் வருகிறது. அதனால் சர்வதேச ரீதியில் பொதுவாகப் பார்த்தால் பல பொருட்களின் விலைகள் குறைந்திருக்கின்றன, பொருளாதார வளர்ச்சியும் அதிகரித்திருக்கிறது.

ஆனால், டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாகியதிலிருந்து உலக வர்த்த வரிகள் சம்பந்தமான ஒரு வர்த்தகப் போர் ஆரம்பித்திருக்கிறது. அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் பல தங்களை ஏமாற்றிவருவதாகக் குற்றஞ்சாட்டும் அமெரிக்கா புதிய இறக்குமதி வரிகளை வெவ்வேறு நாடுகளுடனும், பிராந்தியங்களுடனும் ஆரம்பித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம், ஆபிரிக்க நாடுகளின் அமைப்பு ஆகியவைகளுடன் அமெரிக்கா செய்யும் வர்த்தகங்கள் சிலவற்றில் புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அத்துடன் சீனா, ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் அமெரிக்காவை வர்த்தகத்தில் ஏமாற்றுவதாகக் குறிப்பிடும் டிரம்ப் அந்த நாடுகளிலிருந்து அமெரிக்கா செய்யும் இறக்குமதிப் பொருட்களுக்குப் புதிய கட்டுபாடுகளையும் வரிகளையும் விதித்திருக்கிறார்.

உலகின் முதலாவது பாரிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, அந்த இடத்தை விரைவில் அடையப் போகும் சீனாவுடன் தொடுத்திருக்கும் வர்த்தகப் போர் மாதத்துக்கு மாதம் மோசமாகிக் கொண்டு வருகிறது. புதுவருட நாள் முதல் மேலும் புதிய வரிகளைச் சீனாவின் இறக்குமதிப் பொருட்களுக்கு விதிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இன்னொரு பக்கம் உலகின் பெரும் பணக்கார நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியா, திட்டமிட்டுத் தன் குடிமகனான ஜமால் கஷோஜ்ஜியைக் கொலை செய்ததாக நம்பப்படுவதால் சவூதியின் பிரதிநிதியாகப் பங்கெடுத்த இளவரசன் முஹம்மது பின் சல்மானைப் பெரும்பாலான தலைவர்கள் ஒதுக்கிவைக்கிறார்கள்.

ரஷ்யாவுக்கும் பக்கத்து நாடான உக்ரேனுக்கும் நீண்ட காலமாக நடந்துவரும் போரில் சமீப வாரங்களில் ஏற்பட்டிருக்கும் இழுபறியால் ஜனாதிபதி புத்தினை ஐரோப்பியத் தலைவர்களும் அமெரிக்கரும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மாநாட்டுச் சமயத்தில் திட்டமிடப்பட்டிருந்த புத்தின் டிரம்ப் சந்திப்பு நடக்கும், நடக்காது என்று பல தடவைகள் அறிவிக்கப்பட்டபின் நடக்காது என்று அறுதியாக்கப்பட்டது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல டிரம்ப்பின் கட்டாயக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் புவனஸ் அயர்ஸில் சந்தித்த தலைவர்கள் "உலக வர்த்தகம் சம்பந்தப் பற்றி எங்களிடையே பல கருத்து வேறுபாடுகள் இருப்பினும் சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்காக நாம் ஒன்றுபட்டுப் போராடுவோம்," என்று எழுதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அமெரிக்கா சீனா வர்த்தகப்போரில் அமெரிக்கா புதுவருடம் முதல் நிறைவேற்றுவதாக அறிவித்திருந்த வர்த்தக இறக்குமதி வரிகளைத் தள்ளி வைப்பதென்று அறிவித்திருக்கிறது.

உலகின் பல நாடுகளில் ஏற்பட்டிருக்கும் போர்களால் ஐரோப்பிய நாடுகளும், ஆஸ்ரேலியா, அமெரிக்காவும் நேரிட்டு வரும் கட்டுப்பாட்டை மீறிய அகதிகள் பிரச்சினைகளைகளுக்கான அடிப்படையான காரணங்களை நேரிட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ஒன்றுபட்டு போராடவும் தலைவர்கள் ஒன்றுபட்டனர்.

டிரம்ப்பின் இன்னொரு கோரிக்கையான "உலகக் காலநிலை மாற்றத்தைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் மாற்றம்," என்பதையும் உலகத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. 'உலகக் காலநிலை வெம்மையாகி வருவதால்தான் உலகில் இயற்கை அழிவுகள் சமீப வருடங்களில் அதிகரித்து வருகின்றன. காலநிலை வெம்மையாகி வருவதன் காரணம் மனிதர்களின் நடவடிக்கைகள்தான்,' என்ற உலகின் பெரும்பாலான விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவை முழுமையாக மறுத்து வருபவர் டிரம்ப். உலகின் பெரும்பாலான தலைவர்களோ அந்த ஆராய்ச்சிகளின் முடிவை ஏற்றுக்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுப்புற சூழல் அமைப்பின் தலைமையில், அம் மாற்றங்களைக் கட்டுக்குள் கொண்டு வரப் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

இரண்டாம் திகதி மேற்குறிப்பிட்ட மாநாடு முடிந்தபின் மூன்றாம் திகதி போலந்தில் , கத்தோவிச்சே நகரில் ஐ.நாவின் காலநிலை மாநாடு ஆரம்பித்திருக்கிறது. 2015 இல் பாரிஸில் நடந்த காலநிலை மாநாட்டின் அடுத்த கட்டம்தான் இந்த மாநாடு.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா காலத்தில் நடந்த பாரிஸ் மாநாட்டில் சந்தித்த உலகத் தலைவர்கள் பெரும்பாலாரிடையே உலகக் காலநிலை வெம்மையடைவது பற்றிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதனால், அதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை உலக நாடுகள் தாமே எடுப்பதென்று மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. அதனால், அந்த நடவடிக்கைகள் என்னவென்பது தெளிவாக எழுதிக் கைச்சாத்திடப்படவில்லை.

## உலக யன்னல்

தேசமித்ரன்

ஆனால், கடந்த வருடங்களின் காலநிலை ஆராய்வுகள் உலக நாடுகள் தமது உறுதிமொழிகளை நிறைவேற்றவில்லை என்பதையே காட்டுகிறது. மனித நடவடிக்கைகளால் உலகச் சூழலில் கலக்கும் நச்சுக் காற்றுக்களின் அளவு அதிகரித்திருக்கிறது. காலநிலை மேலும் வேகமாக வெம்மையாகிறது. இன்னொரு பக்கம் ஐக்கிய அமெரிக்காவில் புதிய தலைமை எதிர்க்கருத்துடன் பிறந்திருக்கிறது.

எனவே கத்தோவிச்சேயில் நடந்து வரும் காலநிலை மாநாடு பாரிஸ் மாநாடு போலன்றி மிகவும் பலமான சர்ச்சைகளை எதிர்நோக்குகிறது. பொருளாதார அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியம் என்று பொதுவாக நம்பப்படுகிறது. அவ்விருத்திகளுக்காகச் செலவு செய்யப்படும் எரிபொருட்களும், மனிதர்களின் கொள்வனவு நடவடிக்கைகளும் குறைக்கப்படவேண்டும். பாவிக்கப்படும் எரிபொருட்கள் இயற்கையை மாசுபடுத்தாதவையாக மாற்றப்படவேண்டும் என்பவைகளே இம்மாநாட்டில் பல வழிகளில் சொல்லப்படுகிறது.

அம்மாற்றங்களை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளுமா அல்லது இதுவும் இன்னொரு காலநிலை மாநாடு என்ற இலக்கமாகிவிடுமா?

# காலநிலை மாற்றம் அழித்துவரும் கலாச்சாரம்




மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளில், நீர் நிலைகளின் அருகாமையில் ஐ.நாவினால் பாதுகாக்கப்படவேண்டிய உலகின் கலாச்சார ஸ்தலங்கள் 49 இருக்கின்றன. அவைகளில் 37 வெள்ளப் பெருக்கு போன்ற நீரினால் வரும் அபாயங்களினால் அழிந்துபோகும் ஆபத்தில் இருக்கின்றன என்று குறிப்பிடப்படுகிறது.

இதன் முக்கிய காரணம் வெம்மையாகமாறிவரும் எமது காலநிலையாகும். மனிதர்களின் நடவடிக்கைகளால் சூழலில் அதிகரித்துவரும் கரியமில வாயுவின் விகிதாசாரம் புவியின் பல பாகங்களிலும் நூற்றாண்டுகளாக உறைந்து கிடக்கும் பனிப்படலங்களையும், பனிமலைகளையும் உருகச் செய்கிறது. அதனால் உலகிலிருக்கும் உயரம் குறைந்த கடற்கரைப் பிரதேசங்களில் கடல் மட்டம் அதிகரித்து வருகிறது.


மத்திய தரைக் கடற்பிராந்தியத்தில் மட்டும் வருடாவருடம் கடல் மட்டம் சராசரியாக 3 மி.மீற்றர்களால் அதிகரித்து வருகிறது. 2100 ம் வருடத்திற்குள் மத்திய தரைக் கடல் சுமார் 140 செ.மீற்றர்களால் அதிகரித்திருக்கும் என்கிறார்கள் புவியியல் ஆராய்ச்சியாளர்கள். வெவ்வேறு இடங்களில் நீர்மட்ட அதிகரிப்பு வித்தியாசமானது. சில இடங்களில் அது ஏற்கனவே 100 செ.மீற்றருக்கும் அதிகமானதாக இருக்கிறது.

இத்தாலியின் வெனிஸ், கிரவேஷியாவின் ஸ்பிளிட் போன்ற நகரங்களில் இருக்கும் கலாச்சார ஸ்தலங்களைப் பாதுகாக்கப் பல வருடங்களாகவே பல ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு முறைகளில் முயற்சித்து வருகிறார்கள். ஆனாலும், அவைகளையும் மீறி வெள்ளப் பெருக்குகள் உண்டாவது வழக்கமாகிப் போயிருக்கின்றது.

# கிரவேஷியாவின் பிறப்பிடம் - நின்

மகனின் விருப்பத்துக்கு இணங்கி அடுத்த நாள் காலையை ஸடார் கடற்கரையில் நீச்சலடிப்பதற்காக ஒதுக்கினேன். ஸடாரின் பல சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்குப் போக விருப்பமிருந்தாலும் சிறு வயதான மகனுடன் பயணிக்கும்போது அவனது ஆசைகளையும் பூர்த்தி செய்தால்தான் அவனுக்கும் பயணத்தில் ஆர்வமாக இருக்கும். அந்த ஆர்வத்தைப் பயன்படுத்தி அவனுக்கும் அப்பிரதேசத்தின் முக்கிய விடயங்களைத் தெரியவைக்கலாம்.

அந்த இசைத்துறைமுகத்தில் மட்டுமல்ல அதன் இரண்டு பக்கமாக எங்கே நடந்தாலும் வெவ்வேறு விதமான அமைப்புக்களைக் கொண்ட கடற்கரை இருப்பதால் அலுப்பில்லாமல் நீந்தி ரசிக்க முடிகிறது. இப்பகுதியில் பல தங்கும் விடுதிகளும் கடற்கரை யோரமாகவே இருக்கின்றன.




அதனால் பல நாட்டின மக்களையும் நீந்தும்போதும், நடந்து போகும்போதும் சந்திக்க முடிகிறது.

அன்றையப் பிற்பகல் பயணமாக ஸடாருக்கு வெளியேயிருக்கும் நின் பகுதிக்குப் போவது என்று நிச்சயமானது. ஸடார் நகரிலிருந்து வடக்கில் சுமார் 15 கி.மீ தூரத்தில் இருக்கிறது நின் பிராந்தியம். அடிக்கடி பேருந்துகள் நகரிலிருந்து அப்பகுதிக்குப் போய்வருகின்றன.

இன்று கிரவேஷியாவின் முக்கிய சுற்றுலாப் பிராந்தியங்களில் ஒன்றாகக் கருதப்படும் நின் உப்பங்கழிப் பிராந்தியத்தில் தான் கிரவேசியாவின் அரசியல், சமயம், கலாச்சார இணைப்பு ஆகியவற்றுக்கான விதை விதைக்கப்பட்டது. நீண்டகாலமாக அப்பிரதேசத்து அரசர்கள், பிரபுக்கள், சமய பீட உயர்மட்டத்தினர் ஆகியோரின் வாசஸ்தலங்களும் நின் நகரில்தான் இருந்தன.

அங்கேதான் கிரவேஷியா என்ற நாடு ஸ்தாபிக்கப்பட்டது. கிறீஸ்துவுக்கு முன்னர் சுமார் 800 ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதி முதல் 900 நூற்றாண்டுப் பகுதியியில் இல்லீரியர்களால் அங்கே ஏனோனா என்ற பெயரில் ஒரு குடியிருப்பு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ரோமர்களின் ஆட்சிக்காலத்தில் நின் ஒரு முக்கிய வர்த்தகத் துறைமுகமாகியது. நின்னிலிருந்து அதிக தூரத்தில் இல்லாதஸடாரும் அக்காலத்திலிருந்தே முக்கிய துறைமுகமாக விளங்கியது. அதனால், அக்காலம் முதலே இப்பிராந்தியம் சுபீட்சமான இடமாகவும் இருந்தது என்பதை அங்கேயிருக்கும் பல சரித்திரகால ஆதாரங்கள் மூலம் அறியமுடிகிறது. அருங்காட்சியகத்திலிருக்கும் அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆதாரங்கள் தவிர பல கட்டிடங்கள் இப்போதும் இடிபாடுகளாக அங்கே காணக்கிடக்கின்றன.

கிரவேஷியாவின் 7 அரசர்கள் நின் நகரில்தான் தங்கள் அரசகிரீடத்தை அணிந்துகொண்டார்கள். அங்கிருக்கும் குன்றிலிருக்கும் புனித நிக்கொலாஸ் தேவாலயம்வரை குதிரையில் ஏறிச் சென்று அத்தேவாலயத்தைச் சுற்றி உருண்டு சென்று தங்கள் வாளை உயர்த்தி உலகின் சகல திக்குகளையும் சுட்டிக்காட்டி "நான் இந்த நாட்டின் அரசனாகச் சகல பணிகளையும் நிறைவேற்றுவேன்," என்று பிரமாணம் செய்துகொள்வார்கள் என்று அறிய முடிகிறது.

நின் நகரின் புதிய பாகம் இன்று சுற்றுலாத் துறைக்குப் பிரதானமான இடத்தைக் கொடுத்திருக்கிறது. எட்டுக் கிலோ மீற்றர் தூரக் கடற்கரை அங்கே கிடக்கிறது என்று குறிப்பிடும்போது சுற்றுலாப் பயணிகளுக்கு அப்பிரதேசம் எவ்வளவு ஆரவமானதாக இருக்கும் என்று தனியாகச் சொல்லத் தேவையில்லை. இவற்றில் பெரிய குவீன்ஸ் பீச் மட்டும் 3 கி.மீற்றர் தூரத்துக்குப் பரந்து கிடக்கிறது. அக்கடற்கரை வெள்ளை மணலால் மட்டுமன்றி ஒருவிதமான கறுப்புச் சேற்று மண்ணாலும் அமைந்திருக்கிறது. அச்சேறு மருத்துவக் குணங்கள் கொண்டது என்று கருதப்படுவதால் அந்தக் கறுத்த மண் பகுதியில் தங்கள் மீது சேறு பூசிக்கொண்டு அலைபவர்களைக் காணலாம். தவிர, கேளிக்கை ஸ்தலங்களும், கடைகளும், தங்கும் விடுதிகளுமான் நவீனகாலத்தைப் பிரதிபலிக்கிறது. அங்கிருந்து தள்ளி ஒரு தீவில் இருக்கிறது பழைய நின் நகரம்.

பாலமொன்றால் இணைக்கப்பட்டிருக்கும், அதுதான் ஆரம்பகால நின் ஸ்தாபிக்கப்பட இடம். பழைய நின் நகரம் பல சிலைகளையும், இடிபாட்டுக் கட்டடங்களையும் கொண்டு வித்தியாசமான அழகான இருக்கிறது. அருங்காட்சியகமொன்று, தேவாலயங்கள் பல, சிலைகள் பல அச்சிறிய இடத்தில் பரவலாக இருக்கின்றன. தேவாலயங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று [The Holy Cross] புனித சிலுவைத் தேவாலயம். நீளம் 7.80 மீ, அகலம் 7.60 மீ, உயரம் 8.20 மீ அளவிலிருக்கும் அதுதான் உலகின் மிகச்சிறிய கிறீஸ்தவ ஆலயம் என்கிறார்கள். அது 100 விகித உண்மையோ தெரியாது, ஆனால், நிச்சயமாக உலகின் மிகச்சிறிய தேவாலயங்களில் ஒன்றுதான். நின் நகரம் கிரவேஷியாவின் கிறீஸ்தவ தேவாலயத்தின் மையமாக இருந்த காலங்களில் மேற்றிராணியாரின் ஆலயமாக அது இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கி.பி 10 நூற்றாண்டில் பாப்பாண்டவருக்கெதிராகக் குரலெழுப்பி கிரவேஷியாவின் தேவாலயங்களில் அவர்களது மொழியை ஒலிக்க வைத்த மேற்றிராணியார் கிரகோரியின் சிலையையும் அங்கே காணலாம்.



இதை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஐ.நாவின் உலகக் கால நிலை பற்றிய எதிர்கால அறிக்கை ஸடார் உட்பட்ட கிரவேஷியாவின் பெரும்பாலான கரையோர நகரங்களைப் பற்றி அதிர்ச்சியான செய்திகளை 'வெளியிட்டிருக்கிறது. நான் ஏற்கனவே எழுதியிருந்த டுப்ரோவ்னிக் மற்றும் இங்கே குறிபிட்டிருக்கும் ஸடார் நகரம் ஆகியவை. இன்னும் சில பத்தாண்டுகளில் கடலுக்குக் கீழே மூழ்கிவிடும் என்கிறது அந்த அறிக்கை. நின் பழைய நகரம், டுப்ரோவ்னிக் பழைய நகரம் ஆகியவைகள் நீருக்குள் மூழ்கி விளையாடுகிறவர்களை ஈர்க்கும் பிராந்தியங்களாக மாறிவிடும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

அந்த அறிக்கை மேலும், மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள கரையோர நகரங்கள், அவைகளில் இருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையான கட்டடங்கள் எல்லாவற்றுக்குமே கதி இதுதான் என்கிறது.

அந்த அறிக்கை மேலும், மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள கரையோர நகரங்கள், அவைகளில் இருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையான கட்டடங்கள் எல்லாவற்றுக்குமே கதி இதுதான் என்கிறது. அத்துடன் கிரவேஷியாவின் கரையோர நகரங்கள் எவையுமே மனித வாழ்க்கைக்கு உகந்தவையாக இருக்காது.

காலநிலை வெம்மைப்படுதலை மிதமாகக் கணக்கிட்டால் கூட 2100 ம் ஆண்டளவில் உலக வெப்பநிலை சராசரி 3குசி யால் உயர்ந்துவிடும். அதன் விளைவாக கிரவேஷியாவின் அதிரியாட்டிக் கரையோரங்களில் நீர் மட்டம் சுமார் 4.3 9.9 மீற்றர்களால் உயர்ந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே நெஞ்சு திடுக்கிடுகிறது.

கடந்த வருடம் ஸடார் நகரம் உட்பட்ட வேறு நகரங்களின் பல பகுதிகளும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. ஸடார் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் அத்தனையும் நீருக்குக் கீழே போயிருந்தன என்பதைச் செய்திகள் மூலம் அறிந்துகொண்டிருக்கிறேன். இவ்வருடமும் அதே நிலைமையை இந்த நகரங்கள் சந்தித்தன.

இப்படியே போனால் எனது மகன் வளர்ந்து இப்பிரதேசங்களுக்குச் சுற்றிப்பார்க்கப் புறப்படும் காலத்தில் இவ்விடம் நீர்மட்டத்துக்கு மேலே இருப்பதே சந்தேகம்தான்.

தொடரும்...

# பலம் சேர்க்கும் அம்மன் வழிபாடு!

புனர்பூ தோஷங்களைப் பற்றி கடந்த பாகங்களில் பார்த்தோம். அதற்கான பரிகாரங்களைப் இப்போது பார்க்கலாம்.

புனர்பூ தோஷம் என்பது சனிபகவான் மற்றும் சந்திரபகவான் இணைவதால் ஏற்படும் தோஷம் என்பதை நாம் அறிவோம். சனிபகவான் ஒரு ராசியைக் கடக்க இரண்டரை ஆண்டுகள் ஆகும். அதேசமயம் சந்திரன் ஒரு ராசியைக் கடக்க வெறும் இரண்டே கால் நாட்கள் மட்டுமே ஆகும்.

சனி, ஈஸ்வரன் பட்டம் பெற்று “சனீஸ்வரன்” என்று அழைக்கப்படுகிறார் என்ற கதை விளக்கம் உண்டு, ஆனால்நான் அதற்குள் செல்லவில்லை.

உண்மையில் “சனை” என்றால் மெதுவாக என்று அர்த்தம். “சரம்” என்றால் வேகம் என்று பொருள். நகருதல் என்றும் அர்த்தம். எனவே இவரை “சனைச்சரம்” என்றுதான் அழைக்கப்பட்டார், இதுவே மருவி சனீஸ்வரன் என்று நிலைத்தது.

சனைச்சரம் என்றால் மெதுவாக நகர்பவர் என அர்த்தம் ஆகும்.

ஆனால் சந்திரன் “ மன காரகன்” மனம் என்பது எவ்வளவு வேகமானது என்பதை நான் சொல்லத்தேவையில்லை. நீங்களே அறிந்ததுதான்.

இப்போது உங்களுக்கேப் புரிந்திருக்கும், இரட்டை மாட்டு வண்டியில் ஒருமாடு வேகமானதாகவும், மற்றொரு மாடு மெதுவானதாகவும் இருந்தால் வேலைக்கு ஆகுமா? அதுபோலத்தான் இந்தக் கிரக இணைவு.

மனம், எண்ணம் வேகமாக இருக்கும், ஆனால் உடல் ஒத்துழைக்காது.

அதாவது இரவு படுப்பதற்க்குமுன் “நாளைக்கு நேரமா எந்திரிக்கனும். 7 மணிக்கெல்லாம் அவரை பார்த்துவிட்டு, 9 மணிக்கெல்லாம் வங்கிக்கு போய்விட்டு, 9.30க்குள் அலுவலகம் போய்விட வேண்டும்“ என்றெல்லாம் பிளான்பண்ணி , காலையில் எழும்புவதே 7.30 ஆகத்தான் இருக்கும். மொத்த பிளானும் காலி!

இதுதான் ஐயா நிதர்சனம். இதைப் பரிகாரங்களால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியாது.

உங்கள் பழக்கவழக்கத்தால் மட்டுமே மாற்றியமைக்க முடியும்.



மிக முக்கியமாக “தியானம் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தும்.”

என்னால் தியானத்தில் அமர முடியவில்லை, அமர்ந்தாலும் ஏதேதோ கற்பனைகள் ஓடுகிறது, என்பவர்களுக்கு...

“தியானத்தில் அமர்ந்து ஏதாவது ஒரு மந்திரத்தை உச்சரிக்கிறீர்களா? ஆம் என்றால் இனி எந்த மந்திர உச்சாடனமும் செய்யாதீர்கள்.

“ கண்களை மூடி உங்கள் கவனத்தை உங்கள் மூக்கு நுனியை மட்டும் கவனியுங்கள், அதாவது எந்த மூக்கின் வழியாக (வலதா,இடதா) சுவாசம் நடைபெறுகிறது என்பதை மட்டும் கவனியுங்கள்”

சத்தியம் செய்கிறேன்... அதிகபட்சம் 15 நாட்களில் உங்கள் தியானத்தில் எந்தக் கற்பனைகளும், எண்ணங்களும் மனம் அலைபாயும் செயல்களும் வரவே வராது.

மனம் ஒருமுகப்படும். இப்போது உங்களுக்குப் பிடித்த மந்திரத்தை மனதால் உச்சாடனம் செய்யுங்கள். அனைத்தும் உங்கள் வசப்படும். இதுவே சித்தர்கள் சொன்ன ரகசியம்.

சரி இப்போது ஆலயப் பரிகாரங்களை பார்க்கலாம்,

சனி அம்சம் நிறைந்த பெருமாள் உங்கள் ஊரில் இருக்கிறாரா?, அல்லது சந்திர ஸ்தலம் இருக்கிறதா? அங்கு செல்லுங்கள். வளர்பிறை காலத்தில் திங்கட்கிழமை அன்று இரவு முழுவதும், அல்லது பௌர்ணமி நாளில் இரவு முழுவதும் திறந்தவெளியில் இருந்து பெருமாளை தரிசனம் செய்துவிட்டு வாருங்கள்,

அதன் பிறகு ஏற்படும் அற்புதத்தைப் பாருங்கள்.

வேறு ஏதாவது பரிகாரம் உண்டா? உண்டு.

சனி சந்திரன் சேர்க்கை என்பது மன உறுதியைக் குலைக்கும், எனவே காலை சூரியோதயத்தில் அதிலும் அருணோதயத்தில்( சூரிய பகவானின் தேரோட்டி அருணன் ஆவார், சூரிய உதயத்திற்கு முன்பு தேரோட்டியான அருணனே முதலில் தோன்றுவார்) ஆதித்யஹிருதயம் படிக்கவோ அல்லது கேட்கவோ செய்யுங்கள். அது மன உறுதியைக் கொடுக்கும். எடுக்கின்ற முயற்சியில் தெளிவும் வெற்றியும் கிடைக்கும்.

ஸ்ரீ அனுமனுக்கு வெண்ணெய் சாற்றி வழிபட மன உறுதி கிடைக்கும்.

சக்திவடிவான அம்மன் ஆலயங்களில் தொடர்ந்து வழிபாடு செய்ய நல்ல பலன் கிடைக்கும்,

ஐயப்பனுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து வழிபட நல்லது நடக்கும். எல்லை மற்றும் காவல் தெய்வங்களான அதிலும் பெண் தெய்வ்ங்களை வழிபட அற்புதமானப் பலன்கள் கிடைக்கும் ( திரௌபதி அம்மன், மாரியம்மன், மாகாளி போன்ற தெய்வங்கள்).

இன்னும் சில..

மாற்றுதிறானாளிகளுக்கு முடிந்த வரை உதவுங்கள். வசதி இருந்தால் மூன்றுசக்கர வாகனம், ஊன்றுகோல், இன்னபிற வசதிகளை செய்து தாருங்கள்.

ஆன்மிக நடைப்பயணம் செல்பவர்களுக்கு வசதிகளைச் செய்து தாருங்கள். தண்ணீர் பந்தல், நீர்மோர் வழங்குதல் போன்ற தானங்களைச் செய்யுங்கள்; வாழ்க்கை சிறப்பாகும்.

இன்னும் சில தோஷங்கள், பரிகாரங்களை அடுத்தடுத்து பார்ப்போம்.

---

12-ம் பக்க தொடர்ச்சி...

மூலம் சட்டத்திற்கு அப்பால் மனித உயிரை எடுக்க முடிகிறது.

1 மரண தண்டனை நிறைவேற்றுதல்
2 மனித உரிமைகள் சட்டத்தினால் விதிக்கப்படும் குறித்த சில ஆகக்குறைந்த பாதுகாப்புக்களுக்கு முரணாகாமல் நீதி நடைமுறையின் விளைவாக செய்யப்படுதல்.
3 சட்ட முறையானது யுத்தங்களின் விளைவான இழப்புகள் அதாவது சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு ஏற்ப பாதுகாக்கப்படும் ஆட்களுக்கு வைக்கப்படாத முறையில் செய்யப்படும் உயிர் போக்கல் ஏற்கப்படுகிறது.

மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய சமவாயத்தில் சில சந்தர்ப்பத்தில் உயிரைப் அதற்கான வழிமுறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன அவை யாவன

1 சட்டமுறையற்ற வன்முறையில் இருந்து மக்களை பாதுகாத்தல்.
2 சட்டபூர்வமான கைதிகளை சட்டபூர்வமான கைது செய்வது சட்டப்பூர்வமான தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் தப்பி ஓடுவதைத் தடுப்பதற்காக.
3 கழகம் ஒன்றை அடக்குவதற்கு எடுக்கப்படும் சட்டபூர்வமான நடவடிக்கை என்பவற்றில்

மரண தண்டனை உலகில் சட்டபூர்வமாகவும் அதேவேளை நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் சில அரசுகள் மரணதண்டனையை சட்டத்தால் தடை செய்துள்ள போதும் விஷயங்களில் மட்டும் விதிவிலக்காக ஏற்படுகின்றது.

உதாரணமாக யுத்தத்தின்போது புரியப்பட்ட குற்றங்களுக்கு மற்றும் சில நாடுகள் மரண தண்டனையை விடுகின்றன மாறாக சில நாடுகள் மரணதண்டனையை இல்லாதபோதும் நிறைவேற்றுவதில்லை.

இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம் இலங்கை சட்டங்களில் மரண தண்டனை ஏற்பாடு காணப்படுவதுடன் நீதிமன்றம் மரணதண்டனை விதிக்கப்படுவது உண்டு ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை.

மரண தண்டனையை ஒழிக்க பேரரசுகள் உள்ளபோதிலும் காணப்படுகின்ற நிலை காரணமாக மரண தண்டனையை பயன்படுத்துவதற்கான உரிமையை தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஆயினும் முன்னாள் யுகோஸ்லேவியா வுக்கான சர்வதேச குற்றவியல் நியாயசபை ஆண்டுக்கான சர்வதேச குற்றவியல் நியாய சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மரண தண்டனையை முற்றாக தடை செய்துள்ளன.

சர்வதேச சட்டமானது எல்லாவிதமான திட்டங்களையும் தடைசெய்யவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் உயிர் வாழ்வதற்கான உரிமை பூர்வமானது அல்ல. சர்வதேச மனிதாபிமான சட்டமானது முரண்பாடுகளின் உபயோகிக்கப்படுகிறது. ஆயினும் பொதுமக்கள் அல்லது தமது ஆயுதங்களை கீழே வைத்துள்ள போராளிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என கருதப்படுகின்றனர்.

இதுதவிர மொழியுரிமை, பெண்களுக்கான உரிமை, மற்றும் சிறுவர் உரிமைகள், முதியவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகள், நல்லிணக்கம் என பல்வேறு உரிமைகளை மனித உரிமை சட்டம் பாதுகாக்கின்றது.

எனினும் மனித உரிமை சட்டத்தில் உள்ள சில தரவுகள், மனித உரிமை மீறல்கள் ஏற்படுவதை தடுக்கிறது எனலாம்.

இதுவரை இலங்கை, ரோஹிங்யா போன்ற நாடுகளில் இடம்பெற்ற யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் நடைமுறை இடம்பெறாமையும் மனித உரிமை சட்டத்தின் இலகு தன்மையை காட்டுகிறது.

மனிதர்களின் உயிரை பறிக்கும் உரிமையும் அவர்களின் அடிப்படை உரிமகளை பறிக்கும் உரிமையும் எவருக்கும் இல்லை எனக் குறிப்பிடும் சட்டம் அவ்வாறு சட்டத்தை மீறி செயற்படும் நாடுகளின் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று கொடுக்கவும் தவறுதலாகாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைபிரகடன குழுவானது இலங்கை போன்ற நாடுகளில் மீறப்பட்ட மற்றும் இன்றும் மீறப்படுகின்ற உரிமை மீறல்கள் தொடர்பில் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்பதோடு எமது நாட்டின் மனித உரிமை திணைக்களமும் இத்தினத்தில் மட்டும் விழிப்புணர்வை கொடுக்காமல் இலங்கை முழுவதும் வெளிச்சத்தை காணும் வரை விழிப்புணர்வை தொடர வேண்டும்.



# சொல்லேர் உழவு

# மனமும், நெஞ்சும் ஒன்றா? 11

கவிஞர் மகுடேசுவரன்


சொற்களை அறிவது என்னும் நெடும் பயணத்தை மேற்கொள்வதற்குப் பல்வேறு வழிகள் உள்ளன. அகராதியின் துணையை நாடுவது, பேச்சுத் தமிழை ஊன்றிக் கேட்பது, வட்டார வழக்கில் வழங்கப்படும் தனித்தன்மையுள்ள சொற்களை இனங்காண்பது, சொல் வேட்கையோடு இலக்கியங்களைப் படிப்பது,செய்யுள்களைப் பொருளுரை பொழிப்புரை விளக்கவுரையோடு கற்பது என எண்ணற்ற வழிகள் இருக்கின்றன.

பேச்சுத் தமிழை ஊன்றிக் கேட்டல் என்னும் முறைமையில் நம்முடைய முயற்சியே இராது. பேசிக் கொண்டிருப்பவரின் மொழிகளுக்குச் செவிகொடுத்தால் போதும். அவருடைய சொற்களை நாம் தொடர்ந்தறிந்தபடியே இருக்கலாம். அதைக் குறித்து நான் பிறகு விளக்குகிறேன்.

அகராதியின் துணையை நாடுவது என்பதை முதலாவதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அகராதியின் வழியாகவே சொற்களை எப்படி அறிந்து நினைவிற் கொள்வது? முன்பே சொன்னதுதான், அகராதியைக் கதை நூல் படிப்பதைப்போல் தொடர்ந்து படித்துச் செல்வது இயலாது. அவ்வப்போது நமக்குவேண்டியசொல்லின்பொருளை அறிவதற்காகவே அகராதியைப் படிக்க வேண்டியிருக்கிறது.

எப்போதாவது நமக்குத் தேவைப்படுகின்ற சொல்லின் பொருளை அறிவதன் வழியாகவே நமக்கு வேண்டிய சொல்லறிவை மிகுதியாகப் பெற்றுவிட முடியாது. அந்நிலையில்தான் ஒரு சொல்லைக் குறித்து அறியத் தொடங்கும்போது அச்சொல்லின் முதல் அசையைத் தொடக்கமாகக் கொண்ட அனைத்துச் சொற்களையும் ஒருசேர அறிந்து வைப்பது என்னும் வழிமுறையைச் சொன்னேன்.

மனம் என்ற சொல்லின் பொருளை அறியத் தொடங்குகையில் 'மனம் என்பதை முன்னொட்டாகக் கொண்ட



நூற்றுக்கணக்கான சொற்களின் பொருள்களையும் அப்போதே அறிந்துகொள்வது' என்னும் தொகுப்பு முறை.

மனக்கசப்பு, மனக்கசிவு, மனக் கடினம்,மனக்கண்,மனக்கலக்கம்,மனக் கவலை, மனக்கவற்சி, மனக்களிப்பு, மனக்கனிவு, மனக்காய்ச்சல், மனக் கிடக்கை, மனக்கிலேசம், மனக்குருடு, மனக்குழப்பம் என்று தொடங்கும் அச்சொற்களின் அணிவரிசை இறுதியாக மனனம் என்ற சொல்லில் முடிகிறது.

மனம் என்கின்ற ஒரு சொல் வழியாக நெஞ்சம் என்பதைக் குறிக்கும் ஒரு பொருளோடு தொடங்கியது நம் சொற்றேடல். அதற்குப் பின்னொட்டுகள் அமைந்து பொருள் கூட்டியபோது பற்பல பொருள்களைப் பெற்றுவிட்டோம். இவ்வாறு அறிவதன் வழியாக பின்னொட்டுச் சொற்களின் தனிப்பொருளையும் நாம் அறிந்தவர்களையும் அறிந்தவர் களாகிறோம்.

கசப்பு, கசிவு, கடினம், கண், கலக்கம், கவலை, கவற்சி, களிப்பு, கனிவு என்று கைந்நிறைந்த சொற்களை அறிந்து விட்டோம். அவற்றில் பல சொற்களின் பொருள் நமக்கு முன்பே தெரியும் என்றாலும் இப்போது துலக்கமாகத் தெரிந்து கொண்டோம். கவலை என்பதற்கும் கவற்சி என்பதற்கும் வருத்தம் என்கின்ற ஒரே பொருள்தான். கவல் என்பதிலிருந்து கவலை (கவல்+ஐ) தோன்றுகிறது, கவற்சி (கவல்+சி) தோன்றுகிறது.

மனக்கிடக்கை என்பதிலுள்ள கிடக்கை என்ற சொல்லின் பொருள் தெரியவில்லை. மனக்கிடக்கைக்கு உள்ளக்கருத்து என்ற பொருளைப் பெற்றோம். கிடக்கை என்பது கிடத்தல் என்னும் பொருளில் வழங்கப்படும் தொழிற்பெயர். மனத்தில் நெடுநாளாய்க் கிடந்தது மனக்கிடக்கை. இப்போது கிடக்கையின் பொருள் தெரிந்து விட்டது. ஒரு சொல்லின் வழியாக ஒன்பது சொற்களை அறிந்துகொள்ளும் எளிய வழி இஃது.

உங்களுக்கு நன்றாகவே தமிழ் தெரியும்என்றால்இவ்வாறு அறிகையில் பெரும்பாலும் பழக்கப்பட்ட சொற்களாகவே இருக்கும். ஆனால், இடையிடையே உங்கள் மொழியறிவைக் கூர்மைப்படுத்தும் அருஞ்சொற்களும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கும்.

மொழியைப் பொறுத்தவரையில் எல்லாச் சொற்களுக்கும் பொருளறிந்தவர்கள் என்று எவருமே இல்லை. புலவர் பெருமக்களேகூட எங்கேனும் ஓரிடத்தில் ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியாமல் அகராதியை நாடி வருவார்கள். அன்றேல் ஒரு சொல்லுக்கு அவர் அறிந்த பொருளுக்கும் மேலான வேற்றுப்பொருள் இருக்கிறதா என்பதையும் தெளிவு பெறத் துணிவார்கள். அதனால் ஒரு சொல்லின் பொருள் வழங்கீட்டுக்கு முடிவே இல்லை என்று கூறலாம். சொற்களோடும் அவற்றின் பொருள்களோடும் தொடர்ந்து குடித்தனம் நடத்தியே ஆகவேண்டும்.

(தொடரும்)

நீங்களும் பத்திரிகையாளராக ஆசையா?

தீபத்திற்கு எழுதுங்கள்...

உங்கள் பிரதேச, சமூக, அரசியல், நிர்வாக மற்றும் பொது விடயங்கள் எதுவானாலும் எழுதுங்கள்...

இளையவர்களும் தயக்கமின்றி இணையுங்கள்

0768255562 0214927562 deepamdesk@gmail.com

சமூக வலைத்தளங்களில் /deepamlive



Tweet

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

Some people hack my account. Diaspora tamil group dont like LTTE secrets. my account safe now. I will continue my duty to sri lankan people.

12:28 · 26 Nov 18

7 Retweets 69 Likes

Tweet

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

அம்மான் வாக்கு தப்பாது. 😎

15:21 · 27 Oct 18

1 Retweet 8 Likes

Vinayagamoorthy Mural...
143 Tweets

Tweets | Tweets & replies | Media | Likes

Vinayagamoorthy Muralitharan ... 22 Nov
2000-2005 கால கட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அமேரிக்க அரசியல்வாதி றிச்சாட் ஆர்மிடேஜ்,பிரித்தானிய புலனாய்வுத்துறை mi6 மற்றும் @officialunp முக்கிய புள்ளிகளுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தார்.
இது விசாரணை செய்யப்படவேண்டும்.

4 2 9

Vinayagamoorthy Muralitharan retweeted
Vinayagamoorthy Muralitharan ... 20 Nov
Replying to @ananthysasi @PresRajapaksa and @PodujanaParty
அரசியலில் உங்களுக்கு என்னும் அனுபவம் போதாது. சரியான தலைமை இல்லாமல் தவிக்குறது வட மாகாணம்.

7 1 2

Vinayagamoorthy Muralitharan ... 20 Nov
My 2015 speech in the parliament a... @officialunp history.

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

அண்ணன் தலைவர் என அறிந்திருப்பீர்கள் பார்த்திருப்பீர் பழகியிருப்பீர். ஆனால் ஒரு சிலரே வேலுப்பிள்ளை பிரபாகரனை ஆழ்மனதால் உணர்ந்து அவன் உயிரோடு கலந்திருப்பர். அவருக்கு தெரியும் நான் யாரென.

19:31 · 24 Sep 18

பிரதமர் @PresRajapaksa சந்திப்பின் போது.

# புலி வருது நாடகம்



Tweet

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

அம்மான் வாக்கு தப்பாது. 😎

15:21 · 27 Oct 18

1 Retweet 8 Likes

Vinayagamoorthy Mural...
143 Tweets

Tweets | Tweets & replies | Media | Likes

I write things about violence & violence prevention. Words in @AJEnglish @newsdeepl...

Show more

Vinayagamoorthy Muralitharan ... 26 Nov
Some people hack my account. Diaspora tamil group dont like LTTE secrets. my account safe now. I will continue my duty to sri lankan people.

19 7 67

Vinayagamoorthy Muralitharan ... 24 Nov
Good. Sri lanka govarnment must ban this

Tamil Guardian @TamilGuardian
Sri Lanka police apply for Maaveerar Naal ban in Koppay tamilguardian.com/content/sri-la... #Tamil #lka



Tweet

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

தமிழ் மக்களே எமக்கு கிடைக்கும் அடுத்த சந்தர்ப்பம் இது. தவறாமல் தலைவர் மகிந்த ராஜபக்ச பின் நிற்போம். எம் எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்.

13:38 · 29 Oct 18

Tweet

Vinayagamoorthy Muralitharan
@ColKaruna

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்புனர்களுடன் பேச்சு வார்த்தை தொடந்த வண்ணமே உள்ளது. பல உறுப்பினர்களை கட்டுப்படுத்தும் புலம்பெயர் முக்கியஸ்தருடன் நாளை பேச்சு.

21:07 · 04 Nov 18

9-ம் பக்க தொடர்ச்சி...

விக்கினேஸ்வரனோ செய்யவில்லை.

இதனைச் செய்யாமல் அதிகாரம் இல்லை என்று சொல்லலாமோ. எதற்கும் என்ன விளக்கம் என்று அரசியல் யாப்பிலே சொல்லியிருக்கின்றது. அதாவது எதுவானாலும் உச்ச நீதிமன்றம் மட்டும் தான் எதனையும் சொல்லாம் என்றும் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலமைச்சராக இருந்து தானே அதிகாரம் இல்லை என்று சொல்லுகின்றீர்கள். உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்து சொல்லவில்லைத்தானே. ஊங்களுக்கு ஒரு பிரச்சனை என்றவுடன் நீதிமன்றம் போகின்றீர்கள் தானே. அதனையும் மாகாண சபையில் சொல்லிப் போட்டு இருக்கலாம் தானே.

உங்களுக்கு தனிப்பட்ட ரீதியாக ஒரு பிரச்சனை அல்லது உங்களுக்கு தனிப்பட்ட ரீதியாக ஒரு வாகனம் வேண்டும் அல்லது அது தரவில்லை என்றால் அதற்கான சட்டப் பிரச்சனைகள் தொடர்பில் எல்லாம் சட்ட ரீதியாகக் கதைக்கின்றீர்கள் தானே. ஆகவே நான் சொல்ல வருவது என்னவெனில் ஒரு சட்டத்தை சட்ட புர்வமாக அனுக வேண்டும். அந்தச் சட்டதிலும் பிழைகள் இருக்கின்ற போது அதனை போராட்ட புர்வமாக அனுக வேண்டும்.

நர்ங்கள் இளைஞர்களாக இருக்கின்ற காலத்தில் இளைஞர்கள் எல்லாம் ஆயுதம் தூக்கித் தான் போராட வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். ஆனால் உங்களுக்கு இப்ப அப்பிடி இல்லை. இன்றைக்கு நிங்கள் பாராளுமன்றத்திற்கு முன்னால் சென்று 24 மணி நேர உண்ணாவிரதம் இருங்கள் பார்ப்போம். அது உலகச் செய்தி. சும்மந்தருக்கு யாராவது அடிக்க இயலுமா. பிரம்பு தூக்க இயலுமா. இது தொடர்பில் ஐ.நா சபையில் விவாதம் நடக்கும். அவ்வளவு முக்கியத்துவம் பெற்ற ஆட்கள் நீங்கள். அப்படி உங்கள் முக்கியத்துவத்தை உணர்ந்து நீங்கள் அதை ஏதாவது செய்துள்ளீர்கள். ஆனால் நீலப் பெட்டிக்குள் இருந்து காசுவருகிறதா பச்சைப் பெட்டிக்குள் இருந்து காசு வருகிறதா என்று தான் பார்த்துக் கொண்டு நிற்கின்றீர்கள்.

உங்களுடைய சர்வதேச முக்கியத்துவத்தை பிராந்திய முக்கியத்துவத்தை உங்களுக்கு ஒன்று என்டவுடன் இந்தியா நிற்கிறது. இந்தியா கூப்பிடுகிறது. அமெரிக்கா கூப்பிடுகிறது. ஆதில் எதனையாவது மக்களின் நன்மைக்காக பாவிக்கின்றீர்களா. ஜெனிவாவில் சென்று ஐக்கிய தேசியக் கட்சியை காப்பாற்றவும் இப்ப ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றவும் நிற்கின்றீர்கள் தானே. அதே சர்வதேசத்தை ஏன் மக்களுடைய பிரச்சனைகள் விடயத்தில் கொண்டுவரவில்லை. இந்த ஆட்சிவந்த பின்னர் சாதாரண சட்டங்கள் எல்லாம் எத்தனையோ தமிழர்களுக்காக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அது ஒன்றையும் நிறைவேற்றவில்லை. அதனை விடுத்து சந்திரமண்டலத்தைப் பிடித்து தருவது போன்று ஒற்றையாட்சிக்குள் சமஷ்டியை எடுத்து தாறம் என்று வர முடியாத ஒன்றை காட்டினீர்கள். இப்ப விக்கினேஸ்வரனின் குழுவாக இருந்தாலும் கூட்டமைப்பு முவாக இருந்தாலும் எல்லாரும் தமிழனுக்கு வர முடியாத ஒன்றைத் தான் காட்டுகின்றனர். இவ்வாறு தமிழனுக்கு எதவும் வர முடியாத ஒன்றை நீங்கள் காட்டுவதன் நோக்கத்தைப் பார்த்தால் தமிழனுக்கு எதுவும் வரக் கூடாது என்கிற நோக்கத்தை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள் என்று தான் நாங்கள் கருத வேண்டியிருக்கிறது.




# தோனியை விளாசிய கம்பீர்!

இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த தொடக்க வீரராக கோலோச்சியவர் கௌதம் கம்பீர். கம்பீர், சேவாக், சச்சின் என அப்போது முன்வரிசை பலமாக இருந்தது. சச்சின், சேவாக்கிற்கு இணையாக கம்பீரும் ரன் குவித்து வந்தார். நீண்டகாலமாக அணியில் இடமில்லாமல் இருந்த கம்பீர், கடந்த 4ம் திகதி கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். தனது கடைசி ரஞ்சிக்கோப்பை போட்டியில் சதம் அடித்து அனைவரையும் வியக்க வைத்தார்.

கம்பீரின் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்து வைத்ததிலும், குறிப்பாக இந்திய அணிக்குள் இடம் இல்லாமல் செய்தவகையிலும் தோனிக்கு குறிப்பிட்ட பங்கு உண்டு. இது உண்மை என்ற ரீதியில் கம்பீர், ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பகீர் பேட்டி அளித்துள்ளார்.

"2012ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் சிபி சீரிஸ் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடந்தது. இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் சச்சின், சேவாக், தொடக்க ஆட்டக்காரர்களாகவும், நான் 3வது வீரராகவும் களம் இறங்கினேன்.

சச்சின், சேவாக் போன்ற ஜாம்பவான்கள் ரன்கள் குறைவாக எடுக்கிறார்கள். அதனால், நல்லவிதமான ரிசல்ட் கிடைக்கவில்லை. இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க இயலவில்லை என்று கூறி அவர்களையும், என்னையும் ஓரம்கட்ட தோனி தீர்மானித்தார்.

அதனால், சேவாக்குடனும், சச்சினுடன் இனிமேல் கம்பீரை விளையாட அனுமதிக்க முடியாது. நானும் 3 பேருடன் விளையாட முடியாது என்று தோனி கூறியது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

2015ம் ஆண்டு உலகக்கோப்பையை நோக்கி அணியை நகர்த்த வேண்டும் என்று தோனி தெரிவித்தார். ஆனால், இந்தப் போட்டித் தொடரிலேயே தோனி 2015ம் ஆண்டு உலகக்கோப்பைக்கான அணியைத் தேர்வு செய்ய முடிவு செய்ததுதான் எனக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. எனக்கு மட்டுமல்ல எந்த கிரிக்கெட் வீரருக்கும் அதிர்ச்சியாகத்தான் இருக்கும்.

2015ம் ஆண்டு உலகக்கோப்பையில் நீ விளையாடமாட்டாய் என்று 2012ம் ஆண்டு ஒருவர் சொல்வதை இதற்கு முன் கேள்விப்படவே இல்லை. என்னைப் பொறுத்தவரை சிறப்பாக விளையாடி ரன்கள் சேர்த்தால், நிச்சயம் அணியில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

உங்களுக்கு ரன் குவிக்கும் திறமை இருந்து, களத்தில் திறமையில்லா. விட்டால், நீங்கள் விரும்பும்வரை விளையாடலாம். இதுதான் அவுஸ்திரேலியாவில் எங்களிடம் கூறப்பட்டது. நாங்கள் 3 பேரும் ஒன்றாக விளையாட முடியாது என்று தெரியவந்தது.

தொடரின் தொடக்கத்தில் நாங்கள் 3 பேரும் ஒன்றாக விளையாடவில்லை. எங்களில் ஒருவருக்கு மட்டுமே வாய்ப்பு கிடைத்தது. ஆனால், சில தவிர்க்க முடியாத சூழலில் எங்கள் 3 பேருடன் தோனி விளையாட முன்வருவார்.

நான் கேட்கிறேன், நீங்கள் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அதில் தெளிவாக இருக்க வேண்டும். அதில் பின்வாங்கக்கூடாது. ஏற்கெனவே முடிவு செய்துவிட்ட ஒன்றில் இருந்து வாபஸ் பெறக்கூடாது.

எங்கள் 3 பேருடன் விளையாட மாட்டேன் என்று தோனி முடிவெடுத்தார். அதன்பின், எங்கள் 3 பேருடன் விளையாட முடிவு செய்தார். இதில் இருந்து தோனி முதலில் எடுத்த உண்மையான முடிவு தவறானதா அல்லது 2வது எடுத்த முடிவு தவறானதா. கப்டனாக தோனி முடிவெடுத்தார். ஆனால், அணியில் வீரர்களாக இருக்கும் எங்கள் 3 பேருக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது" என கம்பீர் தெரிவித்தார்.

2012ம் ஆண்டு சிபி சீரிஸ்முத்தரப்பு தொடரில் தோனி தலைமையிலான அணி தோல்வி அடைந்தது. அவுஸ்திரேலியாவும், இலங்கையும் இறுதிப் போட்டியில் மோதி, கோப்பையை அஸ்திரேலியா வென்றது. இந்தத் தொடரில் விராட் கோலி அதிகபட்சமாக 373 ரன்களைக் குவித்தார். கம்பீர் 308 ரன்கள் சேர்த்தார். இந்தத் தொடரில் 5 போட்டிகளில் விளையாடிய சேவாக் 65 ரன்களையும், சச்சின் 7 போட்டிகளில் விளையாடி 143 ரன்களும் சேர்த்தனர்.

# 'ஸ்லெட்ஜிங்'கில் இந்திய அணி!





அவுஸ்திரேலிய இந்திய அணிகள் மோதிய அடிலெய்ட் முதல் டெஸ்ட் போட்டியில் இரண்டு ஸ்லெட்ஜிங் சம்பவங்கள் நடந்தன. இரண்டும், இரண்டாவது இன்னிங்ஸ்களில் நடந்தவை. இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸை ஆடிக்கொண்டிருந்த சமயத்தில், அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் நதன் லயன் வீசிக் கொண்டிருந்தார். கோலி துடுப்பெடுத்தாடினார்.

ஒரு கட்டத்தில் நதன் லயன் பந்துவீசிக்கொண்டிருந்வர் திடீரென 'போர்வர்ட் டிஃபன்ஸ்' எப்படி ஆடுவது என்பது போல் கோலிக்குச் செய்து காட்டியது போல் தெரிந்தது. கோலி கண்டுகொண்டது போலும் தெரியவில்லை. இதனை ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ தன் ட்விட்டர் பக்கத்தில் படத்துடன் வெளியிட்டு கேள்விக்குறியுடன் தலைப்பிட்டது.


கடைசியில் நதன் லயன் பந்து ஒன்று ஸ்பொட்டில் பிட்ச் ஆகித் திரும்ப மட்டையின் உள்விளிம்பில் பட்டு ஷோர்ட் லெக்கில் ஏரோன் பிஞ்ச் கையில் கட்ச் ஆனது. கோலியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது, இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஒருவாறாக கோலியை எழும்ப விடாமல் அவுஸ்திரேலியர்கள் அமுக்கி விட்டனர். நதன் லயன் நடந்து கொண்டது அவ்வளவு மோசமான அளவில் அல்ல.

ஆனால், அவுஸ்திரேலியாவின் இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியாவின் ரிஷாப் பந்த் கொஞ்சம் அநாகரிகமாக நடந்து கொண்டார். விக்கெட்டுக்கு பின்னாலிருந்தபடி அவுஸ்திரேலிய வீரர்களை சீண்டியபடியிருந்தார். டெஸ்ட் போட்டியின் கடைசி நாளன்று அவுஸ்திரேலிய பின்வரிசை வீரர்கள் போராடி, அணியை வெற்றிக்கு அருகில் அழைத்து வந்தனர். இதனால் எரிச்சலடைந்த, விக்கெட் கீப்பர் ரிஷாப் புந்த் அவுஸ்திரேலிய வீரர்களை வம்புக்குஇழுக்கும்வகையில்பேசினார். அஸ்வின் பந்துவீச, அவுஸ்திரேலிய வீரர் கம்மின்ஸ் துடுப்பெடுத்தாடினார். அப்போதும், பின்னால் இருந்த ரிஷப் பந்த் கிண்டலாகவும், கம்மின்ஸை சீண்டுவது போலவும் பேசினார்.


ஸ்டம்பில் இருந்த மைக்கை வர்ணணையாளர்கள் ஒன் செய்ததில் இது அம்பலமானது.


24
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் படைக்கும் பிரெஞ்சுப் படைக்கும் வான்வெளியில் பயங்கர மோதல். பிரெஞ்சு படையின் ஒரு அணிக்குத் தலைமைத் தாங்கிய ஹெலன், ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தினான். பதிலுக்கு, ஹெலனின் விமானத்தை ஜெர்மன் விமானி சுட... பழுதடைந்த விமானத்திலிருந்து பாராசூட் மூலம் தப்புகிறான் ஹெலன். தரையிறங்கிய ஹெலன், பிரஞ்சுப் படையினரிடம் சிக்குகிறான். ஹெலன் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்தவன்தானா என்று பரிசோதனை செய்கிறார்கள்...
பாராசூட் உதவியுடன் தரையிறங்கிய ஹெலன், விரைவாக நடக்கத் தொடங்கினான். அப்போது, பிரெஞ்சு வீரர்கள் அவனைச் சுற்றி வளைத்து விசாரணை நடத்தினார்கள்.
நீ பிரெஞ்சு படையைச் சேர்ந்தவன் என்பதற்கு அடையாள 'எண்' என்ன கூறு! வேறு அடையாளங்களையும் காட்டு!
ஜெர்மனி படை வீரர்கள், பிரெஞ்சு உடையணிந்து நாச வேலையில் ஈடுபட்டுவிடக் கூடாது என்பதால், தீவிர சோதனையை மேற்கொண்டார்கள்.
நீ கூறும் பதில்கள் திருப்தி அளிக்கிறது. இருப்பினும் நாங்கள் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்புகொண்டு கேட்போம். நீ போலியானவன் என்றால், கதை முடிந்தது!
ரோந்து ராணுவ வீரர்கள் தலைமைக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவித்து விபரம் கேட்க, ஹெலன் பிரெஞ்சு விமானி என்பது உறுதியானது.
இவன் நமது விமானப் படையைச் சேர்ந்தவனே! இவனை அழைத்து வரச்சொல்லி உத்தரவு போட்டுள்ளார்கள். உடனே ஒப்படைக்க வேண்டும்!
ஹெலனை அழைத்துக்கொண்டு ராணுவ ஜீப் புறப்பட்ட அதேவேளை, மற்றொரு பிரெஞ்சு விமானம் தீப்பற்றிய நிலையில் தரையிறங்கியது.
ஹேய்... இது நம் படையைச் சேர்ந்த விமானம்!
இது தள்ளாடி வருவதைப் பார்த்தால்... விமானி என்ன ஆனார்?
விமானம் கரடுமுரடான பகுதியில் தரையிறங்கி சறுக்கிக்கொண்டு சென்றது.
ஜீப்பை நிறுத்து!



ஒருவேளை விமானி உயிரோடிருந்தால் காப்பாற்றலாம்!
வேண்டாம்! விமானத்தில் குண்டுகள் இருந்தால் அது வெடித்துச் சிதறும்!
ஹெலன் கூறியதுபோலவே வெடித்துச் சிதற, அனைவரும் தூக்கி வீசப்பட்டனர்.
ஆனால், காயமின்றி தப்பினர்.
இதில் விமானி இல்லை. பாராசூட்டில் உயிர் தப்பியிருக்கலாம். இனி ஒரு நிமிடமும் தாமதிக்க வேண்டாம். என்னை விமானப் படைப் பிரிவில் ஒப்படைத்துவிடுங்கள்!
ஜீப்பை நிமிர்த்தி மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர். இதற்கிடையே, வானில் வட்டமடித்த ஜெர்மனி விமானம், தாழ்வாகப் பறந்துவந்து தாக்குதல் நடத்தியது.
ஜீப்பை ஒரே திசையில் ஓட்டாதே! இடம் மாற்றி ஓட்டு. விமானிகள் நம்மை குறிவைக்க இடம் கொடுக்காதே!
சார்! ஜெர்மனி விமானங்கள் நம் நகரை நோக்கி நகர்ந்துவருகிறது. கப்பற்படையும் களத்தில் இறங்கியாக வேண்டும்!
ஹெலன் அடையாள அட்டையைக் காண்பித்து மீண்டும் விமானம் ஓட்ட ஒப்புதல் பெற்றான்.
அனைத்து விமானங்களையும் இயக்க, விமானிகளுக்கு உத்தரவிடப்பட்டது.
சீக்கிரம்! நமது விமானத் தளத்துக்குள் ஜெர்மனி விமானம் புகுந்தால், நமது விமானங்கள் அனைத்தும் நாசமாகிவிடும்!
(தொடரும்...)




① ஒவ்வொரு துளி நீரும் முக்கியம்... ஒழுங்கா குழாயில் போய்ச் சேரணும்... அதுக்கு நீங்க வழிகாட்டி உதவணும்!




② 1 முதல் 26 வரை புள்ளிகளை இணைச்சுக்கோ... வரும் நண்பனைக் கையில் ஏந்திக்கோ!



③ மலர்களில் இதழ்களின் எழுத்துகளைச் சுற்றிச் சுற்றிப் படியுங்க... சரியான ஆங்கில வார்த்தைகளைக் கண்டுப்பிடிச்சுச் சொல்லுங்க!



④ நான்கு நான்கு அம்புகளாகப் பிரிச்சுக்கோ... நான்கும் நான்கு திசைகளில் இருக்கணும் பார்த்துக்கோ!




⑤ கூட்டிக் கழிச்சுக் கணக்குப் போடு... அதற்கு ஏற்ற வண்ணங்களைத் தீட்டிப் பாரு!

## தெரியுமா?

உலகின் சிறிய கடல், ஆர்ட்டிக்.

## விடைகள்

①



③ 1.BIRDHOUSE 2.BUTTERFLY 3. FRESHNESS 4.NESTLINGS 5.GARDENING 6.APRIL FOOL 7.SPROUTING 8.DRAGONFLY 9. DANDELION


④



நீங்கள் கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் அறுசுவை உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திட...

# மகிழ்ச்சி உணவகம்

கரடிபோக்கு சந்தி, கிளிநொச்சி 0765331798





வாடிகையார்கள் மற்றும் நண்பர்களுக்கு
இனிய நத்தார் புதுவருட பண்டிகை
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள்...

# VINO BOOK CENTER

பாடசாலை மாணவர்களுக்கான அனைத்து உபகரண பொருட்க்களை மலிவொன விலையில் பெற்றிடவும், மற்றும் அலுவலகத்திற்க்கு தேவையான பொருட்க்கள், தினசரி பத்திரிகைகள், வாரமலர் பத்திரிகைகள், இத்துடன். கையடக்க தொலைபேசிக்கான ரீலோட்களையும் செய்து கொள்ளலாம்.

Viber/fax-0094212290280
Hotline-0779989911

தபால் அலுவலக வீதி
முல்லைத்தீவு

தனது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் மற்றும்
புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள்...

# சென் யூட் மல்ரி சென்டர்



இப்போது அனைத்து பொருட்களுக்கும் மலிவு விற்பனையில்...
விசேடமாக அனைத்து விதமான பாடசாலை பொருட்களுக்கு
5% தொடக்கம் 30% விலைக் கழிவுகள் வழங்கப்படும் மற்றும்
அனைத்து பொருட்களையும் மலிவான விலையில் பெற்றிடலாம்

முல்லை பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு. தொடர்புக்கு: 0770041445







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிரட் நிறுவனத்தால்
நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 16.12.2018 அன்று வெளியிடப்பட்டது.